# சட்டக்கதிர்

சட்ட மாத இதழ்

SATTAKADIR TAMIL MONTHLY

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அறங்கூறாயங்கள் அறமே செய்யட்டும்"

ஏப்ரல் 2026 | சித்திரைத் திங்களிதழ் | விலை ரூ.75/-

Vol - 34 | April - 2026 | Issue - 6 | Price Rs.75/-

Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026


SATTAKADIR

## சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக மாண்புமிகு நீதிபதி திரு.சுஷ்ருத் அரவிந்த தர்மாதிகாரி பதவியேற்பு




சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக
மாண்புமிகு நீதிபதி திரு.சுஷ்ருத் அரவிந்த தர்மாதிகாரி பதவியேற்பு:
ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி பிரமாணம் செய்து வைத்தார்

## முக்கிய தீர்ப்புகள் - சட்ட விளக்கங்கள்


ஆசிரியர் : டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

www.sattakadir.com http://epaper.sattakadir.com


VIT
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)
FIND YOUR FUTURE
Education opens up the mind and allows you to improve your life in so many ways.
At VIT, we believe it is crucial to provide students with an environment that positively influences their thoughts, stimulates their interest and encourages learning in different settings. Our programmes are structured in line with the changing times. Our faculty and infrastructure are geared to be future ready. And, our students learn and imbibe lifelong values that equip them to be futuristic.
VIT
VELLORE INSTITUTE OF TECHNOLOGY
www.vit.ac.in vituniversity VIT_univ vellore-institute-of-technology vellore_vit VITUniversityVellore

# சட்டக்கதிர்

## தமிழ்நாடு அரசு விருது பெற்ற இதழ்

ஏப்ரல் 2026 http://epaper.sattakadir.com சித்திரைத் திங்கள் இதழ் 2026


## பொருளடக்கம்


1. மாண்புமிகு தலைமை நீதிபதி திரு.சுஷ்ருத் அரவிந்த தர்மாதிகாரி அவர்களை வரவேற்று வாழ்த்துகிறோம். – தலையங்கம் 5

2. இந்திய தலைமை தணிக்கையாளர் பணியில் சேர, கற்றல் குறைபாடு மற்றும் மனநல பாதிப்புடைய விண்ணப்பதாரர்களுக்கும் உரிமை உண்டு – இந்திய உச்சநீதிமன்றம் 7

3. குழந்தை பராமரிப்பில் பெற்றோரின் கடமை – சென்னை உயர்நீதிமன்றம் 13

4. திறன்வாய்ந்த மருத்துவரை தொழிற்சாலை தொழிலாளர் போல் நடத்தக் கூடாது – சென்னை உயர்நீதிமன்றம் 22

5. வழக்கும் நடைமுறையும் – சென்னை உயர்நீதிமன்றம் 27

6. கால வரம்பும் அதைக் கணக்கிடும் முறையின் நெறிமுறையும் – சென்னை உயர்நீதிமன்றம் 33

7. அரசு போக்குவரத்து கழகங்களில் ஓட்டுனர், நடத்துனர் பணிக்கு தேர்வானவர்களிடம் அந்தப் பணிதான் வாங்கப்பட வேண்டும் – இதர பணிகளில் ஈடுபடுத்தக் கூடாது – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை அமர்வு) 43

8. வழக்கின் குறைபாடுகள் சில எந்த நேரத்திலும் திருத்தப்படலாம் – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்) 46

9. அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய பின்னடைவு, தானாகவே மருத்துவ அலட்சியத்தைக் குறிக்காது – தீர்ப்புரை 49

10. விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ளபோது, புகுந்த வீட்டு வாழ்க்கை முறையைப் பெற மனைவிக்கு உரிமை உண்டு. – தீர்ப்புரை 52

11. பிணை உத்தரவுகளை ஒரு குறிப்பிட்ட முறையில் தான் எழுத வேண்டும் என்று விசாரணை நீதிமன்றங்களுக்கு எந்தவொரு அரசியலமைப்பு நீதிமன்றமும் உத்தரவிட முடியாது – தீர்ப்புரை 54

12. சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்தல், ‘‘குற்றவியல் வழக்குகளைத் தீர்மானிப்பதில் ஒரு முக்கியமான அம்சம்’’ – நீதிபதி திரு.ஏ.வி.சந்திரசேகர் 57

13. வழக்கறிஞர்களுக்குத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்துவதிலிருந்து விலக்கா? உச்ச நீதிமன்றம் ஏன் தலையிட்டு இந்த மோதலை தீர்க்க வேண்டும்? 62 – முனைவர் அஜய் குமார் பாண்டே

14. 1956ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம் – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 67

15. 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம் – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 70

16. 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மாற்றுத் திறனுடைய நபர்களுக்கான நல வாரியச் சட்டம் – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 73

17. தேர்தல்கள் தொடர்புடைய குற்றங்களுக்குரியது – வழக்கறிஞர் வெ. முருகன், எம்.ஏ.,பி.எல். 80

## சட்டக்கதிர்

*ஆசிரியர் வெளியிடுபவர்:*
முனைவர் வே.இரா.சே.சம்பத்

*சிறப்பு ஆலோசனைக் குழு:*
*மூத்த வழக்கறிஞர்கள்:*
திரு.ஆர்.காந்தி
திரு.ஆர்.விடுதலை
திரு.ஆர். சண்முகசுந்தரம்
டாக்டர் எ. தியாகராஜன்

*சட்ட/தமிழ் வல்லுநர்கள்:*
டாக்டர் ஆர். மீனாட்சி சுந்தரம்
முனைவர் மு. முத்துவேலு

*வழக்கறிஞர்கள்:*
திரு. டி.வீரசேகரன், திரு.வி.இரவி
திரு. சரவணன் தனபால், திரு.எஸ். நாகநாதன்
திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி
திருமதி டி. ஸ்ரீதேவி
திரு. எஸ். பாலமுருகன்

*சென்னை உயர்நீதிமன்றத் தொடர்பாளர்:*
திரு.ஏ.என்.புருஷோத்தம், வழக்கறிஞர்

*டெல்லி உச்சநீதிமன்றத் தொடர்பாளர்:*
திருமதி இந்திரா, வழக்கறிஞர்

*மொழி பெயர்ப்பாளர் குழு:*
திருமதி ஓ.பா.சாந்தி, மதுரை திரு.எஸ்.சம்பத்
திரு.து. முத்துசாமி, வழக்கறிஞர்
திரு.பா.ஞானசேகரன்

*அலுவலகப் பணிக்குழு:*
முனைவர் ச. அரவிந்தன்
முனைவர் ச. அழகிரி
திரு. டி.கே.எஸ். மணிவண்ணன்

*வடிவமைப்பு:* வாசன் அச்சகம், சென்னை

| சந்தா விவரம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | ₹ 75 | US $ 3 |
| ஆண்டுச் சந்தா | ₹ 900 | US $ 25 |
| வாழ்நாள் சந்தா | ₹ 10,000 | US $ 250 |
| காப்பாளர் சந்தா | ₹ 25,000 | US $ 500 |

சந்தாத் தொகையைச் ''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque)**, வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சந்தாத் தொகையைப் பணவிடை **(Money Order)** மூலமாக அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரத்திற்கான விவரத்தையும் தொகையையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்க.



**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
தொலைபேசி 91-44-24953915 / 24620198
தொலைநகல் 91-44-24959515
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


## சட்டக்கதிர் வெளியீடுகள்

சட்டக்கதிர் ஆண்டுத் தொகுப்பு
(12 இதழ்களைக் கொண்ட தொகுப்பு) ரூ.1200/-

நீதிமன்றங்களில் தமிழ் ரூ.500/-

தமிழ்நாட்டில் நீதிமுறைகள் (அச்சில்) ரூ.500/-

சட்டவல்லுனர் பார்வையில் அண்ணா ரூ.500/-

தமிழர் தமிழ்நாடு சமூக பொருளாதார வளர்ச்சி ரூ.500/-

சட்டமும் சமுதாயமும் (அச்சில்) ரூ.150/-

சென்னையிலிருந்து உலகை நோக்கி ரூ.200/-

உன்னுள் என்னைப் பார் ரூ.150/-

உலகெங்கும் கலைஞர் ரூ.300/-

"International Conference of Tsunami, Disaster Management and Coastal Development Report" (English) Rs.500/-

**''சட்டக்கதிர்''** என்ற பெயருக்குக்
காசோலை **(Cheque)**,
வங்கி வரைவுக் கேட்போலை **(DD)**
மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி
நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


**சட்டக்கதிர் QR CODE
ஸ்கேன் செய்து
சட்டக்கதிர் ஆண்டு சந்தா
செலுத்தலாம்.
சட்டக்கதிர் ஆண்டு சந்தா
செலுத்தி தடங்கலின்றி
இதழ்கள் கிடைக்கப்
பெறுவீர்!**


# சட்டக்கதிர்

"முன்னேற்றமே எங்கள் பேச்சு – உயர்
முத்தமிழே எங்கள் மூச்சு"

சித்திரைத் திங்கள் இதழ்

சட்டம் – 34 ஏப்ரல் 2026 கதிர் – 6

## மாண்புமிகு தலைமை நீதிபதி திரு.சுஷ்ருத் அரவிந்த தர்மாதிகாரி அவர்களை வரவேற்று வாழ்த்துகிறோம்



சென்னை உயர்நீதிமன்றத்தின் 55–வது தலைமை நீதிபதியாக மாண்புமிகு நீதிபதி திரு.சுஷ்ருத் அரவிந்த தர்மாதிகாரி அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

சென்னைப் பெருநகரின் வரலாற்றுச் சிறப்புமிக்க உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த மாண்புமிகு மணிந்த்ர மோகன் ஸ்ரீவத்சவா அவர்களின் பணி ஓய்வைத் தொடர்ந்து, அந்தப் பொறுப்புக்கு உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் அடங்கிய கொலீஜியம் குழுவால் மாண்புமிகு நீதிபதி சுஷ்ருத் அரவிந்த தர்மாதிகாரி அவர்கள் பரிந்துரைக்கப்பட்டார். மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரப்பூர்வ உத்தரவிற்கிணங்க, அவர் கடந்த 2026 மார்ச் 06 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தின் 55–வது தலைமை நீதிபதியாக முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார்.

சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் 1966–ஆம் ஆண்டு ஜூலை 8–ஆம் தேதி திரு. அரவிந்த் எச். தர்மாதிகாரி மற்றும் திருமதி. சுபா தர்மாதிகாரி இணையருக்கு மகனாகப் பிறந்தவர் சுஷ்ருத் அரவிந்த தர்மாதிகாரி. தனது இளமைக் கல்வியை முடித்த இவர், நாக்பூர் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் மற்றும் சட்டத்தில் இளங்கலைப் பட்டங்களைப் பெற்றார். சட்டப் படிப்பை முடித்த

கையோடு, 1992–ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றத்தின் ஜபல்பூர் கிளையில் ஒரு வழக்கறிஞராகத் தனது சட்டப் பணியைத் தொடங்கினார்.

அவரது திறமையான வாதத்திறனும், சட்ட நுணுக்கங்களை நுட்பமாகக் கையாளும் முறையும் அவருக்குப் பல உயரிய பொறுப்புகளைத் தேடித் தந்தன. குறிப்பாக, 2000–ஆம் ஆண்டு முதல் 2015–ஆம் ஆண்டு வரை இந்திய ஒன்றிய அரசின் நிலை வழக்கறிஞராக மிகச் சிறப்பாகப் பணியாற்றினார். வருமான வரித்துறை, இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் பி.எஸ்.என்.எல் போன்ற நாட்டின் முதன்மையான நிறுவனங்கள் மற்றும் துறைகளுக்காக நீதிமன்றங்களில் முன்னின்று வாதிட்டார். மேலும், உலகையே உலுக்கிய போபால் நச்சுவாயு விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல ஆணையராகவும் பணியாற்றி, பாதிக்கப்பட்டவர் களின் உரிமைகளுக்காகத் தனது பங்களிப்பை வழங்கினார்.

நீண்ட கால வழக்கறிஞர் பணிக்குப் பிறகு, 2016–ஆம் ஆண்டு ஏப்ரல் 7–ஆம் தேதி மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக உயர்த்தப்பட்டார். அங்கு அவரது நேர்மையான மற்றும் விரைவான நீதி வழங்கும் திறனால், 2018–ஆம் ஆண்டு மார்ச் 17–ஆம் தேதி நிரந்தர நீதிபதியாக நியமிக்கப்பட்டார். பின்னர், 2025–ஆம் ஆண்டு ஏப்ரல் 23–ஆம் தேதி கேரள உயர்நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அங்கு பணியாற்றிய காலத்தில், பல்வேறு முக்கிய வழக்குகளைக் கையாண்ட இரு நீதியர் அமர்வுகளில் அவர் இடம்பெற்றிருந்தார். குறிப்பாக, பெரும் விவாதத்திற்குள்ளான ‘தி கேரளா ஸ்டோரி 2’ திரைப்படத்தின் வெளியீட்டிற்கு எதிரான மனுக்களை விசாரித்த அமர்வில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

உச்ச நீதிமன்ற கொலீஜியம் குழுவின் ‘முன்கூட்டிய இடமாற்றக் கொள்கை’ அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அவர் அனுப்பப்பட்டது, அவர் அதிகாரப்பூர்வமாகப் பதவியேற்பதற்கு முன்பே இங்கிருக்கின்ற நீதிமன்ற நடைமுறைகளையும், வழக்குகளின் தன்மைகளையும் நன்கு புரிந்துகொள்ள ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது. மிக நீண்ட பாரம்பரியமும், சமூக நீதிக்கான வரலாற்றுத் தீர்ப்புகளையும் வழங்கிய பெருமை மிக்க சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள நீதிபதி சுஷ்ருத் அரவிந்த தர்மாதிகாரி அவர்களின் பதவிக் காலம், நீதித் துறையின் மாண்பினை மேலும் உயர்த்துவதோடு, அடித்தட்டு மக்களுக்கான நீதியை உறுதி செய்யும் என்பதில் ஐயமில்லை.

அறிவும், அனுபவமும் மிக்க புதிய தலைமை நீதிபதி அவர்களை ‘சட்டக்கதிர்’ இதழ் இதயம் கனிந்து வரவேற்பதோடு, அவரது நீதிப்பணி சிறக்கவும், தமிழ்நாடு–புதுச்சேரி மாநிலங்களவை நீதித் துறை நிர்வாகத்தை தலைமை ஏற்று நடத்தவும் மக்களின் எதிர்பார்ப்புகளை விரைந்து தீர்ப்புக்களை வழங்கிடவும் தமிழ்நாட்டின் ஆட்சி மொழியான தமிழை உயர்நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்களில் நிலை நாட்டிடவும் வேண்டுகோளுடன் வாழ்த்தி வரவேற்கிறோம்.

– ஆசிரியர்

# இந்திய தலைமை தணிக்கையாளர் பணியில் சேர, கற்றல் குறைபாடு மற்றும் மனநல பாதிப்புடைய விண்ணப்பதாரர்களுக்கும் உரிமை உண்டு

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.விக்ரம் நாத்**
**மாண்புமிகு நீதிபதி திரு.சந்தீப் மேத்தா**
**C.A.No. 3348/2026**
**SLP (C) No.9798/2026/ 12/03/2026**
**(2026 Livelaw (SC) 237)**

சுதன்சு கர்தம் ...மேல்முறையீட்டாளர்

–எதிர்–

இந்திய தலைமை தணிக்கையாளர் மற்றும் சிலர் ...எதிர்மனுதாரர்கள்

## தீர்ப்பு

1. தரப்பினர்கள் கேட்டறியப்பட்டது.

2. வழக்கில் தங்களை இணைத்துக் கொள்ளக் கோரும் மனு அனுமதிக்கப்படுகிறது.

3. மேல்முறையீடு செய்ய அனுமதி வழங்கப் படுகிறது.

4. டெல்லி உயர்நீதிமன்றத்தால் 2023ஆம் ஆண்டின் நீதிப்பேராணை மனு (இ) எண் 5904ல், 2025 மே 29–ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து இந்தச் சிறப்பு விடுப்பு மேல்முறையீட்டு மனு எழுகிறது.

5. 2018–ஆம் ஆண்டில், எதிர்மனுதாரர் எண் 2 – பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசின் கீழ் உள்ள பல்வேறு அமைச்சகங்கள்/ துறைகள்/அமைப்புகளில் உள்ள பல்வேறு குரூப் 'ஆ' மற்றும் குரூப் 'இ' பணியிடங்களை நிரப்புவதற்கான செயல்முறையைத் தொடங்கியது. 2019 டிசம்பர் 27 அன்று தீர்மானிக்கப்பட்ட தற்காலிக காலியிடப் பட்டியலின்படி, ஒருங்கிணைந்த பட்டதாரி அளவிலான தேர்வு–2018 ற்கான காலியிடங்கள் அறிவிக்கப்பட்டன. அதில், இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் அலுவலகத்தில் 'தணிக்கையாளர்' பதவிக்கு, 'இதர மாற்றுத்திறனாளிகள்' பிரிவின் கீழ் இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டன.

6. இந்த வழக்கின் எதிர்மனுதாரர் எண் 3–ஆன திரு.அமித் யாதவ், பணியாளர் தேர்வாணையத்தின் 2018–ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பட்டதாரி அளவிலான தேர்வில், 'தணிக்கையாளர்' பதவிக்கு விண்ணப்பித்திருந்தார். அவர் இத்தேர்வில் 'மாற்றுத்திறனாளிகள் –இதர' பிரிவின் கீழும், 'இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு' பிரிவின் கீழும் விண்ணப்பித்திருந்தார்.

7. அவர், இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மாற்றுத் திறனாளிகளுக்கான அதிகாரமளித்தல் துறையால் 2018 மே 2–ஆம் தேதியன்று வழங்கப் பட்ட செல்லுபடியாகும் ஊனமுற்றோர் சான்றிதழைப் பெற்றிருந்தார். அதன்படி, அவர் 55% பாதிப்பு அளவு கொண்ட 'மனநலக் குறைபாட்டால்' பாதிக்கப்பட்டிருந்தார்.

8. 3வது எதிர்மனுதாரர்–திரு. அமித் யாதவ், SSC CGLE-2018 தேர்வின் நிலை–I மற்றும் நிலை–II கட்டங்களை வெற்றிகரமாகக் கடந்தார். அதன்பிறகு, நிலை–III (Tier-III) நடத்தப்பட்டு, அதன் முடிவுகள் 2020 செப்டம்பர் 30–அன்று அறிவிக்கப்பட்டன. இதில் அவர் திறன் தேர்வு/ சான்றிதழ் சரிபார்ப்பு நிலை, அதாவது நிலை–IV

(இத்தேர்வின் இறுதிக் கட்டம்) ஆகியவற்றிற்குத் தகுதி பெற்றார். அதன்பின்னர், அவர் தகுதி யுள்ள பணியிடங்களுக்கான முன்னுரிமையைத் தெரிவிக்க வேண்டியிருந்தது. அதன்படி அவர் 'தணிக்கையாளர்' பணியைத் தேர்ந்தெடுத்தார். காலியிடங்களின் இறுதிப் பட்டியல் 2021 மார்ச் 15 அன்று இணையதளத்தில் பதிவேற்றப் பட்டது, அதன் தொடர்ச்சியாக திரு. அமித் யாதவ் 'தணிக்கையாளர்' (D33) பதவிக்கு நியமனம் செய்ய பரிந்துரைக்கப்பட்டார்.

9. 2021 செப்டம்பர் 28– அன்று, இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் அலுவலகம் மாநில/அலுவலக ஒதுக்கீடு பட்டியலை வெளியிட்டது. அந்தப் பட்டியலில், 3வது எதிர்மனுதாரர்–திரு.அமித் யாதவ் உள்ளிட்ட சில விண்ணப்பதாரர்களின் கோப்புகள், பணியாளர் தேர்வாணையத்திடமே திருப்பி அனுப்பப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. திரு.அமித் யாதவ் விண்ணப்பித்து, பரிந்து ரைக்கப்பட்ட 'மனநலக் குறைபாடு' கொண்ட மாற்றுத்திறனாளிகள் பிரிவுக்கு, 'தணிக்கை யாளர்' பணியிடம் ஏற்றதல்ல எனக் கண்டறியப் பட்டதே இதற்குத் தடையாகக் கூறப்பட்டது. திரு. அமித் யாதவின் விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டது குறித்து, 2021 செப்டம்பர் 30ஆம் தேதி யிட்ட கடிதத்தின் மூலம் அவருக்கு முறைப்படி தெரிவிக்கப்பட்டது.

10. இதனால் அதிருப்தியடைந்த 3வது எதிர் மனுதாரர்–திரு.அமித் யாதவ், தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது தன்னிச்சையானது என்று கூறி, 2021 செப்டம்பர் 29 அன்று பணியாளர் தேர்வாணையத்திடம் விரிவான விளக்க மனுவை சமர்ப்பித்தார். மேலும், அவர் 2021 அக்டோபர் 8 அன்று பணியாளர் மற்றும் பயிற்சித் துறை யிடம் இரண்டு புகார்களைப் பதிவு செய்தார். அதனைத் தொடர்ந்து, 2021 அக்டோபர் 23– அன்று மின்னஞ்சல் ஒன்றையும் அனுப்பி, தனது தகுதியை மீண்டும் வலியுறுத்தியதோடு, இந்தத் தேர்வு முறையில் தனது பணி நியமனத்தை மறுபரிசீலனை செய்யுமாறு கோரினார். இருப்பினும், எவ்விதச் சாதகமான பதிலும் வராத நிலையில், திரு.அமித் யாதவ் 2016–ஆம் ஆண்டின் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் விதிகளின்படி பணி நியமனம் கோரி, டெல்லி மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தில் 2022–ஆம் ஆண்டின் அசல் விண்ணப்பம் எண் 339-I (OA No. 339 of 2022) தாக்கல் செய்தார்.

11. மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் (CAT) முன்னிலையிலான விசாரணையில், 3வது எதிர்மனுதாரர்–திரு.அமித் யாதவ், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மூலம் 2021 ஜனவரி 4 தேதியிட்டு வெளியிடப் பட்ட அரசிதழ் அறிவிப்பு எண் 38-16/2020-DD-III–ஐ ஆதாரமாகக் காட்டினார். அந்த அறிவிப்பில், 'தணிக்கையாளர்' பதவிக்கு 'மனநலக் குறைபாடு' கொண்ட மாற்றுத் திறனாளிகளும் தகுதியான வர்கள் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதே அவரது வாதமாகும்.

12. தீர்ப்பாயம் 2023 ஜனவரி 23– தேதி யிட்ட இறுதி உத்தரவின் மூலம் அந்த அசல் விண்ணப்பத்தை அனுமதித்தது. மேலும், 'தணிக்கையாளர்' பதவிக்குரிய பணிகளைச் செய்வதற்கு திரு. அமித் யாதவ் உடல்நிலை தகுதியுடன் உள்ளாரா என்பதை ஆய்வு செய்ய ஒரு மருத்துவக் குழுவை அமைக்குமாறு எதிர்மனுதாரர் எண் 1 இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவருக்கு உத்தரவிட்டது. மருத்துவக் குழுவின் ஆய்வில் திரு.அமித் யாதவ் தகுதியானவர் எனக் கண்டறியப் பட்டால், அவருக்கு அந்தப் பணியிடத்திற்கான பணி நியமன ஆணையை வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

13. எதிர்மனுதாரர் எண் 1 இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர், தீர்ப்பாயத்தின் இந்த உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுவைத் தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு, தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவில் தலையிட்டு அதனை ரத்து செய்தது. இதன் விளைவாக, திரு. அமித் யாதவின் ஆவணக் கோப்புகள் திருப்பி

அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட 2021 செப்டம்பர் 30 தேதியிட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பு மீண்டும் நடைமுறைக்கு வந்தது.

14. இந்த வழக்கின் மேல்முறையீட்டாளர், திரு.அமித் யாதவைப் போன்றே ஒரு மாற்றுத் திறனாளி வேட்பாளர் ஆவார். அவர் தகுதி வாய்ந்தவர் என்றும், பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், 40%-க்கும் அதிகமான 'குறிப்பிட்ட கற்றல் குறைபாடு' கொண்டவர் என்றும் கூறிக்கொள்கிறார். இது 'ஈ' பிரிவு மாற்றுத்திறனாளிப் பிரிவின் கீழ் வருகிறது. அவர் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு (இ) எண். 5904/2023-ல் தன்னை ஒரு தரப்பினராக இணைத்துக்கொள்ளக் கோரி CM விண்ணப்பம் எண் 9669/2024-ஐத் தாக்கல் செய்தார். தான் ஏற்கெனவே 2021 செப்டம்பர் 30 தேதியிட்ட அதே அறிவிப்பை எதிர்த்து மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்த O.A. எண் 2563/2021 நிலுவையில் உள்ளதை அந்த இடைக்கால விண்ணப்பத்தில் சுட்டிக் காட்டினார். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தனது நிலுவையிலுள்ள விண்ணப்பத்தைப் பாதிக்கக் கூடும் என அவர் அஞ்சினார். அவரது அந்த இடைக்கால விண்ணப்பம் 2024 பிப்ரவரி 16- அன்று அனுமதிக்கப்பட்டது.

15. நிலைமை இவ்வாறிருக்க, உயர் நீதிமன்றம் 2025 மே 29- தேதியிட்ட தீர்ப்பின் மூலம் ரிட் மனுவை அனுமதித்ததைத் தொடர்ந்து, மேல்முறையீட்டாளர் சுதன்ஷு கர்தம், இந்த நீதிமன்றத்தில் (உச்ச நீதிமன்றம்) சிறப்பு அனுமதி கோரும் மனுவைத் தாக்கல் செய்ய அனுமதி கோரி விண்ணப்பித்தார்.

16. சிறப்பு அனுமதி கோரும் மனுவைத் தாக்கல் செய்ய அனுமதி கோரும் விண்ணப்பம், சிறப்பு அனுமதி மனு மற்றும் வழக்கில் தங்களை இணைத்துக்கொள்ளக் கோரும் மனு ஆகிய வற்றின் மீது 2025 ஆகஸ்ட் 13 அன்று நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அதன்பிறகு, 2026 ஜனவரி 6 அன்று விரிவான வாதங்கள் கேட்கப் பட்டன. அன்றைய தேதியில் இந்த நீதிமன்றம் பின்வரும் உத்தரவைப் பிறப்பித்தது.

''1. மனுதாரர் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ராகுல் பஜாஜ், 1வது எதிர் மனுதாரர் சார்பாக ஆஜரான கற்றறிந்த கூடுதல் அரசு வழக்கறிஞர் திருமதி. அர்ச்சனா பதக் தேவ் மற்றும் காணொலி காட்சி மூலம் நேரில் ஆஜரான 3வது எதிர்மனுதாரர் எண் 3 திரு.அமித் யாதவ் ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டுள்ளோம்.

விரிவான வாதங்களுக்குப் பிறகு, சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் 2021 ஜனவரி 4 அன்று வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில், மனுதாரர் மற்றும் 3வது எதிர் மனுதாரர் ஆகியோரை பொருத்தமான பிரிவு களில் பணியமர்த்துவது குறித்து அறிவுறுத்தல் களைப் பெற கூடுதல் அரசு வழக்கறிஞர் திருமதி. அர்ச்சனா பதக் தேவ் இரண்டு வார கால அவகாசம் கோரினார்.''

17. மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் திரு. ராகுல் பஜாஜ் மற்றும் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் திருமதி. அர்ச்சனா பதக் தேவ் ஆகியோரின் சமர்ப்பிப்புகளைக் கேட்டறிந்த பிறகு, சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் (மாற்றுத்திறனாளிகள் அதிகார மளித்தல் துறை-04.01.2021 அன்று வெளியிட்ட அரசு அரசிதழ் அறிவிப்பின் அடிப்படையில், மேல்முறையீட்டாளரை பொருத்தமான பிரிவில் பணி நியமனம் செய்ய பரிசீலிக்கலாம் என்பதில் இந்த நீதிமன்றம் திருப்தி அடைந்தது. அந்த அறிவிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்
(மாற்றுத்திறனாளிகள் அதிகாரமளித்தல் துறை)
அறிவிப்பு, புது தில்லி, 4 ஜனவரி, 2021

எண் 38-16/2020-DD-III - 1995-ஆம் ஆண்டின் மாற்றுத்திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்களிப்பு) சட்டம் (இனிமேல் 'ரத்து செய்யப் பட்ட சட்டம்' எனக் குறிப்பிடப்படும்) பிரிவு 33-இன் கீழ், (i) பெருமூளை வாதம் உள்ளிட்ட ஊனமுற்றோர், (ii) பார்வை குறைபாடு (குறைந்த பார்வை மற்றும் குருட்டுத்தன்மை) மற்றும் (iii)

செவித்திறன் குறைபாடு ஆகிய மூன்று பிரிவு களில் மாற்றுத்திறனாளிகளுக்கு 3%-க்கும் குறையாத இடஒதுக்கீடு வழங்கப்பட்டி ருந்தது.

2. ரத்து செய்யப்பட்ட சட்டத்தின் பிரிவு 32-இன்படி, மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட வேண்டிய பணியிடங்களைக் கண்டறியவும், அத்தகைய பட்டியலை மூன்று ஆண்டுகளுக்கு மிகாத கால இடைவெளியில் அவ்வப்போது மறு ஆய்வு செய்யவும் சம்பந்தப் பட்ட அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டி ருந்தது.

3. ரத்து செய்யப்பட்ட சட்டத்தின் மேற்கூறிய விதிகளின்படி, மத்திய அரசு கடைசியாக 29 ஜுலை, 2013 தேதியிட்ட அறிவிப்பு எண் 16-15/2010-DD-III மூலம் மாற்றுத்திறனாளிகளுக்குப் பொருத்தமான பணியிடங்களின் பட்டியலை அறிவித்தது.

4. 2017 ஜுன் 15 அன்று ரத்து செய்யப் பட்ட சட்டத்தின் 32 மற்றும் 33 பிரிவுகளின் விதி களின்படி, மாற்றுத்திறனாளிகளுக்குப் பொருத்த மான மத்திய அரசுப் பணியிடங்களின் பட்டியலை மறுஆய்வு செய்ய, மாற்றுத் திறனாளிகள் அதிகாரமளித்தல் துறையின் செயலாளரின் தலைமையின் கீழ் 2015 நவம்பர் 19 அன்று ஒரு நிபுணர் குழுவை இந்திய அரசு அமைத்தது.

5. அந்த நிபுணர் குழு 2015 டிசம்பர் 9 அன்று கூடி, ரத்து செய்யப்பட்ட சட்டத்தின் பிரிவு 33-இன் கீழ் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு வகை ஊனத்திற்கும் ஒரு துணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தது. அதன்படி, பின்வரும் மூன்று துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன:

i) உடல் ஊனமுற்றோருக்கான துணைக் குழு

ii) செவித்திறன் குறைபாடுள்ளோருக்கான துணைக்குழு

iii) பார்வை குறைபாடுள்ளோருக்கான துணைக் குழு

6. இதற்கிடையில், மத்திய அரசு 2016-ஆம் ஆண்டின் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டத்தை (இனிமேல் ''சட்டம்'' எனக் குறிப்பிடப் படும்) அறிவித்தது. இச்சட்டத்தின் பிரிவு 34, உட்பிரிவு (1)-இன் கீழ், (i) ஆட்டிசம், குறிப்பிட்ட கற்றல் குறைபாடு, மனநலக் குறைபாடு மற்றும் அறிவுசார் குறைபாடுகள் மற்றும் (ii) பல்வேறு வகை ஊனங்கள் உள்ளிட்ட புதிய பிரிவினருக்கும் இடஒதுக்கீடு சலுகையை விரிவுபடுத்தியது.

7. இச்சட்டத்தின் பிரிவு 33, புதிய பிரிவின ருக்குப் பொருத்தமான பணியிடங்களைக் கண்டறிய நிபுணர் குழுவை அமைக்குமாறு அரசாங்கத்தைப் பணிக்கிறது. அதன்படி, புதிய பிரிவுகளுக்காகப் பின்வரும் இரண்டு துணைக் குழுக்கள் கூடுதலாக அமைக்கப்பட்டன: (i) ஆட்டிசம், அறிவுசார் குறைபாடு, குறிப்பிட்ட கற்றல் குறைபாடு மற்றும் மனநலக் குறைபாடு ஆகியவற்றிற்கான துணைக்குழு, மற்றும் (ii) பலவகை ஊனங்களுக்கான துணைக்குழு.

8. அனைத்துத் துணைக்குழுக்களும் 2013 ஜுலை 29 தேதியிட்ட அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்ட பணியிடங்களை மறுஆய்வு செய்து தங்களது அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. நிபுணர் குழு அந்த அறிக்கைகளைப் பரிசீலித்து, தனது பரிந்துரைகளை இறுதி செய்து, மத்திய அரசின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தது.

9. எனவே, இச்சட்டத்தின் பிரிவு 33-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன் படுத்தி, மத்திய அரசு இதன்மூலம் அறிக்கை யின் சாராம்சத்தையும் (இணைப்பு-ஆ), குரூப் அ, ஆ, இ மற்றும் ஈ ஆகிய பிரிவுகளில் மாற்றுத் திறனாளிகளுக்குப் பொருத்தமான மத்திய அரசுப் பணியிடங்களின் பட்டியலையும் (இணைப்பு-இ) அனைத்து அதிகாரிகளுக்கும் தகவல் மற்றும் மேலதிக நடவடிக்கைக்காக அறிவிக்கிறது.

10. இந்தப் பட்டியல், 2013 ஜுலை 29-தேதியிட்ட முந்தைய பட்டியலுக்குப் பதிலாக நடைமுறைக்கு வரும்.

18. மேற்கூறிய உத்தரவிற்குப் பதிலளிக்கும் விதமாக, 1வது எதிர்மனுதாரர்-இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத்

தலைவர் ஒரு கூடுதல் பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளார். அதன் முக்கியமான பகுதிகள் எளிதான பார்வைக்காக கீழே கொடுக்கப் பட்டுள்ளன

''3. இந்த மாண்புமிகு நீதிமன்றம் 6.1.2026 அன்று பிறப்பித்த உத்தரவின்படி, மேல்முறை யீட்டாளர் மற்றும் 3வது எதிர்மனுதாரர் ஆகியோரை இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறையில் பொருத்தமான பணி யிடங்களில் அமர்த்துவது குறித்துப் பரிசீலித்து இந்தப் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப் படுகிறது.

4. 4.12.2025 தேதியிட்ட பதில் மனுவில் குறிப்பிட்டபடி, 2018ஆம் ஆண்டில் அமைக்கப் பட்ட நிபுணர் குழுவினால் IA-AD–ல் உள்ள தகுதியான பணியிடங்கள் கண்டறியப்பட்டன. அப்போது உதவி கணக்கு அலுவலர், டிவிஷனல் அக்கவுண்டண்ட் மற்றும் தணிக்கையாளர் ஆகிய பணியிடங்கள் குறிப்பிட்ட கற்றல் குறைபாடு' அல்லது 'மனநலக் குறைபாடு' உள்ளவர்களுக்குப் பொருத்தமானதாகக் கருதப்படவில்லை. எனவே, அவர்கள் ஆரம்பத்தில் பரிந்துரைக்கப்பட்டி ருந்தாலும், அவர்களது கோப்புகள் மறு ஒதுக்கீட்டிற்காகத் திருப்பி அனுப்பப்பட்டன. அதன் தொடர்ச்சியாக 12.11.2022 அன்று திருத்தப்பட்ட முடிவுகளை வெளியிட்ட பணியாளர் தேர்வாணையம், அவர்களது IA-AD ஒதுக்கீட்டை ரத்து செய்தது.

5. இதற்கிடையில், 4.1.2021 தேதியிட்ட அறிவிப்பின்படி, குரூப் 'இ' பிரிவில் உள்ள உதவி (தணிக்கை) மற்றும் தணிக்கையாளர்-II ஆகிய பணியிடங்கள் மனநலக் குறைபாடு மற்றும் கற்றல் குறைபாடு உள்ளவர்களுக்குப் பொருத்தமானவை எனக் கண்டறியப்பட்டுள்ளன.

6. விதிமுறைகளில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தின்படி, 2வது எதிர்மனுதாரர் பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து இந்த இரண்டு விண்ணப்பதாரர்களின் முழு விவரங்களுடன் கூடிய கோப்புகள் வரப்பெற்றவுடன், அவர் களைத் தகுதியான குரூப் 'இ' பணியிடங்களில் அமர்த்த 1வது எதிர்மனுதாரர் இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் அலுவலகம் தயாராக உள்ளது.

7. தற்போதைய தேர்வு முறையில், மேல் முறையீட்டாளரைப் பொருத்தமான பணியிடத்திற்குப் பரிந்துரைக்க 2வது எதிர்மனுதாரரே தகுதியுள்ள அதிகாரம் படைத்தவர் ஆவார். எனவே, இது குறித்து 13.02.2026 தேதியிட்ட கடிதத்தின் மூலம் பணியாளர் தேர்வாணையத்திடம் கோரப் பட்டுள்ளது. இத்தகைய பரிந்துரை அல்லது இந்த மாண்புமிகு நீதிமன்றத்தின் உத்தரவு இல்லாமல், 1வது எதிர்மனுதாரர் மேற்கொள்ளும் எந்த வொரு நியமனமும் அதன் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதாக இருக்கும்.

8. மேற்கூறியவற்றின் அடிப்படையில், மேல் முறையீட்டாளர் மற்றும் 3வது எதிர்மனுதாரர் ஆகியோரை இதர பொருத்தமான பணியிடங் களில் நியமிக்க பணியாளர்கள் தேர்வாணையம் பரிந்துரை செய்தால், அந்த நியமனத்தை வழங்க 1வது எதிர்மனுதாரர் அலுவலகம் உறுதி அளிக்கிறது.

9. இது தவிர, இந்த மாண்புமிகு நீதிமன்றம் பிறப்பிக்கும் எந்தவொரு உத்தரவையும் நடைமுறைப்படுத்த 1வது எதிர்மனுதாரர் அலுவலகம் கடமைப்பட்டுள்ளது.''

19. 1வது எதிர்மனுதாரர் இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தைப் பார்க்கும்போது, மேல்முறையீட்டாளர் மற்றும் 3வது எதிர்மனு தாரர் ஆகியோரை அவர்களது ஊனத்திற்குப் பொருத்தமான குரூப் 'இ' பணி யிடங்களில் அமர்த்துவதற்கு இப்போது எந்த விதத் தடை யுமில்லை என்பது தெளிவாகிறது.

20. பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து பரிந்துரை மற்றும் விண்ணப்பதாரர்களின் கோப்புகள் கிடைத்த பின்னரே இந்த நியமனங் களைப் பரிசீலிக்க முடியும் என்பது மட்டுமே அந்தப் பிரமாணப் பத்திரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ள ஒரே நிபந்தனையாகும்.

21. எனவே, 1வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்த கூடுதல் பிரமாணப் பத்திரத்தின் அடிப்படை யில் இந்த மேல்முறையீட்டு மனுவை முடித்து வைப்பதே சரியானது என்று நாங்கள் கருது கிறோம். 2வது எதிர்மனுதாரர் பணியாளர் தேர்வாணையம், இன்றைய தேதியிலிருந்து

இரண்டு வார காலத்திற்குள், மேல்முறை யீட்டாளர் மற்றும் திரு.அமித் யாதவ் ஆகியோரின் கோப்புகளை உடனடியாக 1வது எதிர்மனுதாரர் இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் அனுப்ப வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. அக்கோப்புகள் கிடைத்த வுடன், 2026 பிப்ரவரி 16– தேதியிட்ட கூடுதல் பிரமாணப் பத்திரத்தின் அடிப்படையில், அவர்கள் இருவரும் குரூப் ‘இ’ பணியிடங்களில் நியமிக்கப் பட வேண்டும். ஒருவேளை 2018 மே 5 தேதி யிட்ட அறிவிப்பின்படி அறிவிக்கப்பட்ட பணி யிடங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருந்தால், இந்த இரண்டு விண்ணப்பதாரர்களுக்காகவும் ‘மிகைப்பணியிடங்களை’ உருவாக்கி அவர்களை அமர்த்த வேண்டும். அவர்களது பணி நியமனம் அவர்கள் பணியில் சேரும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

22. இந்த மேல்முறையீட்டு மனு இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது.

23. நிலுவையில் உள்ள இதர விண்ணப்பங்கள் ஏதேனும் இருந்தால், அவையும் இத்துடன் முடிவுக்கு வருகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## 108 ஆம்புலன்ஸ் ஊழியர்களுக்கு 8 மணிநேரப் பணி தொழிலாளர் தீர்ப்பாயம் உத்தரவு

108 ஆம்புலன்ஸ் ஊழியர்களுக்கான 12 மணி நேர வேலை நேரத்தை 8 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என சென்னை தொழிலாளர் தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

நாடு முழுவதும் கடந்த 2005ஆம் ஆண்டு முதல் 108 ஆம்புலன்ஸ் சேவைத் திட்டம் தொடங்கப்பட்டது. தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில் தற்போது 1,353 ஆம்புலன்ஸ் வாகனங்கள் இயக்கப்படுகின்றன. இதில் 5,000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் உள்ளனர். இவர்கள், தினமும் 12 மணி நேரம் வேலை என்ற அடிப்படையில் இரண்டு ஷிப்டுகளில் பணியாற்றுகின்றனர். இந்த நிலையில் தங்களது வேலை நேரத்தை 8 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என ஆம்புலன்ஸ் ஊழியர்கள் தமிழக அரசிடம் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கை தொடர்பான பேச்சில் உடன்பாடு எட்டப்படவில்லை. இதையடுத்து இந்த விவகாரம் தொழிலாளர் தீர்ப்பாய விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த வழக்கு தொழிலாளர் தீர்ப்பாயத்தின் தலைவர் பி.முருகன் முன் விசாரணைக்கு வந்தபோது, தமிழ்நாடு 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் சங்கம் தரப்பில், 12 மணி நேரம் பணியாற்றுவதால், ஊழியர்கள் தூக்கமின்மை உள்ளிட்ட உடல்நலக் குறைவுகளால் பாதிக்கப்படுகின்றனர். இதனால், சில நேரங்களில் விபத்துகளும் நிகழ்கின்றன. மேலும் 12 மணி நேர பணி நடைமுறை என்பது தொழிலாளர் சட்டத்துக்கு விரோதமானது என வாதிடப்பட்டது. ஆம்புலன்ஸ் நிறுவனம் தரப்பில், எவ்வித லாப நோக்கமும் இன்றி பொதுமக்களுக்கு 24 மணி நேரமும் இலவச சேவை வழங்கப்படுகிறது. ஆம்புலன்ஸ் ஊழியர்களுக்கு 12 மணி நேரப் பணி நடைமுறைதான் நாடு முழுவதும் பின்பற்றப்படுகிறது. இதை ஏற்றுக் கொண்டுதான் ஊழியர்கள் இப்பணியில் சேர்ந்தனர். மேலும் ஊழியர்களுக்கு 12 மணி நேரத்துக்கான ஊதியம் தான் வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதை ஏற்க மறுத்த தீர்ப்பாய தலைவர், சர்வதேச தொழிலாளர் அமைப்பு விதிகளின்படி ஒரு நாளைக்கு 8 மணி நேரப் பணி நேரமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.எனவே தொழிலாளர் சட்டங்களுக்கு விரோதமான 12 மணி நேரப் பணி நேரத்தை 8 மணி நேரமாக குறைக்க வேண்டும் என உத்தரவிட்டார். மேலும் உத்தரவு குறித்து தொழில் தகராறு சட்டத்தின் கீழ் அரசிதழில் அறிவிக்கை வெளியிட்ட 30 நாள்களில் இந்த 8 மணி நேரப் பணி நடைமுறை அமலுக்கு வரும். அதுவரை 12 மணி நேரம் பணியாற்றும் ஊழியர்களுக்கு கூடுதல் பணி நேரத்துக்கான ஊதியத்தை ஆம்புலன்ஸ் நிறுவனம் வழங்க வேண்டும். மேலும் 108 ஆம்புலன்ஸில் பணியாற்றும் பெண் ஊழியர்களுக்கு ஆம்புலன்ஸ் நிறுத்தி வைக்கப்படும். அரசு மருத்துவமனை உள்ளிட்ட அரசு கட்டடங்களில் தனி ஓய்வறைகள் அமைக்க வேண்டும். அங்குள்ள கழிப்பறைகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

**நன்றி: தினமணி 21.3.2026**

# குழந்தை பராமரிப்பில் பெற்றோரின் கடமை

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி டாக்டர் அனிதா சுமந்த்**
**மாண்புமிகு நீதிபதி திரு.என்.செந்தில்குமார்**
**மு.வ.மே. எண்: 244/2023**
**நாள்: 10.7.2025**
**2025 (5) CTC 36**

**எம்.விஜயகுமார்** ...**மேல்முறையீட்டாளர்**

**–எதிர்–**

**எம், மணி**
**2. பிரேமாவதி**
**3. எம்.சரவணன்**
**4. சக்தி பிரியதர்ஷினி** ...**எதிர்வழக்கீட்டாளர்கள்**

**கோபிகா நம்பியார்**
மேல்முறையீட்டாளர்களின் வழக்கறிஞர்

**ஆர்.விநாயகமூர்த்தி**
எதிர்வழக்கீட்டாளர்களின் வழக்கறிஞர்

மு.வ.மே. அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகையின்றி.

**கோரிக்கை**:மு.ம.எண் 3/2022 இந்த நீதிமன்றக் கோப்பில் உள்ளதில் 28.8.2023 தேதியிட்ட ஆணைக்கெதிராக 865 உரிமைப் பட்டயத்தின் 15ஆம் கூறு மற்றும் 1994 முதலேற்பு நீதிமன்ற விதிகளின்படி கட்டளை 36, விதி 1இன்படி முன்னிடப்பட்ட மேல்முறையீடு.

## தீர்ப்பு

**நீதிபதி டாக்டர் அனிதா சுமந்த்**

1. தற்போதைய முதலேற்பு நீதிமன்ற மேல்முறையீடு 28.8.2023 தேதியிட்ட ஆணையை எதிர்த்து முன்னிடப்படுகிறது. இதில் முதன்மை மனு எண் 431/2022 இதில் வகை செய்ய 1890 காப்பாளர் மற்றும் காப்பில் உள்ளோர் சட்டத்தின்படி முன்னிடப்பட்டது. கோரிக்கையாவது முதன்மை மனு –எதிர்– சாய் வருண் (சுருக்கமாக குழந்தை இளையரின் பாதுகாப்புச் சட்டத்தின் 25ஆம் பிரிவின்படி கோரப்படுகிறது.

2. வி.எண் 1730/2022 இடைநிலையில் குழந்தையினை தன் காப்பில் குறிப்பிட்ட காலமான 3 வாரங்களுக்கு 1.5.2022 முதல் 22.5.202 வரையிலான காலத்திற்கு அளிக்கு மாறு கோரப்பட்டது. அந்தக் காலம் எந்த நிகழ்வும் இல்லாமல் கழிவுற்றது. அதன் பின்னர் தனி நீதிபதி முதன்மை மனுவினை எதிர்ப்புக்குள்ளாக்கப் பட்ட தற்போதைய ஆணையின் மூலமாக வகை செய்தார். இதில் எதிர்வழக்கீட்டாளருக்கு குழந்தை யின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அதாவது தாய்வழி மனுவினை எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட தற்போதைய ஆணை மூலமாக, வகை செய்தார். இதில் எதிர்வழக்கீட்டாளருக்கு குழந்தையின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அதாவது தாய்வழி பாட்டனுக்கு R1 /தாய்வழி பாட்டி/R2 தாய்மாமன் மற்றும் அவரது மனைவி R3, R4.

3. இந்தச் சூழ்நிலையில் பொருட்பாடு எழுகிறது. மேல்முறையீட்டாளர் திருமதி சாந்தி என்பவரை 30.06.2017 15.3.2018 அன்று சாய் வருண் இவர்கள் பிறந்துள்ளார். திருமதி சாந்தி மருத்துவ பிரச்சினைகளில் துன்புற்று வந்துள்ளார். இதய பிரச்சினைகள், இவை குழந்தைகள் பிறப்பின்போது தெரிய வந்துள்ளது. அதாவது குழந்தை பிறப்பிற்கு முன்பு, அவள் தனது தாய் வீட்டிற்கு சென்றுள்ளார். அதாவது அவளது பெற்றோருக்கு உதவி செய்வதற்காக, அவர்களும் நல்ல உடல்நிலையில் இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

4. குழந்தை பிறந்ததும், அவள் திருமணம் செய்த வீட்டிற்கு வந்துள்ளார். ஆனாலும் அடிக்கடி

தாய் வீடு சென்று வந்துள்ளார். அதாவது அவளது பெற்றோரை கவனிப்பதற்காக துரதிரஷ்ட வசமாக, திருமதி சாந்தி 29.10.2021 அன்று இருதய கோளாரில் இறந்துள்ளார். சாய் வருண் அந்த நேரத்தில் 3 ஆண்டு நிறைவெய்தி யிருந்தார். பின்னர் குழந்தை, எதிர்வழக்கீட்டாளர் களுடன் தொடர்ந்து இருந்து வந்துள்ளது மற்றும் மெசர்ஸ் கோபிநாத் நம்பியார், மேல்முறை யீட்டாளருக்காக மேல் முன்னிலையானவர் குழந்தையை தந்தை தன் பாதுகாப்பில் கொள்வ தற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அதாவது சட்டத்தின் 25ஆம் பிரிவின்படி மூல மனுவின் படி குழந்தையின் பாதுகாப்பை எடுப்பது தொடர்பாக.

5. மேல்முறையீட்டாளரின் வழக்காவது தனி நீதிபதியின் முன்பானது மற்றும் எங்கள் முன்பானதும் இதில் அவருடைய பாதுகாப்பு மறுக்கப்பட்டது மட்டுமல்ல. ஆனால் அவர் குழந்தையை பார்க்க வருவதும் தடுக்கப்பட்ட தாக கூறப்பட்டது. குழந்தையின் தந்தை என்ப தால், இவர் குழந்தையை உண்மையாகவே கவனிக்க வரும். இவர் பலமுறை குழந்தை யுடன் நல்ல உறவை வளர்க்க முயற்சிக்க அது இயலாது போயுள்ளது. அதாவது இவருக்கு ஒத்துழைப்பு இல்லாததால் மற்றும் எதிர் வழக்கீட்டாளர்களின் எதிர்மறை எண்ணம் காரணமாக.

6. மேல்முறையீட்டாளர் நல்ல பதவியில் இருந்தார் என்பது பற்றி எந்த பூசலும் இல்லை. அவர் மாத வருமானமாக ரூ.1,20,000 அன்றைய தேதியில் பெற்றுள்ளார். அவரது வாழ்க்கை முறை குழந்தையை நன்கு வளர்க்க வசதி உள்ளதாக இருந்தது மற்றும் இவர் நல்ல சுகாதாரமான சூழலில் அதனை வளர்க்க முடியும். மேல்முறையீட்டாளரின் தாய் அவருடன் வசிக்கிறார் மற்றும் அவரது சகோதரிகள் அவர் வீட்டின் அருகிலேயே உள்ளனர். இப்போதைக்கு மேல் முறையீட்டாளருக்கு மறுதிருமணம் செய்யும் எண்ணம் இல்லை.

7. இதில் சில குற்றச்சாட்டுகள் கூறப்பட்ட போதிலும், அதாவது எதிர்வழக்கீட்டாளரால் குழந்தையிடம் போதிய கவனம் செலுத்த வில்லை என்பது. அதாவது கவனிக்கப்படாத பல் தொடர்பான பிரச்சினை போன்றவை. தனி நீதிபதி முன்பு எழுப்பப்பட்டன. மேல்முறை யீட்டாளரின் வழக்கறிஞர் நம் முன் இத்தகைய பிரச்சினைகள் பற்றி பேசவில்லை.

8. எதிர்வழக்கீட்டாளர்களின் மு.ம.வில் உள்ள வழக்காவது தாய்வழி பாட்டன் பாட்டிகளிடம் குழந்தை நெருக்கமாக உள்ளது. அவனுக்கு அவனுடைய உறவினர் அதாவது ) பிறந்தவர்கள் மற்றும் இவர்கள் அருகருகே வசிப்பவர்கள். எதிர்வழக்கீட்டாளர்களால் அவர் நல்ல முறையில் கவனிக்கப்படுகிறார் மற்றும் பள்ளியில் நன்கு கற்றார். அவளை அங்கிருந்து எடுக்க முற்படுதலால் அது மனதளவில் பாதிப்புக்கு உள்ளாக்கப்படும். அதாவது பிரிந்து தந்தையுடன் சேர்ப்பது என்பதில், ஏனெனில் தந்தை பற்றி அவள் அறியவில்லை.

9. எதிர்வழக்கீட்டாளர்கள் குறிப்பிடுவதாவது தந்தை அவரது பணியில் கவனம் செலுத்தி சூழ்ந்துள்ளார். எனவே இயற்கை போகவே குழந்தை அவரது தாயின் கவனத்தில் விடப்படும். அவள் தன்னைத் தானே பாதுகாக்கும் அளவுக்கு இல்லை. இந்நிலையில் அந்தக் குழந்தை மற்றும் எவராவது பாதுகாப்பில் வைக்கப்படும் அல்லது அவர் மறுத்திருமணம் செய்வாரானால் மாற்றாந் தாயின் கவனிப்பில் குழந்தை விடப்படும். அவள் இக்குழந்தையை நன்கு கவனிப்பாளா என்பதும் உள்ளது. எதிர்வழக்கீட்டாளர்கள் முன்பே கூறியதாவது இவர்களுக்கு சென்று குழந்தையை பார்வையிடும் உரிமைகள் மறுக்கப்படவில்லை மற்றும் இவர் எப்போது வேண்டுமானாலும் குழந்தையை கண்டு வரலாம்.

10. பணிந்தனுப்புதல்கள் தொடர்பாக நீதிபதி முடிவு கூறியதாவது எதிர்வழக்கீட்டாளர்கள் நல்ல நிலையில் குழந்தையை கவனித்து வருகின்றனர். மேல்முறையீட்டாளர் சார்பாக நீதிபதி ஒரே ஒரு குறிப்பினைக் கூறியுள்ளார். அவர் நல்ல வேலையில் உள்ளார் என்பது வேறு வகையில் எதிர்வழக்கீட்டாளர்கள் சார்பாக தாய்வழி பாட்டன் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்,

பாட்டி ஒரு பள்ளி ஆசிரியை. இவக்ளும் நல்ல நிதி வசதியுடன் உள்ளனர் மற்றம் வருணின் சொந்தங்கள் அருகாமையில் வசிக்கின்றனர் மற்றும் அவனுக்கு நல்ல இணக்கமாக உள்ளனர்.

11. மொத்தத்தில் நீதிமன்ற முடிவாவது இதில் நல்ல ஏற்பாடாவது எதிர்வழக்கீட்டாளர்கள் குழந்தையின் பாதுகாப்பில் கொள்ளாவிடினும் தந்தை குழந்தையைச் சென்று கண்டு வர இவனுடன் தொலைபேசியில் பேசி அல்லது மாதத்திற்கு ஒரு முறையாவது சென்று பார்க்கக் கூடிய நிலை உள்ளது. நீதிபதி கூறுவதாவது, குழந்தை வளர்ப்பில் தந்தையின் பங்கு முக்கிய மானது மற்றும் அது குழந்தையின் வாழ்க்கை யில் இருக்க வேண்டிய ஒன்று மற்றும் பாட்டன் பாட்டியின் இடவசதி காலம். இவை கருத்தில் கொள்ளப்படும். எனவே முடிவானது குழந்தை யின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் எதிர்வழக்கீட்டாளர்கள் உள்ளனர் என்பது.

12. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் இந்த ஆணையை புறம் தள்ளியுள்ளார். ஏனெனில் இது சட்டத்தின் ஆணைப்படியான தாக இல்லை என்ற காரணத்தாலும் நம் கவனம் 1956 இந்து இளவர் மற்றும் காப்பாளர் சட்டத்தின் பிரிவு 6 ஈர்க்கப்படுகிறது மற்றும் 1890காப்பாளர் மற்றும் காப்பில் உள்ளோர் சட்டத்தின் 24ஆம் பிரிவின்படி ஒரு குழந்தை யின் சட்டப் பாதுகாப்பு அதன் பெற்றெடுத்த பெற்றோரிடம் அல்லது ஒருவரிடமாவது இருத்தல் வேண்டும் என்பது. இத்தகைய சூழ்நிலைகளில் மட்டுமே பெற்றோர் ஒரு பெற்றோராக தனது கடமைகளை ஆற்ற முடியாத நிலை ஏற்படுமானால் மாற்றுவழிகள் கண்டறியப்படும் என்பது.

13. அவள் வாதமாவது தந்தைக்கு எதிராக எதுவும் காணப்படாதபோது குழந்தையின் பாதுகாப்பை தாய்வழி பாட்டப் பாட்டியிடம் மற்றும் குடும்பத்திடம் அளிப்பது சட்டத்திற்கு எதிராக அமையக் கூடும். பொருண்மைகளின்பேரில், அவள் கூறுவதாவது தாய்வழி பாட்டன் பாட்டி அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றதாலே எந்த சான்றும் அளிக்கப்படவில்லை. இது பற்றி பின்வரும் வழக்குகளின் முடிவுகள் ஆதாரமாக்கப் பட்டன. 1. விவேக் குமார் சதுர்வேதி மற்றும் பிறர் –எதிர்– உ.பி.மாநிலம் மற்றும் பிறர் 2025 உச்.நீ.வ. வலைதளம் உச்.நீ. 264 மற்றும்

2. (சோமு) அட்சய்யா –எதிர்– கோசராஜா நரஹரி 1928 உச்.நீ.வ வலைதளம் சென். 346.

14. திரு. ஆர். விநாயகமூர்த்தி எதிர் வழக் கீட்டாளர்களின் வழக்கறிஞர் இந்த பணிந்த னுப்புதல்களை மீண்டும் எடுத்துக் கூறியதாவது தனி நீதிபதியின் முன்பு இதில் அழுத்தமளித்து அதாவது தந்தை பொருண்மைப்படி குழந்தை யில் அதிக ஆர்வம் எதுவும் காட்டவில்லை. அதாவது அதை வளர்ப்பதில் அவர் ஒரிரண்டு முறைகள் மட்டுமே. குழந்தையை வந்து பார்த்துள்ளார். இவருக்கு வந்து காண்பதற்கு முழு உரிமைகள் அளிக்கப்பட்டபோதிலும். எனவே இவருக்கு அக்கறையற்ற நிலை நன்கு தெரியப்படுகிறது. தற்போதைய நிலை, இவரால் முன்னிடப்பட்டது. இதற்கான காரணம் குழந்தை யின் பாதுகாப்பை ஓர் உரிமையாக கோரும் நோக்குடன் மற்றும் இது அவரது உள் மனதி லிருந்த வெளிப்பாடல்ல.

15. நாம் இது பற்றி பதிவு செய்வதில் மேல்முறையீட்டாளர் ஏற்றுள்ளதாவது அவர் குழந்தை வந்து பார்த்தவைகள் வெகுசில தருணங்களே, இதை எளிதில் விரல் விட்டு எண்ணக் கூடிய முறைகளே. எனினும், இவர் இதற்கான காரணமாக கூறுவது எதிர் வழக்கீட்டாளர்கள் இவர் அங்கு போவது பற்றி இவரை எதிர்கொள்ளும் முறையே என்பது. மேல்முறையீட்டாளரின் கருத்து 19.9.2022 அன்று பதிவு செய்யப்பட்டது. அவர் கூறுவ தாவது அவரது முயற்சி அதாவது குழந்தையை சென்று காண்பதற்கானது, எதிர்க்கப்படுகிறது. அதாவது அவர் 15 நிமிடங்களுக்கு மேல் வீட்டிற்கு வெளியே காத்திருக்கும் அவல நிலை.

16. இந்த நிலையை காண முடிகிறது. ஏற்கப் பட்டவாறு திருமதி சாந்தி இருதய பிரச்சினை களால் துன்புற்றிருந்தார். அதுவும் திருமணத்தின் போதே அதாவது மேல்முறையீட்டாளரின் திருமணத்தின்போதே இது மேல்முறையீட்டாளர்

திருமணத்திற்கு முன்பே அவருக்கு தெரிவிக்கப் பட்டதா இல்லையா என்பது பற்றி தரப்பினர் களுக்கு மட்டுமே தெரியும். ஆனால் இரு தரப்பினரும் அவரவர்களது நிலை பற்றி உறுதி யாக உள்ளனர். அதாவது மேல்முறையீட்டாளர், இது பற்றி அறிவிக்கப்படவில்லை மற்றும் எதிர் வழக்கீட்டாளர், அவர் இது பற்றி அறிந்திருந்த தாகக் கூறுகிறார்.

17. எனினும், இரு தரப்பினராலும் நம் முன்பு இது பற்றி கடுமையாக விவரிக்கப் படவில்லை மற்றும் இது எதிர்ப்புக்குள்ளாக்கப் பட்ட ஆணையின் விவரிப்பிலிருந்தே இது பற்றி நாம் அறிய முடிகிறது. திருமதி சாந்தியின் இறப்பு இந்த பிரச்சினை தொடர்பாக. மேல்முறை யீட்டாளருக்கும் சொந்தக்காரர்களுக்குமிடையே துரதிருஷ்டவசமாக காலம் மட்டுமே தந்தைக்கும் மகனுக்குமிடையே விரயமாகியுள்ளது.

18.1956 இந்து இளையர் மற்றும் காப்பாளர் காப்பாளர் சட்டத்தின் 6ஆம் பிரிவு இந்து இளையரின் இயற்கை காப்பாளர் பற்றி வகை செய்கிறது. இதில் கூறப்பட்டிருப்பதாவது இந்து இளையர் மகளின் ஆள் மற்றும் சொத்து தொடர்பாக. இணை பிரிக்கப்படாத இந்து கூட்டு குடும்பச் சொத்தின் உரித்தம் நீங்கலாக, அந்தக் குழந்தை வயதுக்கு மேற்பட்ட வயது அடையும் போது தந்தை மற்றும் அவருக்குப் பின்னர் தாய் இயற்கையான காப்பாளராக இருப்பார். சட்டம் கோருவது பெற்றோர் சட்டப் பாதுகாப்புக்கு பொறுப்பானவர் குழந்தையினை பராமரித்து, அதன் நல்வாழ்வு, சுகாதாரம் மற்றும் கல்வி மற்றும் தொடர்புடைய அனைத்து பொருட்பாடு களையும் கவனித்தல் வேண்டும். எனவே, சட்டப்படியான தந்தை பாதுகாப்பில் கொள்வ தற்கான இந்த உரிமையுடனான கடமை அவர் தகுதி வாய்ந்தவராக இல்லாத பட்சத்தில் அல்லது தகுதியில்லாத அதாவது அக்குழந்தை தொடர் பான ஆதரிப்பு, சுகாதாரம் கல்வி இவற்றை கவனிக்க முடியாதபோதும். இது தொடர்பாக தொல்லை ஏற்படும் வேறு தொடர்புற்ற பொருட் பாடுகள் இளவரின் நலப்பற்று தொடர்பாகவும் கவனித்தல் வேண்டும்.

20. விவேக் குமார் சதுர்வேதி உச்சநீதிமன்ற வழக்கில் இந்த ஏற்கப்பட்ட நிலையினை மீண்டும் எடுத்துக் கூறப்பட்டது. இது இளைய ரான குழந்தையில் நலன் தொடர்பானது. இதுவே முக்கிய கருதுகையாக உள்ளது. அந்த வழக்கின் பொருண்மைகளாவன இதில் அவனைத் தொடர்ந்து தந்தையிடம் இருக்க அனுமதித்து பாட்டனுக்கு வந்து பார்த்துச் செல்லும் உரிமை வழங்கப்பட்டது.

21. மேற்சொல்லப்பட்ட வழக்கின் பொருண்மைகள் நம் முன்புள்ள வழக்கினைப் போன்றதே. இதில் நீதிமன்றம் பதிவு செய்ததாவது தனி நீதிபதி அந்த வழக்கில் அக்குழந்தையின் மன நிலையை அறிய அதனுடன் பேசிப் பார்க்க வில்லை. அது அவரிடமிருந்து பிரிக்கப்பட்ட போது அதாவது 2021ஆம் ஆண்டில் பெற்றோரிடம் 10 ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் தாயின் இறப்பு வரை குழந்தை வசித்துள்ளது.

22. நீதிமன்றம் கூறுவதாவது பாட்டன்பாட்டி எந்த வீதத்திலும் தந்தையை விட அதிக கோரிக்கை வைக்க முடியாது. தந்தை அவனது இயற்கை காப்பினும் இவர்கள் மேற்சொல்லப்பட்ட விதிக்கு விதி விலக்குகளை அறிய முற்பட்டனர். தாய் அல்லது குழந்தையை தவறாக நடத்துவது அல்லது அவரது நிதிமுறையில் இயலாமை அல்லது வேறுவகையிலான இயலாமை மருத்துவ காரணங்கள் உள்ளடங் கலாக குழந்தையை கவனிக்க முடியாமை இதில் தொடர்புற்ற தீர்ப்பு பின்வருமாறு.

3. தனி நீதிபதி நீதிப்பேராணை மனுவை வகை செய்தவர். குழந்தையுடன் செயற்பட்டு ள்ளார். இவர் பணிந்தளித்ததாவது, குழந்தை வசதியாக பாட்டன் பாட்டியின் இல்லத்தில் தங்கு அவளது கல்வியை தொடர்வதாக கூறப்பட்டது. மேற்சொல்லப்பட்ட கண்டறிதல்களின் அடிப்படை யில் இதில் கூறப்பட்ட கருத்தாவது இளவர் குழந்தையின் நல்வாழ்வுக்காக, அதுவே முக்கிய கருதும்போது அதனை அவளது பாட்டன் உடன் தொடர்ந்து இருப்பதே சிறந்ததாகும் என்பதால் ஒவ்வொரு மாதமும் முதல் தேதிகளின் அக் குழந்தையை சென்று கண்டு வருவதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது சட்டத்தின் நிலையை வீட்டு அலுவலரால் நிர்ணயிக்கப் பட்டது.

.....

10. நாம், தனி நீதிபதி குழந்தை எவ்வாறு தந்தையை கருதுகிறது என்பது பற்றி கண்டறிய வேண்டியுள்ளது. ஏற்கப்பட்டவாறு, குழந்தை, பிறந்த பின்னர் 10 ஆண்டுகள் வளர பெற்றோரிடம் வளர்த்து வந்துள்ளது. பின்னர் அதன் தாய் இறந்த காரணத்தால் அதனை 2021இல் தந்தையிடமிருந்து பிரித்துள்ளனர் மற்றும் குழந்தை பாட்டனுடன் வசித்து வருகிறது. இவர்கள் தந்தைவிட கூடுதல் அக்கறை காட்ட முடியாது. இவர் இயற்கை காப்பாளர். இங்கு இவர்களது வாழ்க்கையில் எந்த பூசலும் இல்லை. அதாவது குழந்தையின் தாய் உயிருடன் இருந்த போது, குழந்தைக்கோ மனைவிக்கோ எதிராக எந்த முறையீடும் இல்லை. இயற்கை காப்பாள ரான தந்தை, நல்ல பணியில் உள்ளார் மற்றும் கற்றவர் அவரது சட்ட உரிமைகளுக்கு எதிராக எந்தச் செயற்பாடும் இல்லை. அதாவது ஒரு இயற்கை காப்பாளராக, அவருக்கு குழந்தையைத் தன் பாதுகாப்பில் வைத்துக் கொள்ளும் ஆசை யும் உள்ளது. நாம் கொள்ளும் கருத்தாவது குழந்தையின் நலன் இந்த பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின்படி நல்ல காப்பாண்மை யில் செயற்பட அக்குழந்தையை தந்தையிடம் அளிப்பது சிறந்ததே.

11. எனினும், நாம் அக்குழந்தை 3 ஆண்டுகளாக தந்தையுடன் வளரவில்லை என்னும் பொருண்மையை விட்டுத் தர முடியாது. அது தனது பாட்டி தாத்தா உடன் உள்ளது மற்றும் இந்தக் கல்வி ஆண்டு முடிவுக்கு வருகிறது. பள்ளியில் அக்குழந்தை 7ஆம் வகுப்பில் தொடர உள்ளது. அது தாத்தா பாட்டி யின் வீட்டின் அருகில் உள்ள பள்ளி. மேற் சொல்லப்பட்ட சூழ்நிலைகளில் இந்தக் கல்வி ஆண்டை முடிக்க அனுமதிப்பது பற்றி நாம் பணிப்புரை வழங்குவது அதனை பாட்டி தாத்தாவின் கவனிப்பில் 30.4.2025 வரை இருத்தி வைப்பது என்பது. அக்குழந்தை தாத்தா பாட்டியின் பாதுகாப்பில் தொடர்ந்து வளரும் போது அவர்களது தந்தை அக்குழந்தையை எடுத்துச் செல்ல நாங்கள் அனுமதிக்கிறோம். அதாவது ஒரு வாரம் விட்டு ஒரு வார முடிவுகளில் அவளது பெற்றோர் வீட்டில் தங்கியிருக்க குழந்தையானது வெள்ளிக்கிழமை மாலை அல்லது சனிக்கிழமை காலை சென்று ஞாயிறு மாலை திரும்பி வருவது என்பது. இந்த ஏற்பாடு 30.4.2025 வரை தொடரட்டும். அதாவது குழந்தை கவனிப்பு தந்தையிடம் அளிக்கப்படும் வரையில் 1.5.2025 அன்று நிலைய வீட்டு அலுவலர் முன்னிலையில் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டு தாத்தா–பாட்டி குழந்தையை வந்து பார்க்கும் உரிமை வழங்கப்படும். ஜனரி 2025இல் இருந்து தொடங்குகிற இரண்டாம் சனிக்கிழமை வார இறுதி நாட்களின் தங்க ளுடன் குழந்தையை தங்க வைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. இந்த ஏற்பாடு ஓராண்டு வரை தொடரும். அதாவது குழந்தை யின் விருப்பப்படி காப்பாளர் மு.ம. சட்ட குடும்ப நீதிமன்றத்தின் முன்பு முன்னிடப்பட்டது. முடிக்கப் பட்டு விடும்.''

23. (கோட்) அட்சயா மேற்கூறப்பட்டதில் நீதிமன்ற நீதியர் ஆயம் சட்டத்தின் பிரிவு 24இனை கவனித்து மன்னர் மன்றத் தீர்ப்பினைச் சுட்டியுள்ளது. அன்னிபெசன்ட் –எதிர்– ஜி. நாராயணய்யா அ.இ.அ. 1914 ம.ம.41. இதில் மீண்டும் கூறப்பட்டதாவது கட்ட கடமை பெற்றோரின் பேரில் உள்ளது. அதாவது ஒரு காப்பாளராக அவரது காப்பில் உள்ளவரை அவரது ஆதரவு, சுகாதாரம் பற்று கல்வி தொடர்பாக கவனித்தல் என்பது அவரது கடமை மற்றும் இத்தகைய பொருட்பாடுகளை இந்த காப்பில் உள்ளவர் உட்பட்டிருப்பர். இந்தக் கருத்து மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பின்னர் உள்ள முடிவுகளில் இவை இந்த முடிவிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

24. இதில் சட்டநிலை தெளிவாக உள்ளது. இதில் மறுமொழி அளிக்கப்பட வேண்டிய கேள்வி இதில் குழந்தையின் காப்பாளராக இருப்பதற்கு தந்தை தகுதியற்றவரா என்பது அந்த வழக்கில், எதிர்வழக்கீட்டாளர்கள் வாதிட்ட தாவது தந்தை மறுதிருமணம் செய்து ள்ளார் என்பது. நீதிமன்றமும் கூட கருதி செய்ததாவது அவளது வாழ்க்கையின் போது குழந்தையின் தாய் அக்குழந்தையை அவமதிப்பாக நடத்து வாளா என்பது. இவ்வாறு இருக்குமானால் இது அவளை தகுதியற்ற வராக்கும். நீதிமன்றம்

கூறியதாவது மறு திருமணம் ஒரு காரணியாக இருக்க முடியாது. கூறப்பட்ட குற்றச்சாட்டிற்கு ஆதாரம் தேவைப்படுகிறது. எந்தச் சான்றும் இல்லாதபோது அவரிடம் பாதுகாப்பு ஒப்படைக்கப் படும். இதில் தொடர்புற்ற தீர்ப்பின் பகுதி பின்வருமாறு படிக்கப்படுகிறது.

“4. பிரிவு 25இன்படி நீதிமன்றத்திற்கு வழிகாட்டும் மறுபயன் தொடர்பாக உள்ள ஐயமாவது இது குழந்தையின் நலனுக்கு எனினும் இதில் குறைந்த அளவு தேவைப்படுவ தாவது கேள்வியின் முடிவு, ஒவ்வொரு வழக்கின் சூழ்நிலைகளைப் பொருத்தே அமையும் என்பதும். இது காப்பாளர் மற்றும் காப்பில் உள்ளவரின் உறவு முறை பற்றியது. அதாவது இதற்கான விண்ணப்பம் செய்யப்படும்போது இங்கு மேல்முறையீட்டாளர் தந்தை மற்றும் இவரே இயற்கை காப்பாளர் அவர் ஒரு சாதாரண மானவர் மட்டும் அல்ல. அதாவது குழந்தையின் நலனில் அதிக அக்கறை காட்டு பவரும் கூட இவரும் அதனை தக்கமுறையில் வைத்து வருவ தற்கான கடப்பாட்டை உடையவர். மேல்முறை யீட்டாளர் குழந்தையின் தாய்வழி பாட்டன் அவரும் குழந்தையின் நலனில் அக்கறை உடையவர் மற்றும் அவரது மனைவி, தாய்வழி பாட்டி அதுவும் தாய் இல்லாத நிலையில் குழந்தையினை உரியவாறு கவனிப்பதில் அக்கறை கொண்டவர். ஆனால் அவர்களுக்கு சட்டப்படி எந்த கடமையும் இல்லை. அதாவது தந்தைக்கான கடமைகள் இவர்கள் எந்த நேரமும் குழந்தையை எடுத்துக் கொள்ள கூற முடியும். இவர் அதனை கட்டாயமாக ஏற்க கட்டுப்பட்டவர். காப்பாளரின் உரிமைகளும் கடமைகளும் குழந்தையைப் பொருத்து தெளிவாக இந்துச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

“காப்பாளர் குழந்தையின் உடைமையை கொள்வதற்கு முதல் நோக்கிலான உரிமை யுள்ளது. குழந்தை தொடர்பாக இது கடமைப் பொறுப்பிலிருந்து எழுவதாகும். எனவே, அவர், இதனை மறுக்க முடியாது. இதை இளையரே விரும்பினாலும் அதாவது போதிய காரணங்கள் இருந்தாலன்றி இவரது காப்பாண்மை கட்டாய மானது. அதுவும் பெற்றோராக உள்ள நேர்வில் அளவிலான பொருட்பாடு அதாவது சொத்தில் பொருளின் பாதுகாப்பை விட ஆனால் அவரது காப்பாளர் நிலை இது புனிதமான நம்பிக்கை யுடைய தான தன்மையது மற்றும் தகப்பன் இந்த இடத்தில் மற்றொரு வரை பதில் ஆளாக்க முடியாது. அவர் இந்த காப்பாண்மையை மற்றும் கல்வியை மற்றொருவருக்கு ஒப்ப டைக்க விரும்பி ஒப்படைப்பதும் ஒரு மீட்கக் கூடிய அதிகளவே மற்றும் குழந்தையின் நலனுக்கு இது அவசியமானால், மாறாக ஒப்பந்தம் எதுவும் இல்லாதபோது அந்த காப்பாண்மையை தனது கைகளின் மீளப் பெற முடியும். இவ்வாறு இவர் தனது அதிகாரப்படி செயற்படும்போது, குழந்தை இவ்வாறு செயற்பட்டதால் ஒரு கூட்டாளியை ஏற்படுத்த அல்லது எதிர்பார்ப்புகளை கொண்டிருக்கும். இது அதன் உரித்தங்களுக்கு வேண்டத்தக்கதாக இருக்கலாம். இது குழந்தையை தொல்லை கொடுக்கக் கூடியதாக அல்லது ஏமாற்றம் மாற்ற தடை செய்து இடையீடு செய்யலாம் மையின இந்து சட்டத்தில் Ex9 பத்தி 212இல் காணப் படுகிறவாறு

5. பிரிவு 24 காப்பாளர் மற்றும் காப்பில் உள்ளோர் சட்டம் தெளிவாக கூறுவதாவது காப்பாளரின் கடமை தனது காப்பாண்மையில் உள்ளவர் தொடர்பாக உள்ளது.

“ஒரு காப்பாளர், ஒரு பாதுகாப்பில் உள்ளவரின் கவனிப்புடனான பாதுகாப்பை கொண்டது மற்றும் அவரது ஆதாரவிலானது, சுகாதாரம் மற்றும் கல்வி பற்றியது மற்றும் பிற பொருட் பாடுகள் அதாவது சட்டப்படி காப்பாளரிடம் உள்ள காப்பிலுள்ளவரின் பொருட்பாட்டின் தேவைப்படி.

6. எனவே இதனைத் தொடர்வதாவது காப்பாளர் தனது காப்பில் உள்ளவரின் பாதுகாப்பிற்காக விண்ணப்பிக்கும்போது அவர் நீதிமன்றத்தை தனது உதவிக்கு கோருவதாக மட்டுமே அடையும் அதாவது அவரது கடமை களை ஆற்றுவதற்கு அதாவது சட்டப்படி அவர் மீதுள்ள கடமைகளை செய்வதற்கு அதாவது காப்பில் உள்ளவர் தொடர்பாக. அதாவது இதில் அந்த விண்ணப்பத்தினை எதிர்ப்பவர்கள் அந்த காப்பாளரின் பாதுகாப்பில் இவ்வாறு இருப்பில் அது காப்பில் உள்ளவரின் நலனுக்காக

அமையும் என்றும் விண்ணப்பத்திற்கு எதிராக உள்ளவரின் காப்பில் உள்ளதே இவருக்கு சிறந்ததென கூறும்போது, இதில் அதிகாரி களுக்கிணங்க இதனை மெய்ப்பிக்கும் சுமை அதிக அளவினதாக அமையும். அதுவும் குழந்தையின் காப்பாளராக தந்தை உள்ள போது, அதாவது அரசப் பேரவையின் பிரசாந்த்ஸ் வழக்கில் அன்னிபெசன்ட் –எதிர்– நாராயணயா அ.இ.அ.1914. ஊ41. இது இந்துச் சட்டம் மற்றும் ஆங்கிலேயர் சட்டம் இதில் இயற்கை காப்பாளர் குழந்தையின் இளையரான பருவத்தில் என்பது பற்றியது. இவர் குழந்தையை சரியான முறையில் வளர்ப்பது என்பது முக்கிய கடமைப் பொறுப்பு என்பது பற்றி கூறப்பட்டுள்ளது. எனவே, இவர் குழந்தையின் பாதுகாப்பு பற்றிய முக்கியமான உரிமை உள்ளது. இதனை அவர் செய்யாது விட முடியாது. இதில் வேறு வகையில் தெளிவாக காட்டப்பட்டாலன்றி அதாவது அவர் காப்பாளராக செயற்படுவதற்கு தகுதியற்றவர் என்றாலன்றி, இந்தக் கருத்தை கூறப்பட்டவழக்குகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதாவது பெசன்ட் வழக்கிற்கு பின்னர் அறிக்கை செய்யப்பட்ட வழக்குகளில் (ஆண்டிப் பிள்ளை –எதிர்– தேவேந்திரன் பிள்ளை வழக்கை பார்க்க) 1915 39 சென்னை 473, சத்ரியநாராயணா –எதிர்– வி.எல்.நரசயம்மா அ.இ.அ.1924 அவர் 622)

11. மாவட்ட நீதிபதி பின்வருமாறு கண்ட றிந்துள்ளார். இந்த பொருட்பாடு முழுவதையும் கருதுகை செய்வதில், நமது கருத்துப்படி இளையரின் நலன் என்பது அவளது தந்தையை யிடமிருந்து அவளை பிரித்து வளர்ப்பது இளையரின் நலனுக்கான தாகாது அதுவும் இந்தப் பிஞ்சுப் பருவத்தில் ஐயமின்றி இந்த வழக்கிலும் காப்பாளரிடம் இளையர் தொடர்ந்து இருப்பாரானால் அதாவது எதிர்வழக்கீட்டாளர் (மேல்முறையீட்டாளரிடம்) இளையருக்கும் தந்தைக்குமிடையே உள்ள பாசம் தொலைக்கப் படும்.''

25. தற்போதைய வழக்கில் கூறப்பட்டதாவது அதாவது குறுக்கு விசாரணையில் R1 21.12.2022 தேதியிட்டது. மேல்முறையீட்டாளர் கூறியுள்ளதாவது அவர் உடலளவிலேயே மனைவியையும் குழந்தையையும் தாக்குவார் என்பது. இது விரிவாக கூறப்பட்டது. இவை இவர்களால் முன்னிடப்பட்ட எதிர் உறுதியுரை யில் அல்லது மெய்ப்பிப்பு தொடர்பான உறுதி யுரையில் காணப்படவில்லை. எனவே இவற்றிற்கு நாம் முக்கியத்துவம் தரவில்லை.

26. திருமதி சாந்தியின் நகைகள் பற்றியும் இங்கு கலந்தாய்வுகள் செய்யப்பட்டன. அவை மேல்முறையீட்டாளரின் கையுடைமையில் உள்ளன. நாம் பதிவு செய்ததில் மேல்முறை யீட்டாளர் தெளிவாக்கியது. 18.8.2022 தேதியிட்ட அவரால் முன்னிடப்பட்டவற்றில் தெளிவாக்கப்பட்டதாவது அவரிடம் 28 சவரன் (தோராயமாக) தங்கம் கையுடைமையில் உள்ளதாக கூறப்பட்டது. அதாவது திருமதி சாந்தியுடையது மற்றும் இவர் அவற்றை எதிர் வழக்கீட்டாளரிடம் ஒப்படைக்க ஆயத்தமாக உள்ளதாக கூறப்பட்டது. இப்போதும் இது மீண்டும் கூறப்பட்டது.

27. எதிர்வழக்கீட்டாளர்களின் வழக்கறிஞர் அவரது தரப்பில் உறுதியாக பணிந்தனுப்பப் பட்டதாவது அவர்கள் திருமதி சாந்தியின் நகை களை பெற விரும்பவில்லை. (அவர்களுக் கிணங்க அது 47 சவரன்கள்) மற்றும் அது, மேல்முறையீட்டாளரால், குழந்தைகள் நலனுக் காக, அதனை வைத்துக் கொள்ளுமாறு கூறப் பட்டது. இந்த பிரச்சினை பற்றி மேலும் நாம் பேச விரும்பவில்லை. இதனை தரப்பினர்களிடையே தீர்த்துக் கொள்ள விட்டு விடப்பட்டது.

28. நிகழ்வுப்படி பதிவேட்டில் தாய்வழி தாத்தா பாட்டி அரசுப் பணியாளர்களாக இருந்ததாக குறிப்பிடப்படவில்லை. வேறுவகையில் 19.9.2022 தேதியிடப்பட்ட முன் வைக்கப்பட்டவற்றில் அவர் கூறியதாவது பெற்றோர் அரசு ஊழியர்கள் என்று.

29. நாம் இதற்கு உடன்படி முடியாது. அதாவது தந்தை முழுநேர பணியாளராக உள்ள ஒரே காரணத்தினால் அவர் குழந்தையின் பாதுகாப்பை ஏற்று உரிமையற்றவர் என்பது. அது பொருள்படுவதாவது எந்த பெற்றோரும் முழுநேர பணியில் உள்ளவர்கள் குழந்தையை வளர்க்க முடியாது என்பதாக அமையும். இந்த

நிலை ஏற்கப்பட முடியாதது. இது நிராகரிக்கப் படுகிறது. ஐயமின்றி சிறு குழந்தைக்கு நம் கவனம் தேவைப்படும். அதனை நன்கு கவனித்து பராமரிக்க வேண்டியது. ஆனால் மேல்முறையீட்டாளர் அவரது பணியை மற்ற வரைக் கொண்டு செய்ய இயலாது. அதாவது குழந்தை வளர்ப்பின் உள்ள இன்பங்களை அனுபவிக்கவும் அதன் தேவைகளை பூர்த்தி செய்வதும் இதில் சந்தர்ப்பத்திற்கேற்ப அவர் செயற்பட முடியாது என்று கூற எதுவும் இல்லை.

30. இதிலான வாதமாவது அவர் குழந்தை யில் அக்கறை காட்டவில்லை என்பது. நமக்கு ஏற்க இயலாததாக உள்ளது. நாம் பத்தி 15இல் சுட்டியுள்ளது. எந்தச் சூழ்நிலைகளில் அவர் அடிக்கடி குழந்தையை சென்று கண்டு வர வில்லை என்பது. இந்த விளக்கம் அளிக்கப் பட்டவை. காரணமின்றி இல்லை மற்றும் அவரது நிலையிலிருந்து இதனை பார்க்கும் போது இது அறியப்படும். இது தொடர்பாக நாம் இதில் காணப்படும் ஐயத்தை அவர் சார்பாக பயன்படுத்திக் கொள்வோம்.

31. குழந்தைக்கு இப்போது 7 வயது. நாம் அறிந்த பொருளின் தன்மை குழந்தைக்கும் தந்தைக்கும் இடையே பிணைப்போ பாசமோ அதிக அளவில் இருப்பதாக அறியப்படவில்லை. அதாவது நவம்பர் 2021 முதல் திருமதி சாந்தி இறந்து போனதிலிருந்து இன்று வரை அந்தக் குழந்தை அவளது பெற்றோரிடம் இருந்து வந்துள்ளது. அக்டோபர் 2021 வரையில் அதாவது தாய் இறந்தபோது எதிர்வழக்கீட்டாளர் களால் அவளது இறப்பிற்கு பின்னர் சில நாட்களில் அங்கே எடுத்து செல்லப்பட்டுள்ளது. இதன் முதன்மை மனு ஜூலை 2022 முன்னிடப் பட்டுள்ளது அதாவது ஒன்பது மாதத்திற்குப் பின்னர்.

32. நாம் கண்டறிவது, தந்தை அவரது உரிமைகளைத் தேடி காலத்தை நீடிக்கவில்லை. அதாவது குழந்தையை தன் பொறுப்பில் ஏற்பது தொடர்பாக. தற்போது மேல்முறையீட்டை தொடர்ந்து செய்துள்ளார். இதுவே அவருக்கு குழந்தை மீதுள்ள அக்கறை காட்டுவதாகும். எனவே, நாம் முடிவுக்கு வருவதாவது, மேல்முறை யீட்டாளர் குழந்தையின் பாதுகாப்பை எடுத்துக் கொள்ள உரிமை கொண்டவர். எனவே சாய் வருண் அவரிடம் இருக்க ஆணையிடப் படுகிறது.

33. இதற்கு இடைப்பட்ட காலத்தில் இவர் களிடையே இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. குழந்தை தந்தையின் பாதுகாப்பில் வளர்வது அவசியமாகிறது மற்றும் இது படிப்படியான முறையில் செயற்படுத்தப்பட வேண்டியது மற்றும் இவரது பள்ளியின் பாடத்திட்ட முறையும் அதிகப்படியான பிற செயற்பாடுகளும் இதனால் பாதிக்கப்படக் கூடாது.

34. நாம் கூறியதாவது, இது ஓர் ஆண்டிற் கான திட்டம் அதாவது கல்வி ஆண்டின்படி இது இப்போது தொடங்கியுள்ளது. எனவே இப்போது இக்குழந்தையை வேறு புது பள்ளிக்கு மாற்ற முயற்சிக்க கூடாது. புதிய சூழ்நிலையின், சினேகிதர்கள் பள்ளி, சுற்றுச் சூழல் மாற்றம் குழந்தைக்கு அதிக மாற்றமாக அறியப்படும். இதை அவளால் ஏற்க இயலாது. எல்லா மாற்றங்களும் உடனடியாக செய்யப்பட முடியாது.

35. மேலும், நாம் கூறியதாவது தந்தையிடம் குழந்தை வளர வேண்டும். எந்த விதத்திலும் இதற்கு அவர் ஏற்றவர் அல்ல என்று நாம் கண்டறியவில்லை என்பதில் நாம் தெளிவாக உள்ளோம். அதேநேரத்தில் பாட்டன் பாட்டி குழந்தையின் வாழ்க்கையில் பாசத்தை காட்டும் இவர்களும் முக்கியத்துவம் உடையவர்களே இவர்களது இந்த உறவுமுறை தாத்தா-பாட்டிற்கும் பேரனுக்கும் இடையேயான உறவு நன்மையானதே. இது அவர்களால் ஏற்படுத்தப் பட்டது. குழந்தைகளால் பலவகையில் ஏற்படும் கேலிக்கைகள் முதலில் பாட்டன்-பாட்டி நல்ல ஒரு பல்கலைக்கழகம் போன்றது. இவர்கள் மூலம் அவர்கள் மடியில் அமர்ந்து குழந்தைகள் பாடம் படிப்பது என்பது காலத்தால் மாற்ற இயலாததும் மதிப்புமிக்க தாகும்.

36. மேற்சொல்லப்பட்டவற்றை இயல்விக்கும் வகையில், நாம் திட்டம் தீட்டியுள்ளோம். அதாவது இவர் குழந்தையை சென்று காண்பது

உள்ளடங்கலாக வருகிற ஆண்டில் பின்வரும் குறிப்பாணை முன்னிடப்படுகிறது. மேல்முறையீட்டாளருக்காக முன்னிடப்பட்ட குறிப்பாணை.

1. நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட பணிப்புரைகளின்படி 12.6.2025 தேதியிடப்பட்ட ஆணை இதில் பணிந்தளிக்கப்படுவதாவது தற்போதைய கல்வி ஆண்டில், மேல்முறையீட்டாளர் குழந்தை கண்டு வருவது 1 மற்றும் 3ஆம் சனிக்கிழமை மற்றும் ஞாயிறு ஒவ்வொரு மாதத்திலும் மேல்முறையீட்டாளர் இந்நாட்களில் தற்காலிகமாக குழந்தையை கவனிப்பில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறார். அதாவது இந்த இரு நாட்களில் ஒன்று கூறப்பட்டது. கூடுதலாக, மேல்முறையீட்டாளர் தீபாவளி விடுமுறைகளில் கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களில், காலாண்டு தேர்வு, அரையாண்டு தேர்வு விடுமுறை நாட்களில் பெங்களூருக்கு இட்டுச் செல்ல அனுமதி அளிக்கப்படுகிறது. விடுமுறை நாட்களுக்கான மேல்முறையீட்டாளருக்கு முன் கூட்டியே எதிர்வழக்கீட்டாளர்கள் தெரிவிக்கப்பட வேண்டியது. கூடுதலாக எந்த நேரத்திலும் குழந்தையுடன் குடும்ப உறுப்பினர்கள் கைபேசி வீடியோ மூலம் பேச வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும். பள்ளி நேரங்களில் தவிர பிற நேரங்களில் அளிக்கப்படுதல் வேண்டும்.

2. இதில் பணிந்தளிக்கப்படுவதாவது அடுத்த கல்வியாண்டிலிருந்து, குழந்தையை பெங்களூரில் சேர்த்த பின்னர்) பாட்டன் பாட்டி குடும்பத்தினர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் குழந்தையை பெங்களூர் சென்று பார்த்து வரலாம். முதல் மற்றும் 3ஆம் சனிக்கிழமைகள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் ஒவ்வொரு மாதத்திலும் அந்த 2 நாட்களுக்கு குழந்தையை பெங்களூரை விட்டு வெளியே எடுத்துச் செல்லக் கூடாது.

3. ஒவ்வோர் ஆண்டிலுமான அரையாண்டு, முழு ஆண்டு விடுமுறை நாட்களில் குழந்தையை சென்னைக்கு எடுத்துச் செல்லலாம். அதாவது விடுமுறை காலங்கள் மேல்முறையீட்டாளரால் பள்ளியில் அந்த ஆண்டு கல்வி நிர்ணயிக்கப் பட்டதும்.

4. எதிர்வழக்கீட்டாளர்கள்/குடும்ப உறுப்பினர்கள் கைபேசி/வீடியோ உரையாடல் அனுமதிக்கப்படுகின்றனர்.

5. மேற்சொல்லப்பட்ட திட்ட வரையறை பணிந்தளிக்கப்படுகிறது. அதாவது மேல்முறையீட்டாளரால் அளிக்கப்பட்ட ஏவுரைகளின்படி.

37. மேலே கூறப்பட்ட திட்டங்கள் நியாயமாகவும் செயற்படுத்தக் கூடியதாகவும் காணப் படுகிறது.

38. மேற்சொல்லப்பட்ட ஆலோசனைகளின் படி ஒன்று, குறிப்பாணையில் இருந்தது. அது எதிர்வழக்கீட்டாளர்களுக்கு அளிக்கப்பட்டது. அவர்களது எதிர்வினையும் நேர்மறையாகவும் மேல்முறையீட்டாளரின் ஆலோசனைகள் ஏற்கப் படும் நிலையிலிருந்தன. எதிர்வழக்கீட்டாளர் குழந்தையை தீபாவளி விடுமுறையின்போது அதனுடன் இருக்க விரும்புவதாக கூறப்பட்டது. அவ்வாறே, கூறப்பட்டவாரான ஏற்பாடுகள் ஏற்கப்பட்டன. தீபாவளி விடுமுறையில் குழந்தையுடன் இருப்பதாக பற்றி கூறப்பட்டது. தரப்பினர்களால் இவை பின்பற்றப்படுமாறு பணிப்புரை வழங்கப்பட்டது.

37. நாம் நம்புவது வருகிற ஓராண்டில் புதிய உறவுகள் ஏற்படும் இதன் முடிவில் நீதிமன்றம் இடையீடு செய்து இந்த சென்று காணும் உரிமை பற்றி எடுத்துக் கூறும் அவசியம் ஏற்படாது. இவை நடைபெறாது என்று நம்பிக்கை மேல்முறையீட்டாளர் குழந்தைக்கு எதிர் வழக்கீட்டாளர்களின் கவனிப்பும் நலன்களும் நல்ல முறையில் கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும் மற்றும் பிற உறுப்பினர்கள் அதாவது தாயின் குடும்பத்தினரிடமிருந்தும் நல்ல கவனிப்பு இருத்தல் வேண்டும்.

40. இந்த மேல்முறையீடு அனுமதிக்கப் படுகிறது. மேல்முறையீட்டாளரிடம் குழந்தை ஒப்படைக்கப்படுகிறது. மேற்சொல்லப்பட்ட இணைப்பு உடனடியாக அமுலுக்கு வரும். செலவுத் தொகையின்றி.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# திறன்வாய்ந்த மருத்துவரை தொழிற்சாலை தொழிலாளர் போல் நடத்தக் கூடாது

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: நீதிபதி திரு.என்.ஆனந்த் வெங்கடேஷ்
Arb.O.P.(Com.Div) No.708/2025
தீர்ப்பு ஒத்திவைப்பு: 18-02-2026
தீர்ப்பு பகரப்பட்டது: 23-02-2026

மியாட் மருத்துவமனை பி.லிட் – சார்பாற்றம்
அங்கீகார முகவர் திரு பி.எஸ்.விஜயசங்கர்,
மணப்பாக்கம், சென்னை 89 ...மனுதாரர்

–எதிர்–

மருத்துவர் பலராமன் பழனியப்பன்,
ஆற்காடு சாலை, வடபழனி, சென்னை 26 ...எதிர்மனுதாரர்

**வேண்டுகை**: 08.9.2022 தேதியிட்ட தொழிற் முறை ஒப்பந்தம் தொடர்பாக மனுதாரருக்கும் பிரதிவாதிக்கும் இடையிலான தகராறுகளைத் தீர்ப்பதற்கு ஒரு தனி நடுவரை நியமிக்கவும், இந்த மனுவின் செலவை பிரதிவாதி ஏற்க உத்தரவிடவும் கோரி, 1996 ஆம் ஆண்டு நடுவர் மற்றும் சமரசச் சட்டத்தின் பிரிவு 11(6) இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது.

**திரு பி.எஸ்.சுமன், வழக்கறிஞர்**
**மனுதாரருக்காக**

**திரு எஸ்.இளமுருகன், வழக்கறிஞர்**
**எதிர்மனுதாரருக்காக**

## ஆணை

இந்த மனு, 1996 ஆம் ஆண்டு நடுவர் மற்றும் சமரசச் சட்டம், 1996 (சுருக்கமாக 'சட்டம்')இன் பிரிவு 11(6) கீழ் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. 08.09.2022 அன்று செய்யப்பட்ட தொழில்முறை ஒப்பந்தத்திலிருந்து உருவான மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையே யான தகராறுகளை தீர்க்க ஒரே ஒருவரை நடுவர் ஆக நியமிக்க வேண்டுகை செய்யப்பட்டுள்ளது.

2. இரு தரப்பினரின் வாதங்களும் கேட்டறியப் பட்டன.

3. மனுதாரரின் வழக்கு பின்வருமாறு:

i) மனுதாரர் மியாட் சர்வதேச மருத்துவ மனை, சென்னை என்ற பெயரில் ஒரு மருத்துவ மனையை நடத்தி வருகிறார். 2022 செப்டம்பர் மாதத்தில், குறுகிய மற்றும் நீண்டகால வெளி நாட்டு பணியிடங்களுக்கு அனுப்பப்படக் கூடிய (கார்டியோ–தோராசிக்) இருதய சிறப்பு அறுவை சிகிச்சை நிபுணரை தேடிக் கொண்டிருந்தது அந்த மருத்துவமனை. எதிர்மனுதாரர் மருத்துவர் தனது தொழில்முறை சேவைகளை மருத்துவ மனைக்கு வழங்க ஒப்புக்கொண்டார். அவரது திறமையில் திருப்தியடைந்த மனுதாரர்,2.09.2022 அன்று வேலை வாய்ப்பு கடிதத்தை அனுப்பினார். அதில், மூன்று ஆண்டுகள் சேவை வழங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமெனவும், அதில் வெளிநாட்டு பணிகள், கிளை மருத்துவ முகாம்கள் போன்றவை அடங்கும் எனவும் தெளிவாக குறிப்பிடப்பட்டது.

ii) எதிர்மனுதாரர் அந்த வேலை வாய்ப்பை ஏற்றுக் கொண்டு, மனுதாரர் மருத்துவமனை யில் சேர ஒப்புக்கொண்டார். 08.09.2022 அன்று இருவரும் தொழில்முறை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அதன்படி, எதிர்மனுதாரர் மருத்துவர் கார்டியோ–தோராசிக் அறுவை சிகிச்சை நிபுணராக நியமிக்கப்பட்டார். ஒப்பந்தத்தில் வெளிநாட்டு பணியிடங்கள் குறித்து குறிப்பிட்ட விதிமுறைகள் இருந்தன. அதன்படி, மனுதாரர் அவரை பிஜி (Fiji) நாட்டிற்கு பல குறுகிய கால பணிகளுக்கு அனுப்பினார்.

iii) சுமார் 2 ஆண்டுகள் 7 மாதங்கள் பணியாற்றிய பிறகு, 21.04.2025 அன்று

எதிர்மனுதாரர் தனிப்பட்ட காரணங்களுக்காக ராஜினாமா செய்ய விருப்பம் உள்ளதாக மின்னஞ்சல் மூலம் தெரிவித்தார். இதன் மூலம் 08.09.2022 ஒப்பந்தத்தை அவர் முடிவுக்கு கொண்டுவந்தார்.

iv) இந்த தகவலை பெற்ற மனுதாரர், ஒப்பந்தத்தின் பிரிவு 10.2–ஐ சுட்டிக்காட்டி பதில் அளித்தார். அந்த பிரிவின்படி, ஒப்பந்தத்தை முடிக்க 3 மாத முன் அறிவிப்பு அல்லது அதற்குப் பதிலாக 3 மாத தொழில்முறை கட்டணத்தை செலுத்த வேண்டும் எனக் கூறப்பட்டது. ஆனால், இதற்கு எதிர்மனுதாரரிடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை.

v) பின்னர், எதிர்மனுதாரர் அப்பல்லோ சிறப்பு மருத்துவமனையில் சேர்ந்துள்ளார் என்று மனுதாரருக்கு தெரிய வந்தது. இது ஒப்பந்தத்தின் பிரிவு 8.3–ஐ மீறும் செயல் என அவர் கூறுகிறார். எனவே, பிரிவுகள் 10.2 மற்றும் 8.3 மீறப்பட்டதாகவும், இது ஒப்பந்த மீறலாகும் என்றும் மனுதாரர் குற்றஞ்சாட்டு கிறார். இதனால், ஒப்பந்தத்தின் பிரிவு 2.3–இன் படி, ரூ.42 லட்சம் (3 மாத தொழில்முறை கட்டணத்திற்கு இணையான தொகை) இழப்பீடு கோரப்பட்டது.

vi) மனுதாரர், எதிர்மனுதாரர் மேற்படி ஒப்பந்தத்தை மீறியதாகக் குற்றம் சாட்டி, ரூ.42 லட்சம் மற்றும் வட்டி கோரி சட்ட முன்னறிவிப்பு அனுப்பினார். இதற்கு எதிர்மனுதாரர் 4.6.2025 அன்று மறுப்பு பதில் அனுப்பினார்.

vii) இரு தரப்பினரும் சமரசமாக தீர்வு காண முயன்றனர். ஆனால் அது வெற்றியளிக்க வில்லை. அதன் பின்னர், 04.07.2025 அன்று சட்டத்தின் பிரிவு 21 கீழ் நடுவர் விசாரணையைத் தொடங்க மனுதாரர் அறிவிப்பு அனுப்பினார். அதில் ஒரே நடுவரின் பெயரையும் வழங்கி, பதிலளிப்பவரின் ஒப்புதலை கேட்டார். இந்த சூழ்நிலையில், ஒரே நடுவரை நியமிக்க இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

4. எதிர்மனுதாரர் எதிர்மறை பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார்.

5. எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், பல முக்கிய அம்சங்களுடன், இந்த விவகாரம் நடுவர் தீர்ப்புக்கு உட்பட்டதல்ல என்றும், இது 1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 27–ஐ மீறுவதாகவும், ஆகவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

6. இரு தரப்பினரின் வாதங்களையும் கவன மாக பரிசீலித்து, பதிவில் உள்ள ஆவணங்களை யும் இந்த நீதிமன்றம் ஆய்வு செய்துள்ளது.

7. ஒப்பந்தத்தின் பிரிவு 8–ஐ இங்கு மேற் கோள் காட்டுவது பொருத்தமானதாகும். அது பின்வருமாறு உள்ளது:

**“8. கட்டுப்பாட்டு உடன்படிக்கைகள்:**

**8.1. ரகசியத்தன்மை:** இந்த ஒப்பந்தத்துடன் தொடர்புடையதாகவோ அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் அவர்களின் கடமைகளை நிறைவேற்றும் போது அவர்களிடம் கிடைக்கவோ அறியப்படவோ செய்த அனைத்து முக்கிய தகவல்களையும் ஒப்பந்தப் பெறுபவர் ரகசிய மாக வைத்திருக்க ஒப்புக்கொள்கிறார். அவை இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்; சட்டம் அவசியப்படுத்தும் நிலையைத் தவிர, ஒப்பந்த தாரரின் முன்கூட்டிய அனுமதி இல்லாமல் எந்த மூன்றாம் தரப்புக்கும் வெளியிடக்கூடாது.

**8.2. பணியாளர்களை இழுத்துச் செல்லாமை:** இந்த ஒப்பந்தத்தின் காலப்பகுதியில் மற்றும் அதன் பின்னர் 3 (மூன்று) ஆண்டுகள் வரை, ஒப்பந்தப் பெறுபவர் நேரடியாகவோ மறைமுக மாகவோ, ஒப்பந்ததாரரின் பணியாளர்கள்/ உறுப்பினர்கள்/தொழிலாளர்களை அவர்களது வேலை/சேவை ஒழுங்கை விட்டு வெளியேறச் செய்வதற்காக வேலை வாய்ப்பு வழங்கவோ அல்லது ஒப்பந்தம் செய்யவோ முயற்சிக்கக் கூடாது என ஒப்புக் கொள்கிறார்.

**8.3. போட்டியிடாமை:** இந்த ஒப்பந்தம் முடிவடைந்த பிறகு 3 (மூன்று) ஆண்டுகள் வரை, சென்னை நகரில் உள்ள ஒப்பந்ததாரரின் மருத்துவமனைக்கு 15 கி.மீ. சுற்றளவில் எந்த போட்டி மருத்துவமனையிலும் சேரவோ அல்லது தனியார் மருத்துவப் பயிற்சியை தொடங்கவோ கூடாது என ஒப்பந்தப் பெறுபவர் ஒப்புக்

கொள்கிறார். இந்த நிபந்தனை மீறப்பட்டால், ஒப்பந்தத்தின் பிரிவு 2.3–ல் குறிப்பிடப்பட்டுள்ள படி, மற்ற உரிமைகள் மற்றும் நிவாரணங்களுக்கு பாதிப்பு இல்லாமல், முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டை செலுத்த ஒப்புக் கொள்கிறார்.

**8.4. தொடர்ச்சி:** வேறுவிதமாக ஒப்புக் கொள்ளப்படாதவரை, இந்த ஒப்பந்தத்தின் பிரிவு 8–இன் கீழ் ஒப்பந்தப் பெறுபவரின் கடமைகள், ஒப்பந்தம் முடிவடைந்த பின்னரும் தொடரும்.

8. மேலும், ஒப்பந்தத்தின் பிரிவுகள் 10.1 மற்றும் 10.2–ஐ மேற்கோள் காட்டுவது பொருத்தமானதாகும். அவை பின்வருமாறு:

**''10. ஒப்பந்த முடிவு**

**10.1. ஒப்பந்ததாரர்:** குறைந்தபட்சம் 1 (ஒரு) மாதம் முன்பாக எழுத்து மூலம் அறிவிப்பு அளித்தோ அல்லது அதற்குப் பதிலாக 1 (ஒரு) மாத தொழில்முறை கட்டணத்தை செலுத்தியோ இந்த ஒப்பந்தத்தை முடிவிற்கு கொண்டுவரலாம்.

**10.2. ஒப்பந்தப் பெறுபவர்:** குறைந்தபட்சம் 3 (மூன்று) மாதம் முன்பாக எழுத்து மூலம் அறிவிப்பு அளித்தோ அல்லது அதற்குப் பதிலாக 3 (மூன்று) மாத தொழில்முறை கட்டணத்தை செலுத்தியோ இந்த ஒப்பந்தத்தை முடிக்கலாம்.''

9. தொழிலால் மருத்துவரான எதிர்மனுதாரரை, மனுதாரர் மருத்துவமனையின் ஒரு சாதாரண ஊழியராக கருத முடியாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், ஒரு மருத்துவர் வழங்கும் சேவையின் இயல்பின் படி, ஒரு மருத்துவமனை அதிகபட்சமாக அவரின் சேவைகளை பயன்படுத்த மட்டுமே முடியும்; ஒரு தகுதி பெற்ற மருத்துவரை ஒரு நிறுவனத்தின் வழக்கமான ஊழியரைப் போல நடத்த முடியாது.

10. மனுதாரர் சார்ந்திருக்கும் பிரிவு 8, ரகசியத்தன்மை, பணியாளர்களை இழுத்துச் செல்லாமை மற்றும் போட்டியிடாமை போன்ற உடன்படிக்கைகளை குறிக்கிறது. ஒரு மருத்துவருடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் இப்படிப்பட்ட பிரிவை மருத்துவமனை சேர்த்திருப்பது வருத்தத்துக் குரியது. இது தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களது ஊழியர்களுடன் செய்யும் ஒப்பந்தங்களில் இருந்து வெட்டி–ஒட்டி சேர்க்கப்பட்டதா, அல்லது மருத்துவமனை தாங்கள் நோயாளிகளை சேவை செய்யும் நிறுவனம் என்பதை மறந்து, தாங்கள் ஒரு சாதாரண லாப நோக்க நிறுவனமாக செயல் படுவதாக மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார்களா என்பதே கேள்வியாகிறது.

11. மருத்துவர்களை நோக்கி மனுதாரர் காட்டிய அணுகுமுறையை கருத்தில் கொண்டு, இந்த நீதிமன்றம் இத்தகைய கடுமையான கருத்தை தெரிவிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. மருத்துவர்கள் தங்கள் நோயாளிகளுக்கான கடமைகளை நிறைவேற்ற தகுதியும் திறமையும் கொண்டவர்கள். மருத்துவமனைகள் அவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிப்பதோ அல்லது அவர்களை ஆயத்தப்படுத்துவதோ இல்லை. மாறாக, மருத்துவமனைகளே தங்களது செயல்பாடுகளை திறம்பட நடத்த மருத்துவர்களின் சேவைகளை பயன்படுத்துகின்றன.

12. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மருத்துவர்கள் மருத்துவமனைகள் இல்லாமலும் செயல்பட முடியும்; ஆனால், மருத்துவர்களின் சேவை இல்லாமல் ஒரு மருத்துவமனை ஒரு போதும் இயங்க முடியாது. எனவே, எந்த விதத்திலும், ஒரு மருத்துவமனை மருத்துவரை தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளி அல்லது தொழில்நுட்ப துறையில் பணிபுரியும் சாதாரண ஊழியர் போல நடத்த முடியாது.

13. பிரிவு 8–ஐ கவனமாகப் படித்தால், மனுதாரர் மருத்துவமனையில் பணியாற்றும் ஒரு மருத்துவர், ஒப்பந்த காலம் முடிந்த பின்னரும் 3 ஆண்டுகள் வரை ரகசியத்தைப் பாதுகாக்க வேண்டும்; மேலும், மருத்துவமனையின் பணியாளர்கள்/உறுப்பினர்கள்/தொழிலாளர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ அணுகக்கூடாது; மேலும், மனுதாரர் ''போட்டி மருத்துவமனை'' எனக் கருதும் எந்த மருத்துவமனையிலும் சேரக்கூடாது; அல்லது மனுதாரர் மருத்துவமனையிலிருந்து 15 கி.மீ சுற்றளவில் தனியார் மருத்துவப் பயிற்சி தொடங்கக்கூடாது;

இந்த நிபந்தனைகளை மீறினால், முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டை செலுத்த வேண்டும் என்பதும் தெரிகிறது.

14. இந்த நீதிமன்றத்தின் கருத்துப்படி, எதிர் மனுதாரர் அப்பல்லோ சிறப்பு மருத்துவமனை யில் சேர்ந்ததன் மூலம், அவர் போட்டி மருத்துவ மனையில் சேர்ந்துள்ளார்; இதனால், மனுதாரரிடம் வந்திருக்க வேண்டிய நோயாளிகளை அவர் திசைதிருப்ப முயற்சிக்கிறார்; மேலும், அவர் ரகசிய தகவல்களையும் அங்கு வெளியிடுவார் என மனுதாரர் கருதுகிறார்.

15. இந்த அணுகுமுறை, ஒரு மருத்துவரின் உயர்ந்த நிலையை தாழ்த்தி குறைத்து மதிப்பிடுவ தாக அமைகிறது. ஒரு மருத்துவர் சுயாதீன நிபுணர்; அவர் எங்கு வேண்டுமானாலும் தனது சேவைகளை வழங்குவதில் தடையில்லை. மேலும், முன்பு மனுதாரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நோயாளிகளை அவர் பார்த்து சிகிச்சை அளிப்பதையும் தடுக்க முடியாது. மருத்துவமனைகள் இயங்கும்போது, ''போட்டி மருத்துவமனை'' என்ற கருத்தே இல்லை; ஒவ்வொரு மருத்துவமனையும் தனித்தனி அமைப்பாக, நோயாளி களுக்கும் சமூகத்திற்கும் சேவை செய்வதற்காகத் தான் உருவாக்கப் பட்டுள்ளது.

16. மருத்துவமனைகளுக்கிடையேயான போட்டி என்ற கருத்து தவறானது. இது வர்த்தக உலகில் பயன்படுத்தப்படும் சொல்; அதை மருத்துவ சேவைக்கு பயன்படுத்த முடியாது. ஒரு மருத்துவமனை, தன்னை ஒரு வணிக நிறுவனம் போல காட்டிக்கொள்ளக் கூடாது, நிஜத்தில் அவ்வாறு இருந்தாலும் கூட. மருத்துவர்கள் பல மருத்துவமனைகளில் சேவை வழங்குவது வழக்கமானது; அவர்களின் சுயாதீனத்தை இத்தகைய ஒப்பந்தக் கட்டுப்பாடுகள் மூலம் கட்டுப்படுத்த முடியாது.

17. உதாரணமாக, ஒரு சட்ட நிறுவனம் ஒரு வழக்கறிஞரை நியமிக்கிறது என வைத்துக் கொள்வோம். அந்த வழக்கறிஞர் நிரந்தர ஊதியம் பெற்று அந்த நிறுவனத்தின் பணி களைச் செய்தாலும், பின்னர் அவர் அந்த நிறுவனத்தை விட்டு வெளியேறிய பிறகு தனியாகப் பயிற்சி செய்யவோ அல்லது வேறு நிறுவனத்தில் சேரவோ முடியாதென்று சொல்ல முடியாது. ஏனெனில், ஒரு சட்ட நிறுவனம் மற்றொன்றை போட்டியாளராகக் கருத முடியாது. இதே நிலை மருத்துவமனைகளுக்கும் பொருந்தும். எனவே, போட்டியில்லாத என்றொரு பிரிவு ஒரு மருத்துவர் மற்றும் மருத்துவமனை இடையே யான ஒப்பந்தத்தில் இடம்பெற முடியாது.

18. அதேபோல், முன்பு ஒரு சட்ட நிறுவனத்தின் சேவையைப் பயன்படுத்திய வாடிக்கையாளர், பின்னர் அந்த நிறுவனத்தில் பணியாற்றிய வழக்கறிஞரை அணுகினாலும், அது வேண்டுகோள் அல்லாத ஒப்பந்தப் பிரிவை மீறுவதாக கருத முடியாது. நோயாளி அல்லது வாடிக்கையாளர், தன்னம்பிக்கை உள்ள நிபுணரையே தேர்வு செய்வார். இது மருத்துவர் அல்லது வழக்கறிஞர் போன்ற நிபுணர்களின் பணியின் இயல்பாகும்.

19. இந்நிலையில், இந்த நீதிமன்றம் சட்டத்தின் பிரிவு 7–ஐ கவனத்தில் கொள்ள வேண்டும். நடுவரை நியமிக்க விரும்பும் தரப்புகள், முதலில் ஒரு ஒப்பந்தம் இருப்பதை நிரூபிக்க வேண்டும்; அது எழுத்து வடிவில் இருக்க வேண்டும்; இரு தரப்பினராலும் கையெழுத்திடப்பட்டிருக்க வேண்டும்; மேலும் அதில் நடுவர் பிரிவு தொடர்பான ஷரத்து இருக்க வேண்டும். இந்த நான்கு அம்சங்களும் செல்லு படியாகும் நடுவர் ஒப்பந்தத்திற்கு அவசிய மானவை.

20. பிரிவு 7–ன் கீழ் வரும் ஒப்பந்தம், சட்டபூர்வமானதும் செல்லுபடியாக இருப்பதும் அவசியம். அது இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872–ன் பிரிவு 23–க்கு எதிராக பொதுக் கொள்கைக்கு முரணானதாக இருந்தாலோ, அல்லது பிரிவு 27–ன் கீழ் ஒருவரை அவருடைய சட்டபூர்வமான தொழிலைச் செய்யத் தடுப்பதாக இருந்தாலோ, அந்த ஒப்பந்தம் ஆரம்பத்தி லிருந்தே செல்லாது. அத்தகைய ஒப்பந்தத்தில் உள்ள நடுவர் பிரிவும் நடைமுறையில் அமல் படுத்த முடியாது.

21. இதற்கு ஷின் சேட்டமலைட் பப்ளிக் கம்பெனி லிட் –எ– ஜெயின் ஸ்டூடியோஸ் லிட்

என்ற வழக்கின் உச்சநீதிமன்ற தீர்ப்பை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.

22. ஒரு மருத்துவர் மற்றும் மருத்துவமனை இடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் வேண்டுதல் இல்லாதது அல்லது போட்டியில்லாதது போன்ற பிரிவுகள் இடம்பெற்றிருந்தால், அது பொதுக் கொள்கைக்கு எதிரானது; எனவே அது இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872-ன் பிரிவு 23-க்கு உட்பட்டு செல்லாததாகும்.

23. மேலும், இத்தகைய பிரிவுகள் பிரிவு 27-க்கும் எதிரானவை; ஏனெனில், அவை ஒரு மருத்துவரை தனது தொழிலைச் செய்யத் தடுக்கும், குறிப்பாக ஒப்பந்தம் முடிந்த பிறகும் அந்தத் தடைகள் தொடர முயல்கின்றன.

24. மனுதாரர், ஒப்பந்தத்தின் பிரிவுகள் 8.2 மற்றும் 8.3-ஐ அடிப்படையாகக் கொண்டு, எதிர்மனுதாரர் ஒப்பந்தத்தை மீறியதாக கூறு கிறார். ஆனால், இந்த நீதிமன்றத்தின் கருத்துப் படி, அந்த பிரிவுகள் சட்டரீதியாக அமல்படுத்த முடியாதவை ஆகும்.

25. எனவே, இந்த நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டிய ஒரே விஷயம், பிரிவு 10.2 மீறப் பட்டதா என்பதுதான். அந்தப் பிரிவைப் பொறுத்த வரை, 3 மாத முன் அறிவிப்பு அல்லது அதற்குப் பதிலாக 3 மாத கட்டணம் செலுத்த வேண்டும் எனக் கூறுகிறது.

26. பதிவுகளில் இருந்து தெரியவருவது யாதெனில், எதிர்மனுதாரர் 29.1.2024 அன்று ராஜினாமா கடிதம் கொடுத்து, 29.4.2024 அன்று பணியிலிருந்து விடுவிக்க கோரினார். இது தெளிவாக 3 மாத முன் அறிவிப்பாகும். பின்னர், மனுதாரர் கேட்டதால், அவர் பிஜி அயல் பணிக்குச் சென்று மருத்துவ சிகிச்சை பணி மேற்கொண்டுள்ளார். அதன் பிறகு, 21.4.2025 அன்று அவர் வெளியேற விருப்பம் இருப்பதை மீண்டும் தெரிவித்திருக்கிறார்.

27. மனுதாரர், 21.04.2025 மின்னஞ்சலை மட்டுமே ராஜினாமா எனக் கருதி, 29.01.2024 கடிதத்தைப் புறக்கணிக்கிறார். ஆனால், உண்மை யில் முன்னதாகவே சரியான அறிவிப்பு வழங்கப் பட்டுள்ளது. அதன் பின்னரும் சேவை செய்த தற்காக, மருத்துவருக்கு எதிராக ஒப்பந்த மீறல் போல் பொதுவர் முன்பான நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப்படுகிறது.

28. இந்த நீதிமன்றம், மனுதாரரை சமரசம் செய்யத் தூண்டியது.

29. பதிலளிப்பவர் சார்பில், பிரிவு 10.1-ன் படி, ஒரு மாத கட்டணம் செலுத்தத் தயார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

30. இருந்தபோதிலும், பெரிய நிறுவனம் என்ற நிலையை பயன்படுத்தி, மனுதாரர் இந்த விவகாரத்தை நடுவர் விசாரணைக்கு கொண்டு செல்ல முயற்சிக்கிறார்.

31. ஆவணங்களைப் பொருத்தவரை, எதிர் மனுதாரர் 3 மாத முன் அறிவிப்பை வழங்கி யுள்ளார். எனவே, தீர்க்க வேண்டிய எந்தத் தகராறும் இல்லை. இந்த மனு ஆதாரமற்றது; மருத்துவரை அநியாயமாக குறிவைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

32. எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யப் படுகிறது. மேலும், மனுதாரர் மருத்துவமனை, எதிர்மனுதாரருக்கு ரூ.1,00,000/- (ஒரு லட்சம் ரூபாய்) செலவினமாக வழங்க வேண்டும்.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**


**ரூ.900/-**
**பணம் செலுத்தி**
**சட்டக்கதிர்**
**ஆண்டு**
**சந்தாதாரர்**
**ஆகுங்கள்**

# வழக்கும் நடைமுறையும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.பி.பி.பாலாஜி**
**உ.சீ.ம.(PD) எண் 2096/2023, உ.ப.ம.எண் 12825/2025**
**நாள்: 8.8.2025**
**2025 (5) CTC 38**

**வெல்பா பன்னாட்டு (தனி) வரம்பிடப்பட்டது சார்பாற்றம் அதன் மேலாண்மை இயக்குநர், வி.இலங்கேஸ்வரன் ...மனுதாரர்கள்**

**–எதிர்–**

**பிரியதர்ஷிணி**
**2. மைனர் அக்ஷே சார்பா. அவர்களது தாய்/காப்பாளர் பிரியதர்ஷிணி**
**3. ஜெ.சாந்தா ஜெயச்சந்திரன்**
**4. டி.ஜெயச்சந்திரன்**
**5. மந்திரகிரி டெக்ஸ்டைல்ஸ்**
**6. ஏ. கூட்டாண்மை நிறுவனம் சார்பாற்றம் அதன் கூட்டாண்மையாளர்கள் எஸ். பாலசுப்பிரமணியம் மற்றும் பி. காளிமுத்து ...எதிர்வழக்கீட்டாளர்கள்**

என். மனோகரன் மனுதாரரின் வழக்கறிஞர்

எஸ். முகுந்த் மற்றும் மெசர்ஸ் சர்வபூமன் அசோசியேட்ஸ், 1, 2இன் எதிர்வழக்கீட்டாளர்கள்.

வி.சிவகுமார் எதிர்வழக்கீட்டாளர் எண் 5 வழக்கறிஞர் மற்றும் எதிர்வழக்கீட்டாளர்கள் எண்கள் 3, 4க்காக எவரும் முன்னிலையாக வில்லை.

உ.சீ.ம. தள்ளுபடி செலவுத் தொகையின்றி. ப.ம. தள்ளுபடி.

**கோரிக்கை:** மு.வ.எண் 8/2016 கோயம் புத்தூரில் நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதியின் கோப்பில் உள்ளதில் இ.வி. எண் 1/2021-13-12-2022 தேதியிடப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை தள்ளுபடி செய்ய இந்த உரிமையியல் சீராய்வு மனு இந்திய அரச மைப்பின் 227ஆம் உறுப்பின்படி முன்னிடப் பட்டுள்ளது.

தீர்ப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 17.7.2025க்கு வெளியிடப்பட்டது 8.8.2025 அன்று.

## தீர்ப்பு

1. இந்தச் சீராய்வு மனு வாதியால் முன்னிடப் பட்டது. மு.வ.எண் 8/2016இன் மு.மே.எண் 1/2021இன் ஆணையைத் தள்ளுபடி செய்யக் கோரி மற்றும் இதன் மூலம் வாதி 1908 உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் 151ஆம் பிரிவின்படி வாதி பணிப்புரை வழங்கக் கோரியுள்ளார். அதாவது விற்பனை ஆவணம் 28.4.2021 தேதியிட்டதை அதாவது ஆவணம் 7351/2021 எஸ்.ஆர்.ஓ. பல்லடத்தில் உள்ளதை தள்ளுபடி செய்யப் பணிக்க கோரப்பட்டது.

2. நாள், சீராய்வு மனுதாரரின் வழக்கறிஞர் திரு.என்.மனோகரன் மற்றும் எதிர்வழக் கீட்டாளர்கள் 1, 2 இன் வழக்கறிஞர்கள் திரு.எஸ்.முகுந்த் மற்றும் மெசர்ஸ் சர்வபூமன் அசோசியேட்ஸ் மற்றும் திரு. வி. சிவகுமார் 5ஆம் எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்களை நான் கேட்டறிந்துள்ளேன்.

3. இவர்களது வாதங்களின் மொத்தச் சுருக்கமாவது, திரு.என். மனோகரன், சீராய்வு மனுதாரரின் வழக்கறிஞர் பணத்தை வசூலிப்ப தற்கான வழக்கு, எதிர்க்கும் எதிர்வாதி உறுதி மொழியளித்து பிணைய தன்மையானதை அளித்துள்ளார். அதாவது உரிமையியல் வகை முறை தொகுப்புச் சட்டத்தின் வகைமுறைகளின் படி கட்டாயமாக கூறப்பட்டிருப்பதன்படி மற்றும்

அதன் பின்னர், இதன் மீறுகையாக மொத்த அத்துமீறல் சொல்லப்பட்ட உறுதிமொழிக்கு எதிராக அதாவது எதிர்வாதிகளால் கொடுக்கப் பட்டது மீறப்பட்டுள்ளது. எதிர்வாதிகள் 5ஆம் எதிர்வழக்கீட்டாளர் சார்பாக. சொத்தினை வகை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன் காரணமாக, வாதி இடைநிலை எதிர்செயலுக் கான விண்ணப்பத்தினை எடுத்துள்ளனர். இ.வி. எண் 1/2021. எனினும் விசாரணை நீதிமன்றம் சொல்லப்பட்ட விண்ணப்பத்தினைத் தள்ளுபடி செய்துள்ளது. அதற்கான காரணமாவது, சட்டத்தின்படி அதற்கான தனி பரிகாரம் வகுத்து ரைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த விண்ணப்பத்தில் எந்த நற்குறிப்பும் இல்லை. சொல்லப்பட்ட இ.வி.எண் 1/2021 தள்ளுபடி செய்யப் படுகிறது.

4. சீராய்வு மனுதாரரின் வழக்கறிஞர் திரு.என்.மனோகரன் உ.வி.தொ.ச.இன் கட்டளை 38 விதி 5இன்படி முன்னிடப்பட்ட விண்ணப்பத்தினை சுட்டுகை செய்தும் எதிர்வழக்கீட்டாளர்களினால் அளிக்கப்பட்ட சொல்லப்பட்ட விண்ணப்பத்தில் உள்ள உறுதிமொழியின்படியும் வாதமாவது எதிர்வழக்கீட்டாளர்கள் 1, 2இன் நடத்தைப்படி இவை ஏற்கப்பட முடியாது அல்லது தவறென்று ஒதுக்கப்படவும் முடியாது.

5. திரு.என்.மனோகரனுக்கிணங்க வழக்கறிஞர் இந்த உறுதியுரையினை ஏற்க நீதிமன்றத்தினை கோரியும் இந்த வழக்கின் கோரிக்கைக்கான பிணையாக சொத்து கிடைக்கத்தக்கதாக இருக்கும் என்று கோரி எதிர்வாதிகள் இதனை பராதீனம் செய்தல் கூடாது. அதாவது வழக்கு நடப்பில் உள்ளபோது, அவர் மேலும் வாதிடுவ தாவது, இத்தகைய எதிர்வாதிகளின் நடத்தை அதாவது இவர்களுக்கு சட்டத்திற்கு உரிய மரியாதை இல்லாதபோது, நீதிமன்றம் இதனை மரணித்துவிட்டால் அது பெரிய அநீதியை இழைப்பதாக அமையும். எனவே அவர் கூறுவது விசாரணை நீதிமன்றம் எந்த வாதங்களையும் கலந்தாய்வு செய்யாது. அதாவது இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களையும் இத்தகைய புதிரானதும் நியாயமற்றதுமான ஆணையின் விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்துள்ளது. இதனை இடையீடு செய்வதை ஏற்காத வகை யின் இந்திய அரசமைப்பின் 227இன்படியான சீராய்வு உள்ளது. இந்த வாதங்களுக்கு ஆதர வாக, இந்த நீதிமன்ற முடிவுகளை ஆதாரமாகக் காட்டியுள்ளது. ஏ.பி. குருமூர்த்தி செட்டி –எதிர்– செல்லபெருமாள் பிள்ளை, 1936 (44) LW 714 மற்றும் சி. செங்கோட்டையன் –எதிர்– கே.சரவணன் 2013 (6) த.த.வ. 456.

7. மாறாக, திரு.எஸ்.முகுந்த் வழக்கறிஞர் பணிந்தளிப்பது கட்டளை 38, விதி 9இன்படி யான விண்ணப்பத்தில் உறுதியுரை அளிக்கப் பட்டிருந்தும், அதாவது தீர்ப்பிற்கு முன்பே பற்றுகை கோரியும் அவர் கூறியதாவது, தொடர்புடைய துணை பதிவாளரால் பற்றுகை ஆணை முறையாக குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி பற்றுகை விழலாகும் மற்றும் பயனற்றதாகும் என்பது.

8. இது தொடர்பாக வழக்கறிஞர் பின்வரும் வழக்குகளை ஆதாரமாகக் காட்டியுள்ளார். ஸ்ரீஹம்பி ஹேமா கோடா மற்றும் பிறர் –எதிர்– தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (CBE) வரையறுக்கப்பட்டது. கோயம்புத்தூர் பொது வரம்பிடப்பட்ட நிறுவகம் அதன் பதிவு அலுவலகம் எண் 37, மேட்டுப்பாளையம் தெரு, கோயம்புத்தூரில் உள்ளது. சார்பாற்றம் அதன் மேலாண்மை இயக்குநர் மற்றும் பிறர், 2012 (1) த.த.வ. 407, (2011) உச்.நீ.வ. வலைதளம் சென். 1709 மற்றும் ஸ்ரீகிருஷ்ணா சிட் நிதியங்கள் (சாத்தூர்) தனியார் வரம்பிடப்பட்டது. சாத்தூர் அதன் அலுவலகம் கதவு எண் 19, பிள்ளையார் கோயில் தெரு, சாத்தூர் டவுன் மற்றும் தாலுக்கா அதன் மேலாண்மை இயக்குநர் மூலமாக திருமதி ஆர்.உமையாள் –எதிர்– ஆர்.எஸ். பிள்ளை மற்றும் பிறர், 2000 (2) த.த.வ. 524, (2000) உச்.நீ.வ. வலைதளம், சென்னை 336. எனவே வழக்கறிஞர் கூறிய தாவது எதிர்வாதிகளுக்கு சொத்துக்களை வகை செய்ய எந்த இடர்பாடும் இல்லை. ஏனெனில் வாதியால் உ.வி.தொ.ச.இன் கட்டளை 38இன் விதி 11(ஆ) கட்டாயப்படுத்தும் இதனை இணங்கி நடக்கவில்லை. எனவே இதனால் சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்படும்.

9. இந்த வாதங்களுக்கு ஆதரவாக எதிர் வாதிகள் 1, 2இன் வழக்கறிஞர் திரு.வி.சிவ குமார் 5ஆம் எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் இந்த உறுதியுரை தொடர்பாக என் கவனத்தை ஈர்த்துள்ளார். இதில் உறுதியுரை வழக்கின் கோரிக்கைக்கு மிகையானது அளிக்கப்பட்டுள்ளது. எனவே, வாதிட்டதாவது சொல்லப்பட்ட உறுதி யுரை சூழ்நிலைக்கு பொருந்தாத நிலையில் உள்ளது என்பது. மேலும் அவர் கூறியதாவது. 5ஆம் எதிர்வழக்கீட்டாளர் மதிப்புக்காக நல்லெண்ணத்துடன் வாங்கியவர் ஆவார். இவர் போதிய அளவிலான விற்பனை மறுபயனை அளித்துள்ளார். மேலும் உடைமையையும் எடுத்துள்ளார்; மற்றும் தாவாவில் உள்ள சொத்தில் ஒரு புதிய கட்டுமானத்தையும் ஏற்படுத்தி யுள்ளார். இவர் கூறுவதாவது வழக்கிடை மாற்றம் தீர்ப்பெதிர் செல்லாது என்றும் கோட்பாட்டின்படி, 5ஆம் எதிர்வழக்கீட்டாளரின் வாங்குதலை பாதிக்காது என்பது, ஏனெனில் வழக்கானது, பண வசூலுக்கான ஒன்று மற்றும் துணைப் பதிவாளர் முன்பு அந்த ஆணை பற்றிய குறிப்பு அனுப்பப்படவில்லை. இதன் விளைவாக 5ஆம் எதிர்வழக்கீட்டாளர், தாவாவில் உள்ள சொத்தினை வாங்கியதாக பழி கூற முடியாது. அதாவது அது வில்லங்கம் இல்லாததாக.

10. தரப்பினர்களின் வழக்கறிஞர்களினால் பணிந்தளிக்கப்பட்டவற்றை நான் கவனமாக கருதுகை செய்துள்ளேன்.

11. ஏற்கப்பட்டவாறு நான் காண்பது வழக்கானது ரூ.50,00,000 தொகையை வசூலிப்பதற்காக போடப்பட்டுள்ளது. அத்துடன் ஆன ஆண்டுக்கு வட்டி 12 சதவீதம் என்ற வீதத்தில் ரூ.67,00,000 மொத்தமாக. இதில் செயற்படு காரணம், வழக்கின் அடிப்படை உடன்பாட்டு ஒப்பந்த குறிப்பு அடிப்படை யிலானது. இது 26.11.2012 தேதியிடப்பட்டது. இது வாதிக்கும் எதிர்வாதிகளுக்குமிடையே ஆனது மற்றும் கணவனின் தவறுதல் என்று கூறப்படுவது மற்றும் எதிர்வாதிகளின் தந்தை வித்யபிரகாஷ் வாதி உடன்பாட்டு ஒப்பந்தக் குறிப்பின்படி செலுத்தப்பட்ட உடன்பாட்டு ஒப்பந்தக் குறிப்பின்படி செலுத்தப்பட்ட பணத்தினை திருப்பியளிக்க கோரியுள்ளார். பொருண்மை யின்படி இதில் வாதிடப்பட்டதாவது, வழக்கறிஞர் திரு.எஸ்.முகுந்த தட்டச்சுத் தாள்கள் சீராய்வு மனுதாரர்/வாதியால் நீதிமன்றத்தில் முன்னிடப் பட்டவற்றில், 22.1.2017 தேதியிடப்பட்ட பிந்திய உடன்பாட்டு ஒப்பந்த குறிப்பு பற்றிய எந்தச் சுட்டுகையும் இல்லை. அதாவது வாதிக்கும் முதல் பற்றிய எந்தச் சுட்டுகையும் இல்லை. அதாவது வாதிக்கு முதல் எதிர்வாதிக்கும் இடையேயானதில் இதன் மூலம், தரப்பினர்கள் அவர்களுக்கிடையேயான மூல ஒப்பந்தத்தை பதிலீடு செய்துள்ளார். எனவே வாதி வழக்கினை முன்னிட முடியாது மற்றும் வழக்கு முதிர்ச்சி யடையா நிலை.

12. இந்தத் தொடர்பில், இரண்டு உடன்பாட்டு ஒப்பந்தங்களில் உள்ள பல்வேறு கூறுகளைச் சுட்டியுள்ளார். எனினும், பொருண்மையானது, உள்ளபடியே இந்த விண்ணப்பத்தில் உறுதி ஏற்பு உறுதியுரை முன்னிடப்பட்டிருந்தபோதிலும், இது தீர்ப்புக்கு முன்னரே பற்றுகை செய்வ தற்கானது. இதில் முதல் எதிர்வாதி, வித்யப் பிரகாஷின் மனைவி கூறியுள்ளதாவது, நீதிமன்றம் அவளைப் பணித்துள்ளதாவது பிணையை அளிக்குமாறு, அதாவது ரூ.4,29,00,000 பெருமளவிற்கு மற்றும் இதில் வழக்கின் கோரிக்கை பொய்யானது. முதல் எதிர்வாதி, கூறியுள்ளதாவது அவளை கட்டுப்படுத்திக் கொள்ள அவள் ஆயத்தமாக உள்ளதாகவும் மற்றும் அவளது வாரிசுகளையும் அவள் கட்டுப்படுத்துவதாக அவளால் தேவைக்கேற்ப பிணை அளிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டது. அதாவது இணைப்பில் குறித்துரைக்கப்பட்ட சொத்து தொடர்பாக, இதுவே தீர்ப்பாணையை நிறைவேற்ற போதியதாக அமையும் என்பது. இந்த உறுதியுரை 18.11.2016 தேதியிடப் பட்டது. சொல்லப்பட்ட உறுதியுரை 22.11.2017 தேதியிடப்பட்ட இரண்டாம் உடன்பாட்டு ஒப்பந்தக் குறிப்புக்கு முன்னர் முன்னிடப்படுகிறது. இதன் மூலம் எதிர்வாதிகள், மற்றுமொரு சொத்தினை பிணையாக அளிக்க உடன்பட்டுள்ளன. அதாவது இதனை ஏற்பது தொடர்பாக வாதியின் கோரிக்கைக்கு எனினும் இதில் காணப்படும் ஆணை மற்றம் எதிர் உறுதியுரை இ.வி.எண் 1/ 2011இல் முன்னிடப்பட்டவாறு இரண்டாவது உடன்பாட்டு ஒப்பந்தக் குறிப்பு நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. எனவே, இது எதிர்வாதிகளின் தரப்பில் நியாய மற்ற செயல். இதில் வாதமாவது பிந்திய நிகழ்வுகள் பற்றி நீதிமன்றம் கவனத்தில்

கொள்ளவில்லை மற்றும் இதனை உரிய முதிர்ச்சி பெறாதது என்று விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்திருக்க வேண்டியது.

13. இந்த உறுதியுரை தொடர்பாக 5ஆம் எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் குறிப்பிட்ட தாவது இதனை அறியப்படுவதில் சரியாக புரிந்து தெரிவதாவது இந்த வழக்கின் கோரிக்கை ரூ.67 லட்சத்திற்கானது. எனவே இது தொடர்பாக ஏன் முதல் எதிர்வாதி உறுதியுரையினை முன்னிட்டுள்ளார் என்பது தெரியவில்லை. அதில் கூறப்பட்டிருப்பதாவது. அவள் ரூ.4 கோடியே 29 லட்சம் பெறுமானமுள்ள சொத்துக்களை நீதிமன்றம் வகை செய்ய முன்னிட்டுள்ளதாக கூறுகிறார். நீதிமன்றம், வகை செய்ய முன்னிட்டுள்ளதாக கூறுகிறார். நீதிமன்றம் எதிர் வாதிகளை பிணையமாக எதனையும் முன்னிடக் கோரவில்லை. அதாவது 4 கோடியே 29 லட்சம் கோரியதற்காக, இதுவும் வழக்கில் வாதியின் கோரிக்கையும் இல்லை. எனினும், பொருண்மை யாவது, முதல் எதிர்வாதி இத்தகைய உறுதி உரையினை முன்னிட முன் வந்துள்ளார் இது பற்றி இந்த நிலையில் கலந்தாய்வு செய்யத் தேவையில்லை. பொருண்மை யின்படியாவது இந்த உறுதியுரை முன்னிடப்பட்ட பின்னர், அது விசாரணை நீதிமன்றத்தினால் பெறப்பட்டதும், எந்த ஆணைகளும் பிறப்பிக்கப்படவில்லை. இந்த உறுதியுரையை ஏற்றதாக அதாவது எதிர் வாதிகள் 1, 2இனை இந்த ஏற்புரை கட்டுப் படுத்துவதாக.

14. நான் காண்பது, இந்த விசாரணை களிலிருந்து சொல்லப்பட்ட இந்த விண்ணப்பம் முன்னிடப்பட்ட பின்னர் மு.வி.எண் 11/2016, வாதி ஆணையை கோரியபோதிலும், அதாவது பிணையம் தொடர்பாக ஓர் ஆணை முன்னிடப் பட்டது தொடர்பாக. அதாவது அது தீர்ப்பாணைக்கு நிறைவு செய்ய போதுமானது என்பது தொடர்பாக. அந்த விண்ணப்பத்தின்பேரில், அறிக்கை மட்டுமே ஆணையிடப்பட்டது. அதன் பின்னர், எதிர்வாதிகள் 1 முதல் 3 வரை கூறிய தாவது. விண்ணப்பங்கள் அறிவிக்கை பெற்றது மற்றும் அது பற்றி முன்னிலைப்படுத்தப்பட்டது மற்றும் எதிர்வாதம் முன்னிடகாலம் கோரப் பட்டது. 15.11.2016 அன்று இந்த பொருட்பாடு 18.1.2016 அன்றைக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அதாவது எதிர்வாதுரை முன்னிட R1 முதல் R3 வரையிலானவர்களுக்கு அறுதியாக 18.1.2016 முதல் எதிர்வாதி உறுதியுரையுடனான ஏற்புரையை முன்னிட்டார். 1ஆம் மட்டும் 2ஆம் எதிர்வாதி களின் வழக்கறிஞர். அதே தேதியில் குறிப்பாணை ஒன்றையும் முன்னிட்டுள்ளனர். அதாவது முதல் எதிர்வாதி உறுதியுரையுடனான ஏற்புரையை முன்னிட்டார். 1ஆம் மட்டும் 2ஆம் எதிர்வாதி களின் வழக்கறிஞர். அதே தேதியில் குறிப்பாணை ஒன்றையும் முன்னிட்டுள்ளனர். அதாவது முதல் எதிர்வாதியினால் முன்னிடப்பட்ட ஏற்புரை யுடனான உறுதியுரையின் கருத்தில் மேலுமான எந்த வில்லங்கத்தையும் அந்தச் சொத்தின் பேரில் செய்ய இயலாது. ஏனெனில் அது பிணையாக அளிக்கப்பட்டுள்ளது.

15. அதன் பின்னர், இதில் காணப்படுவது, விண்ணப்பம் சீராய்வு மனுதாரர்களை வாதி தங்களது மறுப்புகளை முன்னிட இயல்விக்கும் வகையில் இது தள்ளிப் போடப்பட்டது மற்றும் இந்த பொருட்பாடு இரண்டு சந்தர்ப்பங்களில் தள்ளி வைக்கப்பட்டது. அதன் பின்னர், அதே தலைப்பின் கீழ் பின்னர், வாதுரைகள் முடிவுற்ற பின்னர், விசாரணை நீதிமன்றம் வரைவு பிரச்சினைகளை பதிவு செய்து முன்னிட்டுள்ளது. எனவே, விண்ணப்பம் முடிக்கப்பட்டது. எந்த நேரத்திலும், சொல்லப்பட்ட ஏற்புரை எதிர்வாதி களால் 1, 2 அளிக்க நீதிமன்றத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பம் மு.வி. எண் 11/2016 முடிக்கப்பட்டது. இது முதல் எதிர்வாதியால் முன்னிடப்பட்ட ஏற்புரையுடனான உறுதியுரை காரணமாக செய்யப்பட்டது. ஆனால் வாதுரைகளின் காரணமாக இது முடிக்கப்பட்டது. பிரச்சினைகள் வனையப்பட்டன.

16. சீராய்வு மனுதாரர்களின் வழக்கறிஞரின் வாதத்தில் கூறப்பட்டிருப்பதாவது எதிர்வாதிகள் நீதிமன்றத்தை, தவறாக இந்த ஏற்புரையிடனான உறுதியுரையில் தவறாக மனுதாரருக்கு கெடுதி யான முறையில் வகை செய்ய இந்த வாதங்கள் ஈர்ப்பதாக தோன்றுகிறது. பொருண்மையாவது, இந்த ஏற்புரை நீதிமன்றத்தால் பதிவு செய்யப் படவில்லை என்பது மற்றும் சீராய்வு மனுதாரர், நீதிமன்றம் ஏற்புரையை பதிவு செய்ததாக உறுதி செய்யவில்லை மற்றும் அந்த ஏற்புரையுடனான உறுதி வரையில் ஒரு பேசும் ஆணையை கூறி யுள்ளது.

17. இதில் உறுதியுரையுடனான ஏற்புரை முன்னிடப்பட்டது என்ற காரணத்தால் மட்டுமே

இந்த சொத்து வில்லங்கப்படுத்த அல்லது வகை செய்யப்படவில்லை என்பது. இது எதிர்வாதிகள் 1, 2க்கு எதிராக கொள்ளப்பட முடியாது. சொல்லப்பட்ட உறுதியுரையின்பேரில் எந்த நேர்மறையான ஆணைகளும் இல்லை என்பது அல்லது மு.வி.எண் 11/2016 தொடர்பாக விண்ணப்பத்திலும் கூற தீர்ப்பினை இணைக்க வில்லை. பொருண்மையின்படி, இந்த பொருட் பாட்டை கருதி செய்பவரும் விண்ணப்பம் பற்றி விசாரணை நீதிமன்றத்தால் வகை செய்யப் பட்டது. அதாவது உறுதியுரைடனான ஏற்புரை யில் விசாரணை நீதிமன்றம் இந்த எதிர்ப்பு தொடர்பான பொருட்பாட்டினை சீராய்வு மனுதாரர் தரப்பில் முன்னிடப்பட்டது. ஏற்கப்பட்ட பொருண்மையாவது சீராய்வு மனுதாரர் எதிர்ப்பு எதனையும் முன்னிடவில்லை. அதே நேரத்தில், சீராய்வு மனுதாரர் அவரது உரித்தத்தினை பாதுகாக்க சாமர்த்தியமாக செயற்படவில்லை. அதாவது உறுதியுரைடனான ஏற்புரையினை நீதிமன்றம் ஏற்கவும் பதிவு செய்யவும், கோர வில்லை மற்றும் மு.வி.எண் 11/2016இன் மீது தகுந்த ஆணைகளை கோரவில்லை. நீதிமன்றத்தால் என்ன ஆணையிடப்பட்டதோ அது மட்டுமே தொடர்புற்றது. எதிர்வாதிகள் ஏற்புரையுடனான உறுதியுரையினை மட்டுமே முன்னிட்டது போதியதாகாது மற்றும் அவர் களை கட்டுப்படுத்தாது. இந்த நீதிமன்றத்தினால், உறுதியுரையுடனான, ஏற்புரையை பெறப்பட்டது. ஆனால் அதன் பேரில் மேலுமான ஆணைகள் எதனையும் பிறப்பிக்கவில்லை.

18. மனுதாரரின் வழக்கறிஞரால் ஆதார மாகக் காட்டப்பட்ட முடிவு திரு.என்.மனோகரன், ஏ.பி.குருமூர்த்தி, செட்டி வழக்கில் (மேலே சுட்டப்பட்டது) இந்த நீதிமன்றம் கூறியதாவது ஒரு தரப்பினரால் அளிக்கப்பட்ட ஏற்புரையை நீதிமன்றம் ஏற்கும்போது அதன் ஆணை ஒரு தடையுறுத்து ஆணையாக செயற்படும், இதனை மீறுகையாக செயற்படுவதிலிருந்து அவரால் மீறப்படும்போது, நீதிமன்றத்திற்கு அவரை கைது செய்யவும் சிறையிலடைக்கவும் ஆணை யிடலாம் என்பது.

19. சி. செங்கோட்டையன் வழக்கின் முடிவில் (மேலே சுட்டப்பட்டுள்ளவாறு) இந்த நீதிமன்றம், கண்டுபிடித்ததாவது, ஏற்பாட்டு ஆவணங்கள் நீதிமன்றத்திற்கு அளித்த ஏற்புரையின் மீறுகைக்காக நிறைவேற்றப்பட்டது மற்றும் சொல்லப்பட்ட ஏற்பாட்டு ஆவணங்கள் செயற்பட முடியாததாகவும் விழலானதாகவும் உள்ளது. (மேலே சுட்டப்பட்டதில்) இதில் காணப்படுவ தாவது சொல்லப்பட்ட வழக்கினை பொருண்மை களின்பேரில், இந்த விண்ணப்பம் முடிக்கப் பட்டது. அதில் ஏற்புரையுடனான உறுதியுரை பதிவு செய்துள்ளது. அதாவது எதிர்வாதியினால் அளிக்கப்பட்டதில், இத்தகைய சூழ்நிலைகளில், இந்த நீதிமன்றம் கூறியதாவது, இந்த ஏற்புரையை ஏற்கப்படும்போது, இதில் உள்ள பின்பற்றதலாவது எதுவும் மீறுதலாக இருக்கும் என்பது.

20. சி. செங்காட்டையன் வழக்கில் (மேலே சுட்டப்பட்டவாறு) இந்த நீதிமன்றம் ஏற்பாட்டு ஆவணங்களை தள்ளுபடி செய்துள்ளது மேலும் சொல்லப்பட்ட வழக்கில், இது ஏற்கப்பட்ட நிலையில், உள்ளதாவது சொல்லப்பட்ட வழக்கில் பாதுகாப்பு அளித்தது. ஏற்கப்பட்டதும் நீதிமன்றத்தினால் பதிவு செய்யப்பட்டதும். எனவே, இதன் விளைவாக பற்றுகை ஆணை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. எனினும், தற்போதைய வழக்கில் துரதிஷ்டவசமாக, பிணையம் அளிப்பது நீதிமன்றத்தினால் பதிவு செய்யப்படவில்லை மற்றும் சொல்லப்பட்ட உறுதியுரையுடனான ஏற்புரைகளின்பேரில் எந்த ஆணைகளும் பிறப்பிக்கப்படவில்லை. எனவே, தற்போதைய வழக்கிற்கு இரு வழக்கின் முடிவு களின் பொருண்மைகள் பொருந்தாது.

21. எதிர்வழக்கீட்டாளர்கள் 1, 2க்காக முன்னிலையாகி வழக்கறிஞரினால் ஆதாரமாக அளிக்கப்பட்ட இரண்டு வழக்கின் முடிவுகளும் தற்போதைய வழக்கிற்கு தொடர்புற்றதாக இல்லை. ஏனெனில் இரு வழக்குகளிலும் பற்றுகை ஆணை பிறப்பிக்கப்படவில்லை மற்றும் இதில் கேள்வி எழுவதாவது சொல்லப் பட்ட பற்றுகை ஆணை ஏன் தொடர்புடைய துணைப் பதிவாளருக்கு தெரிவிக்கப்படவில்லை. இது தவறானதா இல்லையா என்பது.

22. தற்போதைய வழக்கில் பற்றுகை பற்றிய எந்த ஆணை பற்றிய கேள்வியும் இல்லை. உடைமை தொடர்பாக. ஏற்புரையுடனான உறுதி யுரை பிணையாக அளிக்கப்பட்டுள்ளது. அந்த வழக்கின் கோரிக்கைக்காக. எனவே, தீர்ப்புக்கு முன்பான பற்றுகை பற்றிய கேள்வி என்பது.

எழவில்லை விசாரணை நீதிமன்றத்தின் முன்பு, இதனை துணைப் பதிவாளருக்கு தெரிவிக்கப் படுதல் பற்றிய தேவை மட்டுமே கவனிக்கப் படவில்லை.

23. மேலே சொல்லப்பட்ட கருத்துப்படி, விசாரணை நீதிமன்றம் விண்ணப்பத்தினைத் தள்ளுபடி செய்ய எந்தக் காரணமும் தெரிவிக்க வில்லை. இதில் கூற எதிர்பார்த்ததாவது மாற்று தீருதவி கிடைக்கத்தக்கதாக சீராய்வு மனு தாரருக்கு உள்ளது என்பது. அதாவது விற்பனை ஆவணத்தை எதிர்ப்பது தொடர்பாக. எனினும், இது தொடர்பாக என்னால் இது பொருத்து மனநிறைவடைய முடியவில்லை. பணம் வசூலிப்பது தொடர்பான வழக்கில் விற்பனை ஆவணத்தை தள்ளுபடி செய்து அதாவது கூறப்பட்ட உறுதியுரையுடனான ஏற்புரையில் ஏற்பட்ட கடைபிடிக்காத முறிவு தொடர்பாக நீதிமன்றம் வகை செய்ய சொத்தினை பிணையமாக வைத்து அதாவது வழக்கின் கோரிக்கைக்கான பின்னர் சொல்லப் பட்ட சொத்தினை, வகை செய்ய நடவடிக்கை எடுப்பது அளிக்கப்பட்ட ஏற்புரையுடனான உறுதி யுரையை மீறுவதாக அமைவது, இந்த ஏற்புரை நீதிமன்றத்தினால் பெறப்பட்ட போதிலும் அதுவும் முதல் எதிர்வாதியிடமிருந்து உறுதியுரை என்பதாக. இது பதிவேட்டில் ஏற்புரை அளிக்கப் பட்டது. பதிவு செய்யப்படவில்லை மற்றும் பற்றுகைக்கான விண்ணப்பப்பம் தீர்ப்புக்கு முன்பே தகுந்த முறையில் வகை செய்யப் பட்டுள்ளது.

24. வழக்கிடை மாற்றம் தீர்ப்பெதிர் செல்லாது என்னும் கோட்பாடு தற்போதைய வழக்கிற்குப் பொருந்தாது. ஏனெனில் இதில் நீதிமன்ற ஆணை எதுவும் இல்லை. இதில் பிணையம் கோரப்பட்டு முன்னிடுவது தொடர்பாகவும் தீர்ப்பிற்கு முன்பான பற்றுகை தொடர்பாகவும் எந்த ஆணையும் இல்லை. மேலும், வழக்கானது பண வசூலிக்கானது மட்டுமே. எனவே, இத்தகைய சூழ்நிலைகளில் மதிப்பிற்கு வாங்குபவருக்கு குந்தகம் ஏற்படக் கூடாது. அதாவது விற்பனை ஆவணத்தை தள்ளுபடி செய்யப் பணிக்கப்படுவதன் மூலமாக. இதன்படி மூன்றாம் தரப்பினரான வாங்குபவர், மதிப்பான விற்பனை மறுபயனுக்காக சொத்தினை வாங்க முற்பட்டுள்ளார். ஏற்கப்பட்டவாறு சொத்தினை விற்பனை தடுப்பது தொடர்பாக. எந்த ஆணை யும் இல்லை மற்றும் பொருண்மையின்படி பிணையம் அளிப்பதற்கான தீர்ப்புக்கு முன்பான பற்றுகை பற்றியும் கவனிக்க தேவையில்லை.

25. மேற்சொல்லப்பட்ட கருத்துப்படி விசாரணை நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட காரணங் களுக்காக ஆனாலும் மேலே சொல்லப்பட்ட கலந்தாய்வுகளின் காரணத்தால் நாள் இந்த மு.வி.எண் 1/2021இனை அனுமதிக்க எந்தக் காரணமும் இருப்பதாக காணவில்லை. மு.வ. எண் 8/2016இல் 5ஆம் எதிர்வழக்கீட்டாளர் சார்பாக. விற்பனை ஆவணம் தள்ளுபடி செய்யப்பட்டது. தொடர்பாகவும் அவ்வாறே உரிமையியல் சீராய்வு மனுவும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**


## மொழிபெயர்ப்பாளர் தேவை

**நீதிமன்றத் தீர்ப்புகளை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்க மொழி பெயர்ப்பாளர் தேவை.**

**மொழிபெயர்ப்பாளருக்கு தக்க மதிப்பூதியம் வழங்கப்படும்**

தொடர்புக்கு

**E-mail: sattakadir1992@yahoo.co.in.**

# கால வரம்பும் அதைக் கணக்கிடும் முறையின் நெறிமுறையும்

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.சதீஷ்குமார்
உ.சீ.ம. எண் 711/2024, உ.ப.ம.எண் 3597/2024
நாள்: 11.6.2025
**2025 (5) CTC 28**

டாக்டர் ஏ. சுந்தரம்
2. ஏ. கிருபாகரன்
3. குப்புலஷ்சுமி
4. எஸ்.செந்தில்நாதன்
5. எஸ்.துர்காதேவி
6. ஏ.லலிதா பிரசாத் (எ) லலிதா
7. பத்மினிராஜ் (எ) பத்மினி ...மனுதாரர்கள்

–எதிர்–

வி. சண்முகம், கே.ஏ. சங்கரன் (இறப்பு), ஏ. சண்முகம் (இறப்பு)
2. காமாட்சி பாசப்பன் ஏ. பிரேமா (இறப்பு)
3. ஞானசேகரன்
4. தாரகேஸ்வரி
5. கஸ்தூரி
6. சாந்தி
7. லதா
8. சதீஸ் ...எதிர்வழக்கீட்டாளர்கள்

எஸ்.சதாசிவம்
மனுதாரர்களுக்கான வழக்கறிஞர்

வி.ராமமூர்த்தி எதிர்வழக்கீட்டாளர் எண் 1இன் வழக்கறிஞர் எதிர்வழக்கீட்டாளர் 2 முதல் 8 வரையிலான 74-2025 தேதியிட்ட விரிவான நீதிமுறை ஆணை அளிக்கப்பட்டது.

உ.சீ.மனு தள்ளுபடி கண்டறிதல்களுடன், செலவுத் தொகையின்றி ப.ம. முடிக்கப்பட்டது.

**கோரிக்கை:** மு.வ.எண் 13/1994இன் சீ.நி.ம.எண் 156/2008, 31.10.2023 தேதியிடப்பட்டது. கிருஷ்ணகிரி முதன்மை கீழ்நிலை நீதிமன்ற கோப்பில் உள்ளது. இந்த ஆணைக்கு எதிராக உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 115ஆம் பிரிவின்படி உரிமையியல் சீராய்வு மனு முன்னிடப்பட்டுள்ளது.

## தீர்ப்பு

**நீதியரசர் என். சதீஸ்குமார்**

1.நிறைவேற்றுதல் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து அதாவது எதிர்வழக்கீட்டாளர்கள் 1 முதல் 4 வரையிலானவர்களை நிறைவேற்றுதல் மனு/தீர்ப்புக் கடனாளிகளை விற்பனை ஆவணத்தை நிறைவேற்றப் பணிப்பதை எதிர்க்கப்பட்டது. அதாவது பிரிக்கப்படாத 4/9 பங்கு தற்போதைய சீராய்வு முன்னிடப்பட்டது.

2. சுருக்கமான பொருண்மைகள் தற்போதைய சீராய்வினை முன்னிடக் காரணமாக இருந்தது அவை பின்வருமாறு.

2.1. எதிர்வழக்கீட்டாளர்கள் 1 முதல் 4 வரையிலானவர்கள் நிறைவேற்றுதல் மனுவில் விற்பனை உடன்படிக்கை ஒன்று மனுதாரர் சார்பாக நிறைவேற்றப்பட்டது. இதன் காரணமாக குறித்த வகை நிறைவேற்றதலுக்கான வழக்கு காரணமாக மு.வ.எண் 131/1994 சொல்லப் பட்ட வழக்கு விசாரணை நீதிமன்றத்தால் தீர்ப்பாணை வழங்கப்பட்டது. 22.8.1996 தீர்ப்பின் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கு, தீர்ப்பாணை பெற்றவர் எ.ம.எண் 124/1999 முன்னிட்டுள்ளார். சொல்லப்பட்ட நிறைவேற்றுதல்

மனு 10.12.2007 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர், அவர் தற்போதைய நிறைவேற்றுதல் மனுவினை நி.ம.எண் 156/2008 முன்னிட்டுள்ளார்.

2.2. இதில் குறிப்பிடப்பட வேண்டியதாவது, வழக்கானது, முதலில் 22.8.1996 அன்று தீர்ப்பாணை பெற்றது. இது நான்கு எதிர்வாதிகளுக்கு எதிராக, எனினும், நிறைவேற்றுதல் மனு முன்னிடப்பட்டது. முதன்மை எதிர்வாதிகள் தீர்ப்புக் கடனாளிக்கு எதிராக மட்டுமல்ல. ஆனால் கூட்டுச் சொந்தக்காரர்களுக்கும் எதிராக அதாவது சொத்தில் உரிமை கோருகிறவர்களுக்கு எதிராக.

2.3. தாவாவில் உள்ள சொத்து, முதன்மையாக அண்ணாமலை மணியக்காரருக்கு சொந்தமானது. அவர் அவரது மனைவியையும் எட்டுப் பிள்ளைகளை விட்டு இறந்துள்ளார். எனினும், எதிர்வாதிகளான 1 முதல் 4 வரையிலானவர்கள் மகன்கள் சேர்ந்து ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தினர். அதாவது சொத்தினை விற்பதற்காக. இது மு.வ.எண் 131/2024இன் மூலம் குறித்த வகை நிறைவேற்றுதலுக்கான வழக்காக்கப்பட்டது. இதற்கிடையில், எதிர்வாதிகளின் சகோதரிகளில் ஒருவர் 1 முதல் 4 வரையிலானவர்கள் வழக்கினை முன்னிட்டனர். மு.வ.எண் 91/1992 இவர்கள் 1/9 பங்கினை பாகப் பிரிவினை மூலம் சொத்தில் கேட்டுள்ளனர். இதில் குறிப்பிட வேண்டியதாவது மேற்சொல்லப்பட்ட பாகப் பிரிவினை வழக்கில் தீர்ப்பாணை பெற்றவர். அதாவது உடன்படிக்கை வைத்திருப்பவர் இதில் தரப்பினராக்கப்படவில்லை. வழக்கானது 1/9 பங்கிற்கான தீர்ப்பாணை பெற்றது.

2.4. வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணையை எதிர்த்து, எதிர்த்து மேல்முறையீடு ஒன்று முன்னிடப்பட்டது. மே.வ.எண் 67/1997. அதில் மேல்முறையீட்டு நீதிமன்றம் பங்கு ஒதுக்கீட்டினை மாற்றியுள்ளது. இதில் இரண்டாவது மேல்முறையீடானது வாதியினால் முன்னிடப்பட்டது. மு.வ.எண் 91/1992 இ.மே.எண் 1613/1999.

2.5. இரண்டாம் மேல்முறையீடு நடப்பில் உள்ளபோது, மு.வ.எண் 131/1994இல். தீர்ப்பாணை பெற்றவர். நிறைவேற்றுதல் மனுவை முன்னிட்டுள்ளார். சீ.நி.ம.எண் 156/2008. அதாவது அவரால் முன்னிடப்பட்ட முந்திய நிறைவேற்றுதல் மனு தள்ளுபடி செய்யப்பட்டதும் இதற்கிடையில், சில எதிர்வாதிகள்/தீர்ப்புக் கடனாளிகள் இறந்துள்ளனர். எனவே, அவரது சட்ட வாரிசுகள் நிறைவேற்றுதல் மனுவில் பதிவேட்டிற்கு கொண்டு வரப்பட்டனர்.

2.6. நிறைவேற்றுதல் மனுவில் எதிர்வழக்கீட்டாளர்கள் நிறைவேற்றுதலை எதிர்த்தனர் கூறியதாவது முந்திய நிறைவேற்றுதல் மனு தள்ளுபடி செய்யப்பட்டதால், இரண்டாவது நிறைவேற்றுதல் மனு நிலைபெறத்தக்கதல்ல. மேலும் பாகப்பிரிவினை மனு முன்னிடப்பட்ட போது அதாவது அவர்களின் சகோதரி ஒருவரால் முன்னிடப்பட்டது. இரண்டாவது மேல்முறையீட்டில் நடப்பில் உள்ளது. பெறப்பட்ட தீர்ப்பாணை அதாவது குறித்தவகை நிறைவேற்றுதல் வழக்கு நிறைவேற்றப்பட முடியாத நிலை.

2.7. அதன் பின்னர், இதில் தோன்றுவதாவது, இரண்டாவது மேல்முறையீடு, பகுதி அனுமதிக்கப்பட்டுள்ளது. 22.5.2019 தீர்ப்பின்படி அதில், வாதியை (மகளின்) 1/9 பங்கினை தாவாவில் உள்ள சொத்தில் பங்காக விளம்புகை செய்யப்பட்டுள்ளது.

2.8. நிறைவேற்றுதல் நீதிமன்றம், இதன் எதிர்ப்புகளைக் கருதுகை செய்தும் இந்த நீதிமன்றத் தீர்ப்பின் இரண்டாம் மேல்முறையீடு பாகப்பிரிவினை வழக்கிலிருந்து எழுவது. அதில் இந்த நீதிமன்றம் கண்டறிந்துள்ளதாவது இதில் சொத்தானது அவர்களின் தந்தைக்குச் சொந்தமாக இருந்துள்ளதால், ஒவ்வொரு சட்ட வாரிசும், 1/9 பங்கிற்கு உரிமையுடையவர்கள் ஆவர் மற்றும் இதில் சட்ட வாரிசுகளின் 4 பேர் மட்டுமே உடன்படிக்கையை நிறைவேற்றியுள்ளனர். அதாவது நிறைவேற்றுதல் தீர்ப்பாணையை அதாவது நான்கு சட்ட வாரிசுகள் தொடர்பாக அதாவது தீர்ப்புக் கடனாளிகள் குறித்தவகை நிறைவேற்றுகைக்கான வழக்கிற்காக மட்டும். அவர்கள் 4/9 பங்குச் சொத்தினை விற்கப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. தீர்ப்பாணை பெற்றவர்களுக்கு தனித்தனியே உடைமைக்

கான நடவடிக்கை எடுக்கக் கோரப்பட்டது. சட்டப் படியாக உடைமையைக் கைக் கொள்வதற்கான நடவடிக்கைகள் நிறைவேற்றுதல் நீதிமன்ற ஆணையை எதிர்த்து தற்போதைய சீராய்வு முன்னிடப்பட்டுள்ளது.

வழக்கறிஞரின் முக்கிய வாதமாவது சீராய்வு மனுதாரரின் தொடர்பாக முதல் நிறைவேற்றுதல் நி.ம.எண் 124/1999 10.12.2007 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது மற்றும் இரண்டாவது நிறைவேற்றுதல் மனு 22.8.2008 முன்னிடப் பட்டது. இது கால வரம்பினால் தடை செய்யப் பட்டது. வழக்கறிஞருக்கிணங்க சீராய்வு மனுதாரர் களின் கால வரம்பு தேதி தீர்ப்பாணைத் தேதி யிலிருந்த தொடங்குகிறது. எனவே, இரண்டாவது நிறைவேற்றுதல் மனு 21.8.2008 அன்று முன்னிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், முக்கிய வாதமாவது, உடன்படிக்கை நான்கு பேரால் எற்படுத்தப்பட்டது. ஆனால் நிறைவேற்றுதல் மனு 10 பேருக்கு எதிராக முன்னிடப்பட்டுள்ளது. எனவே இது செல்லத்தக்கதல்ல. அவரது பணிந்த னுப்புதல் களுக்கு ஆதரவாக வழக்கறிஞர் உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை ஆதாரமாகக் கொண்டுள்ளார்.

i) பால்ராஜ் தனிஸா மற்றும் பிறர் –எதிர்– சுனில் மதன் மற்றும் பிறர் AIR 1999 SC 3381

ii) டபிள்யூ.பி. எசன்சியல் கமோடிட்டீஸ் சப்ளை கார்ப்பரேஷன் –எதிர்– சுவதேஷ் அக்ரோ பார்மிங் அண்டு ஸ்டோரேஜ் பி.லிட்., மற்றும் பிறர் AIR 1999 SC 3421.

iii) யூனியன் ஆஃப் இந்தியா மற்றும் பிறர் –எதிர்– ரமேஷ் காந்தி, 2012 (1) SCC 476.

4. 1ஆம் எதிர்வழக்கீட்டாளர்/தீர்ப்பாணை பெற்றவரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பதாவது குறித்தவகை நிறைவேற்றுதலுக்கான வழக்கு, தீர்ப்பாணை பெற்றது. மேலும் சீ.நி.வி. எண் 11/2011, உ.வி.தொ.ச.இன் பிரிவு 47இன்படி முன்னிடப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் சீ.நி. வி.எண் 64/2014. இந்த நீதிமன்றம் கூறியுள்ள தாவது பெண் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 1/40 பங்கிற்கு உரிமையுடையவர்கள் என்று. எனினும், நிறைவேற்றுதல் நீதிமன்றம், இந்த நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது. தீர்ப்பாணை யினை கவனித்து அதாவது இரண்டாவது மேல் முறையீட்டில், விற்பனை ஆவணத்தை நிறை வேற்ற பணித்தது அதாவது பிரிக்கப்படாத 4/9 பங்கு தொடர்பாக மட்டுமே மற்றும் தீர்ப்பாணை பெற்றவரை, உரிய இடத்திற்கு அனுப்பி, பாகப் பிரிவினை மூலமாக உடைமைக்கான தனிப்பட்ட நடவடிக்கைகளை தொடங்கக் கூறியுள்ளது. எனவே, வழக்கறிஞர், பணிந்தளிப்பதாவது. ஆணையில் தவறு என்பதை காண வேண்டிய தில்லை. வழக்கறிஞர் பணிந்தளிப்பதாவது இரண்டாவது நிறைவேற்றுதல் மனு. உரிய நேரத்தில் முன்னிடப்பட்டுள்ளது. அவருக் கிணங்க 22.8.1996 அன்று. தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் நிறைவேற்றுதல் மனு 22.8.2008 அன்று முன்னிடப்பட்டுள்ளது. இது 12 ஆண்டுகளுக்குள் செய்யப்பட்டுள்ளது. வழக்கறிஞருக்கிணங்க தீர்ப்பாணைத் தேதி 1897 பொது கூறுகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின்படி கால வரம்பு கணக்கிடப்படுவதில் தீர்ப்பாணைத் தேதி விலக்கப்படும். எனவே, நிறைவேற்றுதல் மனு, முன்னிடப்பட்டது உரிய நேரத்திற்குள்ளானது. எனவே, சீராய்வு மனுவை அவர் எதிர்த்தார்.

5. இருதரப்பு வழக்கறிஞர்களும் கேட்டறியப் பட்டனர் மற்றம் பதிவேட்டில் கிடைக்கத்தக்க பொருட்பாடுகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன.

6. செய்யப்பட்ட பணிந்தனுப்புதல்களின்படி வழக்கறிஞர்கள் இரு தரப்பிலிருந்தும், கருதுகைக்காக எழுப்பப்பட்ட குறிப்புகள் இந்த சீராய்வில் உள்ளன. அவை பின்வருமாறு

(i) 1ஆம் எதிர்வழக்கீட்டாளரால்/தீர்ப்பாணை பெற்றவரால் முன்னிடப்பட்ட நிறைவேற்றுதல் மனு. கால வரம்பினால் தடை செய்யப்படு கிறதா?

(ii) நிறைவேற்றுதல் நீதிமன்றத்தின் ஆணை குறைபாட்டினைக் கொண்டுள்ளதா?

7. சொத்தானது முதலில் தரப்பினர்கள் தந்தைக்கானதா இருந்தது என்பதில் எந்தப் பூசலும் இல்லை. அதாவது அண்ணாமலை மணியக்காரர் எந்தப் பூசலும் இல்லை. அதாவது

அண்ணாமலை மணியக்காரர் என்பவரது பெயரில், அவர் அவரது மனைவியையும் 8 பிள்ளைகளையும் கொண்டுள்ளார். அவர் இறந்துள்ளார் என்றும் அவரது நான்கு பிள்ளைகள் அண்ணாமலை மணியக்காரர் விற்பனை உடன்படிக்கையினை நிறைவேற்றியுள்ளார் என்று கூறியுள்ளனர். அதாவது சொத்தானது முழுமையாக அவர்களுக்கு சொந்தமானது என்பது போன்று. இவர்கள் அந்த விற்பனை ஆவணத்தை நிறைவேற்றத் தவறியுள்ளார். இதனால் ஒரு குறித்தவகை நிறைவேற்றுதல் வழக்கு முன்னிடப்பட்டுள்ளது. மு.வ.எண் 131/1994, இதற்கிடையில், சொல்லப்பட்ட அண்ணாமலை மணியக்காரரின் மகள் ஒருவர் ஒரு தனி வழக்கை முன்னிட்டார். மு.வ.எண் 91/1992, அதில் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப் பட்டு அவளது உரிமை விளம்புகை செய்யப்பட்டது.

8. இது இவ்வாறு இருக்கையில், நிறைவேற்றுதல் மனுவிலும் கூட, சில மகள்கள் விண்ணப்பங் களை முன்னிட்டனர். சீ.தி.வி.எண்கள் 11/2011 மற்றும் சீ.நி.ம.எண் 64/2012 47ஆம் பிரிவின்படி அவர்களது உரிமையை விளம்பக் கோரப்பட்டது. இரண்டாம் மேல்முறையீட்டில் மகள்களின் உரிமைகள் விளம்பப்பட்டன. அதில் கூறப்பட்டதாவது ஒவ்வொரு சட்ட வாரிசும் 1/9 பங்குக்கு உரிமையுடையவர் என விளம்பப் பட்டது. மேற்சொல்லப்பட்ட பொருண்மைகளை கவனத்திற்கொண்டு, நிறைவேற்றுதல் நீதிமன்றம், நிறைவேற்றுதல் மனுவினை அனுமதித்து உள்ளது. அதாவது 4/9 பங்கு தொடர்பாக. பிற சட்ட வாரிசுகள் பற்றிய பொருண்மை நிறை வேற்றுதல் நீதிமன்றத்தினால் பாதுகாக்கப்பட்டு உள்ளது. ஏனெனில் விற்பனை ஆவணம் 4/9 பங்கு தொடர்பாக மட்டுமே நிறைவேற்றப் பணிக்கப்பட்டுள்ளது.

9. பொருண்மையானது விற்பவர்கள் அதாவது நான்கு சகோதரர்கள் குறித்தவகை நிறைவேற்றுதல் தொடர்பான தீர்ப்பாணையை எதிர்த்துள்ளனர். இது அறுதிநிலையை எட்டியுள்ளது. இதில் தீர்ப்பாணை பெற்றவர்கள் முன்பே நிறைவேற்றுதல் மனுவை முன்னிட்டுள்ளனர். நி.ம.எண் 124/1999. இது தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர், இந்த இரண்டாவது நிறைவேற்றுதல் மனு 22.8.2008 அன்று முன்னிடப்பட்டுள்ளது.

**குறிப்பு எண்** (i):

10. குறிப்பு எண் (i)இனைப் பொருத்த வரை, சீராய்வு மனுதாரர்களின் வழக்கறிஞருக் கிணங்க, காலவரம்பு தீர்ப்பாணைத் தேதி யிலிருந்து கணக்கிடப்பில் என்பது. எனவே, கால வரம்புக் காலம் என்பது 21.8.2008 அன்று 12 ஆண்டுகள் முடிவுறுகிறது. 1ஆம் எதிர்வழக் கீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பதாவது தீர்ப்பாணைத் தேதி என்பது கணக்கிடப்படக் கூடாது விலக்கப்பட வேண்டியது என்பது. அதாவது கால வரம்பினைக் கணக்கிடுகையில்

11. இங்கு 1897 பொதுக் கூறுகள் சட்டத்தின் பிரிவு 9இனைச் சுட்டுதல் தொடர்புற்ற தாக அமையும் மற்றும் இது பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

**“9. தொடக்கம் மற்றும் காலம் முடிவுறுதல்**: (1) எந்த மையச் சட்டத்திலும் அல்லது ஒழுங்கு முறை விதிகளில் அவை இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்னர் செய்யப்பட்டிருப்பின், நாட்களின் வரிசையில் முதல் நாளை நீக்கும் முறை நோக்கத்திற்கு போதியதாக உள்ளது அல்லது வேறு எந்தக் கால அளவினை கணக்கிடும்போது அதிலிருந்து என்றும் சொல் பயன்படுத்தப்படுவது மற்றும் நாட்களின் வரிசையில் கடைசி நாளைப் பொருத்தவரையில் அதைச் சேர்ப்பது அல்லது வேறு காலம் எதனை யும் கணக்கிடுவதில் இது வரை என்றும் சொல் பயன்படுத்தப்படுகிறது.

(2) இந்தப் பிரிவு, அனைத்து மையச் சட்டங் களுக்கு கூட பொருந்தும். அதாவது அவை 1868 ஜனவரி 3ஆம் நாளுக்குப் பின்னர் இயற்றப்பட்டிருப்பின், மற்றும் இது அனைத்து ஒழுங்குமுறை நோக்கத்திற்கு போதியதாக உள்ளது அல்லது வேறு எந்தக் கால அளவினை கணக்கிடும்போது அதிலிருந்து என்றும் சொல் பயன்படுத்துவது மற்றும் நாட்களின் வரிசையில் கடைசி நாளைப் பொருத்தவரையில் அதைச் சேர்ப்பது அல்லது வேறு காலம் எதனையும் கணக்கிடுவதில் இது வரை என்னும் சொல் பயன் படுத்தப்படுகிறது.

(2) இந்தப் பிரிவு, அனைத்து மையச் சட்டங்களுக்கும் கூட பொருந்தும். அதாவது அவை 1868 ஜனவரி 3ஆம் நாளுக்குப் பின்னர் இயற்றப்பட்டிருப்பின் மற்றும் இது அனைத்து ஒழுங்குமுறை விதிகளும் அவை 1887 ஜனவரி பதினான்காம் தேதி அன்று அல்லது அதற்குப் பின்னர் செய்யப்பட்டிருப்பின் பொருந்தும்.

12. மேற்சொல்லப்பட்ட பிரிவு இதனை மிகத் தெளிவாக்குகிறது. இதில் காலமானது, சட்டம் அல்லது விதியினால் கால வரம்புக்கு உட்படுத்தப் படும்போது, இதற்கு ஒரு தொடக்கமும் முடிவும் ஏற்படும் "இருந்து" விடப்படும் அதாவது கடைசி நாள் சேர்க்கப்படுமானால், "இதுவரை" என்பது பயன்படுத்தப்படும். இது தொடர்பாக, இதில் முழு ஆயத்தின் தீர்ப்பைச் சுட்டுவது பொருத்தமான தாகும். தருண் பிரசாத் சாட்டர்ஜி –எதிர்– தின்னாத் ஷர்மா 2000 (8) உச்.நீ.வ. 649. சொல்லப்பட்ட தீர்ப்பு தேர்தல் மனுவிலிருந்து எழுவது உச்ச நீதிமன்றம் பத்தி 5, 6இல் சொல்லப்பட்ட தீர்ப்பில் பின்வருமாறு கூறியுள்ளது.

"5. "தேர்தல் தேதி" என்பது பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளது. 1951 மக்கள் சார்பாற்றச் சட்டத்தின் பிரிவு 67(அ) இதனை பொருள்வரையறை செய்துள்ளது. இது பின் வருமாறு.

"பிரிவு 67(அ) வேட்பாளரின் தேர்தல் தேதி: இந்தச் சட்டத்தின் சட்டத்தின் பிரிவு 67(A) வேட்பாளரின் தேர்தல் தேதி இந்தச் சட்டத்தின் பிரிவு நோக்கங்களுக்காக, ஒரு மாநிலத்தின் சட்டப் பேரவையின் அல்லது நாடாளுமன்ற அவையில் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளவர். பிரிவு 53 அல்லது பிரிவு 66இன் வகைமுறைகளின்படி தேர்தல் அதிகாரியினால் எந்தத் தேதியில், வேட்பாளராக விளம்புகை செய்யப்படுகிறோ அந்தத் தேதி"

"9 காலத்தின் தொடக்கமும் முடிவுறுத்தப் படுதலும் (1) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்னர் மையச் சட்டம் எதிலும் ஒழுங்குமுறை விதி எதிலும் சில தொடர்நாட்களில் முதல் நாளை நீக்கும் நோக்கத்திற்காக அல்லது, வேறு எந்த கால அளவினையும் செய்ய இதிலிருந்து என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது மற்றும் நாட்களின் வரிசையில் கடைசியினை சேர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறு எந்தக் கால அளவிற்காகவும் வரை என்னும் சொல் பயன்படுத்தப்படும் இது போதுமானதாகும்.

(2) இந்தப் பிரிவு அனைத்து மையச் சட்டங்களுக்கும் பொருந்தும். அதாவது 1868 ஜனவரி 3ஆம் தேதி பின்னர் இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் 1887 ஜனவரி பதினான்காம் தேதியன்று அல்லது அதற்கும் பின்னர் செய்யப் பட்ட ஒழுங்குமுறை விதி அனைத்திற்கும் பொருந்தும்.

6. மா.சா. சட்டத்தின் பிரிவு 81(1)இன்படி, தேர்தல் மனுவினை முன்னிடுவதற்காக, எடுத்து ரைக்கப்பட்ட கால வரம்புக் காலம் நாற்பத்து ஐந்து நாட்கள் அதாவது தேர்தல் தேதியிலிருந்து வேட்பாளருக்கானது, இதில் கூறப்பட்டிருப்ப தாவது தேர்தலில் வேட்பாளரின் தேர்தல் தேதிக்கு முன்பு இது முன்னிடப்படுதலாகாது. 27/1956 சட்டத்திற்கு முன்னர், 1951 ம.சா. சட்டத்தின் பிரிவு 81(1)இல் தேர்தல் மனுவினை முன்னிடுவதற்கான கால வரம்பு வகை செய்யப் படவில்லை.

தேர்தல் மனுவை முன்னிடுவதற்கான கால வரம்பு 1951 மக்கள் சார்பாற்றம் (தேர்தல்) நடைபெறுதல் முன்னிடுவதற்கான கால வரம்பு 1951 மக்கள் சார்பாற்றம் (தேர்தல் நடைபெறுதல் தேர்தல் மனுக்கள்) விதிகளில் பிரிவு 119இல் தேர்தல் மனுவினை முன்னிடுவதற்கான கால வரம்பு வகை செய்யப்பட்டுள்ளது. இந்த விதி களின் தொகுப்பில் விதி 2(6)இல் வெளிப்படை யாக வகை செய்யப்பட்டிருப்பதாவது பொது கூறுகள் சட்டத்தின் வகைமுறைகளில் வகை செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது. இந்தக் கூறப்பட்ட வகைமுறை பொதுக் கூறுகள் சட்டம் பொதுவாக மையச் சட்டத்தின்படி வனையப்பட்ட விதிகளுக்குப் பொருந்தாது. சட்ட எண் 27/ 1956, 1951 ம.சா.சட்டத்தின் பிரிவு 81(1)இன் படி மனுவினை முன்னிடுவதற்கான காலம் வகுத்து ரைக்கப்பட்டுள்ளது. அதுவும் விதிகள் செய்வ தற்கான சட்ட அதிகாரத்தை அளிப்பதற்கு மாற்றாக, 1951 ம.சா.சட்டம் தன்னிறைவான ஒரு தனித்த சட்டத் தொகுப்பாகும்.

நீதிமன்றக் காவல், வழக்கின் முடிவுகளில், கூறப்பட்டதாவது கால வரம்புச் சட்டத்தில் அடங்கியுள்ள வகைமுறைகள் இவற்றிற்கு பொருத்த வேண்டியதில்லை என்பது. எனினும், தொடர் முடிவுகளில் கூறப்பட்டதாவது, 1897 பொதுக் கூறுகள் சட்டத்தில் அடங்கியுள்ள வகைமுறைகள், 1951 ம.சா. சட்டத்தின்படி யான தேர்தல் மனுக்களை முன்னிடுவதற்கான கால வரம்பினைக் கணக்கிடுவதற்குப் பொருந்து வதாக கூறப்பட்டது. இதில் பிரிவு 81(1)இல் பொதுக் கூறுகள் சட்டத்தின் அடங்கியுள்ள வகைமுறைகள் இதற்கு பொருந்தாது என்று எங்கும் குறிப்பிடவில்லை.

9. எனவே, பொதுக் கூறுகள் சட்டத்தின் பிரிவு 9இன் கூறப்பட்டவை தொடர்பாக. எந்தப் பூசலும் இருக்க முடியாது. இது 1951 ம.சா. சட்டத்தின் பிரிவு 81இன்படி கால வரம்பினைக் கணக்கிடுவ தற்குப் பொருந்தும். எனினும், வழக்கறிஞரால் கூறப்பட்ட வாதங்கள் இந்த வழக்கில் மேல்முறை யீட்டாளர் தொடர்பாக. 1951 ம.சா.சட்டத்தின் பிரிவு 81(1)இன்படி முன்னிடப்பட்ட விண்ணப்பம் ஒன்றின்படி பிரிவு 9 பொருந்துகிறபோதிலும் கூறப்பட்டதாவது இது உரிய வழக்குகளுக்கு மட்டுமே பொருந்தும். அனைத்து வழக்குகளுக்குப் பொருந்த முடியாது என்று கூறப்பட்டது. மேல் முறையீட்டாளரின் வாதப்படி குறிப்பிட்டு பயன் படுத்தப்பட்டுள்ள மொழிப்படி 1951 ம.சா. சட்டத்தின் பிரிவு 81(1) உள்ள சொற்கான உள்ளடங்கலாக இதிலிருந்து என்பவை குறிப்பிடுவ தாவது பிரிவு 9 பொருந்தாது என்பதாக, இந்த தேர்தல் மனுவில் உள்ள சட்டக் கட்டாயமாவது 45 நாட்களுக்கு இது முன்னிடப்பட வேண்டும் என்பது. அதாவது தேர்தல் தேதியிலிருந்து 45 நாட்களுக்குள் என்பதற்கு முந்தியதாக இருத்த லாகாது. இதன் அடிப்படையில் வாதிடப்பட்ட தாவது பிரிவு 9 கூறப்பட்ட வழக்கில் பொருந்த வேண்டியதாக இல்லை என்பது.

10. பிரிவு 9, 1897 பொதுக் கூறுகள் சட்டத்தில் சட்டப்படியான ஏற்புரை அளிக்கிறது. அதாவது நன்கு நிலை நிறுத்தப்பட்ட நெறி முறைகள் இந்த சட்டம் அமைவதில் பொருந்தும். சாதாரணமாக வகுத்துரைக்கப்பட்ட காலத்தை கருதி கடைப் பிடிக்கப்பட வேண்டிய விதி முதல் நாளை தவிர்த்து கடைசி நாளை சேர்த்தல் வேண்டும்.

11. ஹால்ஸ்பரி இங்கிலாந்து 37வது பதிப்பு தொகுதி 3 பக்கம் 92 இதில் கூறப்பட்டதாவது பின்வருமாறு.

''சேர்க்கப்பட்ட அல்லது விலக்கப்பட்ட நாட்கள்'' ஒரு குறிப்பிட்ட நாளிலிருந்து தொடங்குகிற கால நேரம் அல்லது வேறொரு நாள் அல்லது சட்டத்தினால் நிகழ்வு வகுத்துரைக்கப்பட்ட நாள் அல்லது ஒப்பந்தத்தின் மூலம் நிர்ணயிக்கப் பட்டது மற்றும் இதில் எழும் கேள்வியாவது கடைசியில் குறிப்பிடப்பட்ட நாள் உள்ளடங்கலாக அல்லது உள்ளடங்காத–உள்ளடங்காததாக முதலில் குறிப்பிடப்ப்ட்ட அல்லது கடைசியில் குறிப்பிடப்பட்ட நாள் தொடர்பாக. இது சூழ்நிலை களில் படியும் எந்த நோக்கத்திற்காக இது கணக்கிடப்படுகிறதோ அதற்காக ஐயப்பாட்டிற் காக இடமில்லாதவிடத்து, இந்த செய் சட்டம் அல்லது முறையாவணம் அவ்வாறு பொருள் கொள்ளப்பட வேண்டும். ''அத்தகைய நாளில் இருந்து அல்லது அத்தகைய நாள் வரை என்னும் சொற்றொடர்கள். இவை ஐயத்திற்கு இடமளிக்கிற வகையில் உள்ளன. இவற்றில் தெளிவு காணப்படவில்லை. அதாவது சேர்த்தல் அல்லது விடுதல் தொடர்பாக. எனினும் காலத்தை வரையறுப்பதில் முதலில் உள்ளதை விலக்கி கடைசி நாளை சேர்த்தல் என்பது பின்பற்றப் படுகிறது''

12. பிரிவு 9 கூறுவதாவது, 1897 பொதுக் கூறுகள் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்னர், நிறைவேற்றப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குமுறை விதி எதுவும், போதியதே அதாவது வேறு எந்த காலம் தொடர்பாகவும் அதிலிருந்து என்ற சொல்லின் பயன்படும் மற்றும் கடைசி தேதியை சேர்ப்பது தொடர்பாக வளர் என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இதற்கான நெறி முறை காலமானது சட்டத்தினால் அல்லது விதி யினால் வரையறுக்கப்படும்போது, அதற்கான தொடக்கமும், முடிவும், ''அதிலிருந்து'' என்னும் சொல்லின் பயன்பாடு அதன் தொடக்கத்தையும், இதில் தொடக்க நாள் விட்டு விடப்படும் மற்றும் கடைசி நாள் சேர்க்கப்படும். இதில் கால வரம்புக்

காலம் சில தொடர் நாட்கள் அல்லது ஒரு கால மாக நிர்ணயிக்கப்படும். இது சில தரப்பினருக்கு ஏற்படுத்தக் கூடிய அசௌகரியத்தை தவிர்ப்பதற் காக ஏற்படுத்தப்பட்டது. உதாரணமாக, ஒரு தரப்பினர் காப்பீட்டு ஆவணம் ஒரு நாள் சரியாக இருக்க அதாவது 1ஆம் தேதி ஜனவரி இது சில மணி நேரங்களுக்கு செல்வத்தக்கதாக இருக்கும். அதாவது அது நிறைவேற்றப்படும் வரை அந்த காப்பீட்டு ஆவணத்தினால் நலப் பயன்பெறம் தரப்பினர் தனது கோரிக்கையை வைக்க நியாயமான காலம் பெறுவார். இதில் 1ஆம் ஜனவரி காலத்தினைக் கணக்கிடுவதில் நீக்கப் பட்டிருந்தாலன்றி.

13. இது போன்றே, உச்சநீதிமன்றம், சாகீத் இந்தியா வரையறுக்கப்பட்டது மற்றும் பிறர் –எதிர்– இந்திய பாதுகாப்பு வரையறுக்கப்பட்டது. 1999 (1) த.த.வ. 631 (உச்.நீ.) 1999 (3) உச்.நீ.வ. 1. இதில் இந்த பொருட்பாடு மாற்று முறையாவணச் சட்டத்திலிருந்து எழுகிறது. பத்தி 6, 7 பின்வருமாறு.

6. இது போன்ற வாதம் இந்த நீதிமன்றத்தில் கருதி செய்யப்பட்டது. ஹரிதாஸ் குப்தா –எதிர்– மேற்கு வங்காளம் மாநிலம் 1972 (1) உச்.நீ.வ. 639. இதில் கூறப்பட்டதாவது இந்த விதி சரியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காலம் ஒரு குறிப்பிட்ட தேதியில் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கு அந்தச் செயல் செய்யப்பட வேண்டியது. அந்தத் தேதி நீக்கப்படும். இதில் காலத்தை வரை யறுப்பது. அந்தத் தேதியிலிருந்து அதுவரையி லான தேதிக்குள் அந்தச் செயல் செய்யப்பட வேண்டியது. முதல் நாள் விலக்கப்படும் கடைசி நாள் சேர்க்கப்படும். இந்த சூழ்நிலையில் நீதிமன்றம் கூறியதாவது, மூன்று மாதக் காலத்தைக் கணக்கிடுவதில் அதாவது இருத்தி வைப்பு காலம் அது 1971 பிப்ரவரி 5ஆம் தேதி இது முடிவடைவதற்கு முன்னர், இருத்தி வைப்பு ஆணை தொடர்பான ஆணை அல்லது முடிவு உறுதி செய்யப்பட்டு இருத்தி வைப்பு காலம் தொடரும். இதன்படி இந்த இருத்தி வைப்புக் கால தொடக்கம். அதாவது 5ஆம் தேதி பிப்ரவரி செய்யப்பட்டது. இது காலம் முடிவ டைவதற்கு முந்தியது. இருத்தி வைப்பு தேதி யிலிருந்து மூன்று மாதங்கள் நீதிமன்றம் கூறிய தாவது மேற்சொல்லப்பட்ட விதி கட்டமைப்பு பின்பற்றப்பட்டது. இது ஒரு சீராகப் பின்பற்றப் பட்டது. அது தொடர்ந்து பின்பற்றப்பட்டது. நீதிமன்றம் கூறியதாவது. இந்தக் கட்டமைப்பு விதி எந்தக் காரணத்தினால் பின்பற்றப்பட்டது என்பது. இது ஆங்கிலேய நீதிமன்றங்களில் பின்பற்றப்பட்ட நெறிமுறை தொடர்புற்ற கலந்தாய்வுகள் பின்வருமாறு.

இந்த முடிவுகள் காட்டுவதாவது நீதிமன்றம் ஏற்படுத்தியுள்ள ஒரு கால அளவிற்குள் ஒரு செயல் செய்யப்படலாம் என்றும், இதற்கான வரம்பிடப்பட்ட காலம் அச்செயலை செய்வ தற்கானது. இந்த விதி நன்கு நிச்சயிக்கப் பட்டுள்ளது. ஒரு குறித்த தேதியிலிருந்து குறிப்பிட்ட காலம் வழங்கப்பட்டுள்ளது. எந்தத் தேதியன்று இது தொடங்கப்படுகிறதோ அந்த நாள் விலக்கப்படும் கோல்ட்ஸ்மித் கம்பெனி –எதிர்– மேற்கு மெட்டோபாலிடன் ரெயில்வே கம்பெனி, 1904 கே.பி. 1இல்) இந்த விதி கார்ப்பரேட் –எதிர் மாக்ரோமாக் என்னும் வழக்கிலும் பின்பற்றப்பட்டது. 1963 (1) அலகா E.R.11. 13. இதில் உள்ள சொற்றொடர் "காப்பீடு தொடங்கப்பட்டதிலிருந்து பதினைந்து நாட்கள்" இது காப்பீட்டு நிறுவனத்தின் மேல் முகப்பில் காணப்பட்ட குறிப்பு. இது பொருள்கொள்ளப் பட்டதாவது இதில் முதல் நாள் விலக்கப்பட்டு, அந்த நாளில் நள்ளிரவில் நாங்களைக் கிடப்பட்டது மற்றும் மாத்ரன் –எதிர்– டொங்சன் பாண்ட்லே கம்பெனி வரையறு 1961 (2) நீ.ஆ. 135. இது இழப்பீட்டிற்கான வழக்கு, அதாவது வேலைக் காலத்தில் ஏற்பட்ட காயத்திற்கான இழப்பீடு இதில் காலவரம்பைக் கணக்கிடுவதில் விபத்து ஏற்பட்ட தேதி செயல் ஏற்பட்ட தேதியாகும்.

இது நீக்கப்படுதல் வேண்டும் (மற்றும் ஸ்டூவார்ட் –எதிர்– சாத்மென் வழக்கு பார்க்க) 1951 (2) K.B. 992 மற்றும் இன்நீ நார்த் தரப்பினரின்றி. வான்லக் (1895) Q.B. 264). எனவே, பொதுவான விதி ஒரு காலத்தினை வரம்பிடுதல் அத்தகைய நாளிலிருந்து அத்தகைய நாள் வரை செயல் செய்யப்பட்ட தேதி நீக்கப் படும். முதல் நாள் கடைசி நாள் சேர்க்கப்படும். (ஹால்ஸ்பெரி வரத்து சட்டம். மூன்றாம் பதிப்பகம்.

தொகுதி (37 பக்கம் 92, 95) மேற்சொல்லப் பட்ட விதி தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இதற்கான காரணம் ஏதுமின்றி மற்றும் இது இதற்கு இவ்வாறாகவே பொருந்துகிறது.

7. மேற்சொல்லப்பட்ட நெறிமுறை, 1963 காலவரம்புச் சட்டத்தின் பிரிவு 12(1), 12(2)களில் வகை செய்யப்பட்டுள்ளது. எந்த காலம் எவ்வாறு கணக்கிடப்படும் என்பது பிரிவு 12(1) குறிப்பாக வகை செய்வதாவது கால வரம்புக் காலத்தைக் கணக்கிடுவதில் எந்த வழக்கு, மேல்முறையீடு அல்லது விண்ணப்பம் தொடர்பானதாக இருந்தாலும் எத்தனை நாள் எவ்வாறு கணக்கிடப்பட வேண்டும் என்பது. இதில் முதல் நாள் விட்டு விடப்படும். இது போன்ற வகைமுறையே (2)ஆம் உட்பிரிவில் மேல்முறையீடு சீராய்வு அல்லது சீரமைப்பு தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதே நெறிமுறை 1897 பொது கூறுகள் சட்டத்தின் 9ஆம் பிரிவிலும் வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் மையச் சட்டம் எதிலும் வகை செய்யப்பட்டிருப்பதாவது பொது கூறுகள் சட்டத்தின் தொடக்கத்திற்கும் பின்னர் முதல் தொடக்க நாளை இந்த நோக்கத்திற்காக விட்டு விடுவது போதுமானதாகும் அல்லது வேறு எந்தக் காலமும் இதிலிருந்து என்னும் சொல் மற்றும் வரை என்னும் பயன்பாடு அதைச் சேர்ந்துக் கொள்வதாக அதாவது கடைசி தாளைச் சேர்ப்பதாக அமையும்.

மேற்சொல்லப்பட்ட நெறிமுறையை செயற்படுத்துவதில், சீராய்வு மனுதாரர்களின் வழக்கறிஞரின் வாதமாவது தீர்ப்பாணை தேதியிலிருந்து கால வரம்பு தொடங்குகிறது என்பது. இதன் உடன்பாட்டை தெரிவிக்க இயலாது. இதில் தேதி கணக்கிடப்படுதலில் தீர்ப்பாணைத் தேதி நீக்கப்பட்ட பின்னர் கணக்கிடப்படுதல் வேண்டும்.

14. மேல்நிலை நீதிமன்றத்தின் தீர்ப்பில் அறிக்கை செய்யப்பட்டவாறு மேற்கு வங்காளம் இன்றியமையாத பொருட்கள் வழங்கீட்டு கழகத்தின் வழக்கு அ.இ.அ. 1999 உச்.நீ. 3421. இது ஆதாரமாகக் காட்டப்பட்டது. சீராய்வு மனுதாரரின் வழக்கறிஞரின், அவரது ஆதாரங் களுக்கு சார்பாக. மேல்நிலை நீதிமன்றம் கூறிய தாவது. கால வரம்பு தொடங்குவது தீர்ப்பாணைத் தேதியிலிருந்து மற்றும் உள்ளபடியே தீர்ப்பாணை கையொப்பமிட்டு பெறப்பட்ட தேதியன்றிலிருந்து அன்று. இதனை அறிய தீர்ப்பினை கவனமாகக் கூர்ந்தாய்வு செய்வதில், இதில் கூறப்பட்டிருப்பதாவது. கால வரம்பு சட்டத்தின் உறுப்பு 136 பத்தி எண் 5 ஆதார மாகக் கொள்ளப்பட்டது. இது பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

“8. உறுப்பினை கூர்ந்தாய்வு செய்வதில், மேற்கூறப்பட்டதில், தெளிவாக்கப்பட்டிருப்ப தாவது தீர்ப்பாணை எதனையும் நிறைவேற்று வதில் (கட்டாய தடையுறுத்து ஆணை வழங்குவது தொடர்பான தீர்ப்பாணை அல்லாத) பிற அல்லது உரிமையியல் நீதிமன்ற ஆணை வகுத்து ரைக்கப்பட்ட 12 ஆண்டுக்காலம். இதில் 3 ஆவது பற்றி 2 பிரிவுகளைக் கொண்டு குறிப்பிடுவது கால வரம்புக்காலம் எதிலிருந்து தொடங்கியுள்ளது. அதுவே காலவரம்பின் தொடக்கக்காலம் அவையாவன.

(i) அந்த தீர்ப்பாணை அல்லது ஆணை செயற்படுத்தப்படும் நிலை ஏற்படும்போது மற்றும்

(ii) தீர்ப்பாணை அல்லது பிந்திய ஆணை நிலை எதுவும், பணச் செலுத்தம் எதனையும் பணிக்கிறவிடத்து அல்லது சொத்து எதனையும் ஒப்படைக்கப் பணிக்கிறவிடத்து அது ஒரு குறிப்பிட்ட தேதியில் அல்லது பின்வரும் காலத்தில் செலுத்தத்தில் தவறுகிற அல்லது நிறைவேற்றுதல் கேட்கப்பட்டது தொடர்பாக ஒப்படைக்கத் தவறுகிறபோது இந்த வரம்புரை யில் கூறப்பட்டவாறு கால வரம்பு என்பது அந்தத் தீர்ப்பாணையினை செயற்படுத்துவதற்கு இல்லை என்றும் மற்றும் நிலையான தடை யுறுத்து ஆணை பிறப்பிப்பதற்கும் கால வரம்புக் காலம் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. நாம் இங்கு மேற்கூறப்பட்ட தொடங்குதல் பற்றிய காலத்தில் அதாவது எப்போது தீர்ப்பாணை அல்லது ஓர் ஆணை செயற்படுத்தத்தக்க தாகிறது என்பதைப் பார்ப்போம். ஒரு தீர்ப்பாணை அல்லது ஆணை அது நிறைவேற்றப்படும்

போது செயற்படுகிறது. ஒரு தீர்ப்பாணை நிறைவேற்றப்படுவதற்கு அது இருத்தல் அவசியம். ஒரு தீர்ப்பாணை இருந்து வருவதால் கொள்ளப் படுவதற்கு அது தீர்ப்பு வெளியிடப்பட்ட உடன் இருந்து வருவதாக கொள்ளப்படும். ஆனால், இந்த பொருண்மை பற்றி ஒருமுறை அறிக்கை எடுக்கப்படலாம். அதாவது தீர்ப்பாணை வனையப் பட்டு கையொப்பமிடப்படுதல். அதாவது தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட பின்னர் சில நோக்கங்களுக்குப் பின்னர்சில நேரங்களுக்குப் பின்னர் இது உடனடியாக பெறப்படும் எந்த வழக்கிலும் 15 நாட்களுக்குள் அதாவது தீர்ப்புத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள், அந்தத் தீர்ப்பாணையில் தேதியிடப்பட்டிருக்குமானால் அதாவது அது எழுதப்பட்டு கையொப்பமிடப்பட்ட தேதி அது தீர்ப்புத் தேதியுடன் ஒத்திருக்க முடியாது. இந்த வேறுபாடு, உ.வி.தொ.ச.இன் கட்டளை 20 விதி 7இனால் கவனிக்கப்படுகிறது. இடைநிலையாக, வகை செய்யப்பட்டிருப்பதாவது தீர்ப்பாணை தேதியையும், தீர்ப்பு வெளியிடப்பட்ட தேதியையும் வெளியிடுதல் வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட தீர்ப்பு இதனைத் தெளிவாக்குகிறது. கால வரம்பின் தொடக்கம் கால வரம்புச் சட்டத்தின் உறுப்பு 136இல் அடங்கியுள்ளவாறு தீர்ப்பாணை அல்லது ஆணை செயற்படுத்தப்படுத்ததக்கதாவது மற்றும் தீர்ப்பாணை அல்லது பிந்திய ஆணை எதுவும், பணிப்பதாவது. பணச் செலுத்தம் அல்லது சொத்து எதனின் ஒப்படைப்பு தொடர்பாக. ஒரு குறிப்பிட்ட தேதியை குறித்திடும்.

15. தற்போதைய வழக்கில் குறித்தவகை நிறைவேற்றுதல் பற்றிய தீர்ப்பாணையில், விசாரணை நீதிமன்றம், தீர்ப்புக் கடனாளி இரண்டு மாதங்களுக்குப் பின் விற்பனை ஆவணத்தை நிறைவேற்ற பணித்துள்ளது. எனினும், இரண்டு மாதங்களுக்குள்ள விற்பனை ஆவணம் நிறைவேற்றப்படவில்லை. எனவே, கால வரம்பு, நீதிமன்றக் கருத்துப்படி செலுத்தத் தவறிய தேதியிலிருந்து செயற்படும்.

16. இது இவ்வாறு இருக்கையில், கால வரம்பின் பொது வகைமுறைகளை செயற்படுத்து வதில் பொதுக் கூறுகள் சட்டத்தின் 9ஆம் பிரிவினை செயற்படுத்துவதில், தீர்ப்பாணைத் தேதி விலக்கப்பட வேண்டும். அத்தகைய வழக்கில் தீர்ப்பாணையைத் தேதி விளக்கப்படும். மேல்நிலை நீதிமன்றம், மே.வ. இன்றியமை யாத பொருட்கள் வழங்கீட்டுக் கழகம் –எதிர்– சுவதேசி அக்ரோ விவசாயம் மற்றும் வைப்பீடு தனியார் வரம்பிடப் மற்றும் பிறர் அ.இ.அ. 1993 உச்.நீ.வ. 3421இல் கால வரம்புச் சட்டத்தின் உறுப்பு 136இனை ஆதாரமாக்கியது. இந்த உறுப்பின் இரண்டாம் பிரிவை செயற் படுத்தி நிலைவேற்றுதல் மனு நேரத்திற்குள் முன்னிடப்பட்டுள்ளது. பொது வகைமுறைகள் சட்டத்தின் பிரிவு 9இனைச் செயற்படுத்தி முழு நீதியர் உச்சநீதிமன்ற வழக்கில், தருண்பிரசாத் சாட்டர்ஜி வழக்கில் 2000 (8) உச்.நீ.வ. 649இல் முதல் நாள் விலக்கப்பட்டது மற்றும் நிறை வேற்றுதல் மனு. கால வரம்பு காலத்திற்குள் முன்னிடப்பட்டது. தற்போதைய நிறைவேற்றுதல் மனு கால வரம்புக் காலத்திற்கு முன்னிடப் பட்டது. அதாவது 12 ஆண்டு களுக்குள் எனவே கால வரம்பு என்பது குறிப்பு எனில் சீராய்வு மனுதாரர்களுக்கு எதிராக மறுமொழியளிக்கப் பட்டுள்ளது.

**குறிப்பு எண் (11)**

எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணையைப் பொருத்தவரை தொடர்புடைய நிறைவேற்றுதல் நீதிமன்றம் குறித்தவகை நிறைவேற்றுதல் தீர்ப்பாணை தொடர்பாக. குடும்ப உறுப்பினர்கள் தரப்பினர்களாக இல்லாதபோதும் அவர்கள் நிறைவேற்றுதல் மனுக்களின் தரப்பினர்களாக்கப் பட்டுள்ளனர். அதன் பின்னர் தனித்தனி வழக்கு களில் சட்ட வாரிசுகளின் பங்குகள் விளம்பப் பட்டிருப்பதால் இது இரண்டாம் மேல்முறையீட்டு நிலையை எட்டியுள்ளதால், நிறைவேற்றுதல் நீதிமன்றம் பொருண்மையின்படி, சொல்லப் பட்ட பொருண்மைகள் பற்றி கவனித்துள்ளது மற்றும் பிற சக சொந்தக்காரர்களின் உரிமை களையும் பாதுகாத்துள்ளது. அதாவது உரிமை யியல் வழக்கின் விளம்பப்பட்ட சக சொந்தக் காரர்கள் தொடர்பாக. விற்பனை ஆவணத்தில் 4/9 பிரிக்கப்படாத பங்குகள் தொடர்பாக நிறைவேற்ற ஆணையிடப்பட்டுள்ள அதாவது

விற்பனை உடன்படிக்கையை நிறைவேற்றியுள்ள ஆண் உறுப்பினர்கள் சார்பாக உடைமையைப் பொறுத்தவரை, நிறைவேற்றும் நீதிமன்றம், தீர்ப்பாயம் வைத்திருப்பதை சட்டத்தின் படியான தனிப்பட்ட நடவடிக்கைகளைத் தொடங்கி நடத்துதல் வேண்டும். எனவே, நிறைவேற்றுதல் நீதிமன்ற ஆணை, நீதிமன்றக் கருத்தில் எந்தக் குறைபாட்டினாலும் துன்புறவில்லை. குறித்த நிறைவேற்றுதல் தொடர்பாக பெறப்பட்ட தீர்ப்பாணை அறுதியான நிலையை எட்டியுள்ளது. தற்போது விற்பவர்கள், பிற கூட்டுப் பங்குதாரர்கள் தீர்ப் பாணை நிறைறே்றுதலை தவிர்க்க முயற்சிக் கின்றனர். அத்தகைய செயல் இந்த நிலையில் அனுமதிக்கப்பட முடியாது.

18. மேலும், சீராய்வு மனுதாரர்களுக்கான வழக்கறிஞர், மேல்நிலை நீதிமன்றத் தீர்ப்பினை ஆதாரமாகக் கொண்டுள்ளார். பால்ராஜ் தனுஜா மற்றும் பிறர் –எதிர்– சுனில் மதன் மற்றும் பிறர், அ.இ.அ.1999 உச்.நீ. 3381. இதில் கூறப்பட்ட தாவது, எதிர்வாதிகளால், முன்னிடப்பட்ட எழுத்து மூல விவர உரை, இல்லாதபோதும், நீதிமன்ற மானது, உ.வி.தொ.ச.இன் கட்டளை விதி 10இன்படியான நடவடிக்கைகளில் சிறிது முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டது. எதிர் வாதிக்கு எதிரான தீர்ப்பு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னர், நீதிமன்றமானது, கவனிக்க வேண்டிய தாவது, வாதுரையில் கூறப்பட்ட பொருண்மை யின் ஏற்கப்பட்டதாகக் கொள்ளப்பட்ட பின்னரும், தீர்ப்பானது, வாதி சார்பாக, பிறப்பிக்கப்படும். அதுவும் வாதுரையில் குறிப்பிடப்பட்ட பொருண்மை கள் எதுவும் மெய்ப்பிக்கப்படாத கோரப்படாத நிலையிலும், நீதிமன்றத்திற்கு மனநிறைவ டையும் பொருட்பாடு. எனவே, எந்தப் பொருண்மை யும் மெய்ப்பிக்க தேவையில்லை என்று மன நிறைவடைந்தபேரில் நீதிமன்றமானது எதிர் வாதிக்கு எதிரான தீர்ப்பினை வசதியாகப் பிறப்பிக்கும் இவர்கள் எழுத்து மூல விவர உரையை முன்னிடவில்லை. இந்த வழக்கில் பூசலான பொருண்மைகள் பற்றிய கேள்விகள் உள்ளபோது, வாதுரைப்படி மேலுமான மெய்ப்பிப்பு வாதியிடமிருந்து கோரப்படும். எனவே, மேற் சொல்லப்பட்ட தீர்ப்பு தற்போதைய வழக்கில் எந்த விளைவையும் ஏற்படுத்தாது அது பொருந்தாது.

19. மற்றொரு தீர்ப்பு பதிவேட்டில் வைக்கப் பட்டிருந்தபோதிலும் மனுதாரர்களின் வழக்கறிஞர் கூறப்பட்ட வழக்கில் இந்திய யூனியன் மற்றும் பிறர் –எதிர்– ரமேஷ் காந்தி, 2012 (1) உச்.நீ.வ. 476, மேல்நிலை நீதிமன்றத்தின்பேரில், மோசடி செய்து பெறப்பட்ட தீர்ப்பில் காட்டப்பட்டுள்ளது. இது செயலற்றது மற்றும் இது எந்த நிலை யிலும், தள்ளுபடி செய்யப்பட்டது. மோசடி பற்றிய கேள்வி இந்த வழக்கில் பொருண்மை யின்படி விற்பவர்கள்/தீர்ப்புக் குற்றவாளிகள் மோசடிக்காக குற்றம் சுமத்தப்பட்டவர்கள் இவர் கள் ஒரு உடன்படிக்கையினை ஏற்படுத்து கின்றனர். இவர் சொத்தின் முழு சொந்தக்காரர்கள் என்று கூறுகின்றனர். அவர்களுக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும்போது, அது அவர்களுக்கு எதிராக உள்ளது. இவர்கள் தீர்ப்பாணையை எதிர்க்கவில்லை மற்றும் இதனை அறுதிநிலையை எட்ட அனுமதிக்க உள்ளபோது, இதில் இவர்கள் எதனையும் கூற முடியாது. அதாவது தீர்ப்பாணை செயற்பாடற்றது என்ற வாதம். வாதி, பொருண்மை யின்படி 1996ஆம் ஆண்டில் ஒரு தீர்ப்பாணையைப் பெறுவதில் வெற்றி பெற்றுள்ளனர். சொல்லப் பட்ட தீர்ப்பாணை இத்தனை ஆண்டுகளாக எதிர்க்கப்படவில்லை. எனவே, இந்த நிலையில், பிற சக சொந்தக்காரர்களுடன் கைகோர்க்கும் பொது வாங்குபவர்கள் நிறைவேற்றுதல் மனு வினை எதிர்க்க முடியாது. அவ்வாறே, குறிப்பு எண் (ii) சீராய்வு மனுதாரர்களுக்கு எதிராக மறுமொழியளிக்கப்படுகிறது.

20. மேற்சொல்லப்பட்ட கலந்தாய்வுகளின் கருத்தில், இந்தச் சீராய்வு மனுவில், எனக்கு எந்த நற்குறிப்பும் தெரியவில்லை. மேற்சொல்லப் பட்ட கண்டறிதல்களுடன் உரிமையியல் சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகையின்றி, இதன் விளைவாக தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# அரசு போக்குவரத்து கழகங்களில் ஓட்டுனர், நடத்துனர் பணிக்கு தேர்வானவர்களிடம் அந்தப் பணிதான் வாங்கப்பட வேண்டும் - இதர பணிகளில் ஈடுபடுத்தக் கூடாது

சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை அமர்வு
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.என்.சதீஷ்குமார்
மாண்புமிகு நீதிபதி திரு.எம்.ஜோதிராமன்
நீ.பே.(மஅ) எண் 451/2019
நாள்: 02-03-2026

அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம்
சார்பாற்றம்–அதன் பொதுச்செயலாளர் ஏ.கனகசுந்தர்
அருள்நகர், புறவழிச்சாலை, மதுரை–16 ...மனுதாரர்

–எதிர்–

1. தமிழ்நாடு அரசு – சார்பாற்றம் அதன் கூடுதல் தலைமை செயலாளர், போக்குவரத்துத் துறை, தலைமைச் செயலகம், சென்னை 09
2. தநாஅபோக (மதுரை) லிட் – சார்பாற்றம் அதன் நிர்வாக இயக்குனர், புறவழிச்சாலை, மதுரை 16
3. தநாஅபோக (மதுரை) லிட் – சார்பாற்றம் அதன் பொது மேலாளர், மதுரை மண்டலம் புறவழிச்சாலை, மதுரை 16. ...எதிர்மனுதாரர்கள்

**வேண்டுகை:**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 226வது பிரிவின் கீழ் தாக்கல்செய்யப்பட்ட இந்த நீதிப்பேராணை மனு, எதிர்மனுதாரர்கள் (போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு), ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களை அவர்கள் எந்தப் பணிக்காகத் தேர்வு செய்யப்பட்டார்களோ அந்தப் பணியை வழங்காமலோ அல்லது வாங்காமலோ ‘இதர பணிகளில்’ ஈடுபடுத்துவதைத் தடுத்திடவும்; மற்றும் 31.10.2018 தேதியிட்ட அரசாணை எண் 321, போக்குவரத்து (இ1) துறையின் விதிகளை மீறி அவர்களுக்கு ஊதியம் வழங்குவதைத் தடுத்திடவும்; இது தொடர்பாக 11.12.2018 அன்று மனுதாரர் சங்கம் அளித்த கோரிக்கை மனுவைப் பரிசீலித்து, தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திரு.ஏ.ராகுல், வழக்கறிஞர்
மனுதாரருக்காக

திரு.ஜே.அசோக், கூடுதல் அரசு வழக்கறிஞர்
முதல் எதிர்மனுதாரருக்கு

2 மற்றும் 3ம் எதிர்மனுதாரருக்காக – திரு கே.ராமையா, வழக்கறிஞர்

## தீர்ப்பு:

(நீதிமன்றத்தின் இந்த உத்தரவு நீதியரசர் திரு. என்.சதீஷ் குமார் அவர்களால் பிறப்பிக்கப் பட்டது.)

இந்த ரிட் மனுவானது பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது:

- ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களை, அவர்கள் சார்ந்த பணிப்பிரிவு அல்லாத இதர பணிகளில் ஈடுபடுத்துவதை தடுத்து நிறுத்த வேண்டும்.
- 31.10.2018 தேதியிட்ட அரசு ஆணை (G.O.Ms.No.321) போக்குவரத்துத் துறை விதிகளுக்கு முரணாக அவர்களுக்கு ஊதியம் வழங்குவதை நிறுத்த உத்தரவிட வேண்டும்.
- மனுதாரர் சங்கம் சார்பில் 11.12.2018 அன்று அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவை பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்.

2. தமிழ்நாடு அரசு, 31.10.2018 தேதியிட்ட அரசு ஆணை (G.O.Ms.No.321) மூலமாக, போக்குவரத்து கழகத்தின் கிளைகள், மண்டலங்கள் மற்றும் தலைமையகத்தில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை ஒரு குறிப்பிட்ட வரைமுறைக்குள் கொண்டுவர இரண்டாவது எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டது. அரசு போக்குவரத்து கழகங்களின் செலவினங் களை ஆய்வு செய்தபோது, மொத்த பணப் பயன்பாட்டில் 71% மனிதவள செலவிற்காக (சம்பளம் மற்றும் இதர சலுகைகள்) செலவிடப் படுவது கண்டறியப்பட்டது. மேலும், எந்தவொரு பணிமனையிலும் பணியாளர்களின் எண்ணிக்கை யில் தெளிவான கட்டுப்பாடு இல்லை என்பதும் தெரியவந்தது. எனவே, முதல் எதிர்மனுதாரரின் அறிவுறுத்தலின்படி, இரண்டாவது எதிர்மனுதாரர் பணியாளர் விவரப் பட்டியலை வழங்கினார். அதன் அடிப்படையில், அரசு நிர்ணயித்த பணியாளர் விபரம் பின்வருமாறு:

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை) லிமிடெட் –

**பணியாளர் விபரம்:**

● திட்டமிடப்பட்ட பேருந்து சேவைகள்: 2166

● பணிமனைகளின் எண்ணிக்கை: 39

● அதிகாரிகள் (தலைமையகம்/மண்டலம் / பணிமனை உட்பட): 64

| பணியாளர் பிரிவு | எண்ணிக்கை |
|---|---|
| நிர்வாக மேற்பார்வை பணியாளர்கள் | 71 |
| நிர்வாகப் பணியாளர்கள் | 552 |
| போக்குவரத்து மேற்பார்வை பணியாளர்கள் | 180 |
| தொழில்நுட்ப மேற்பார்வை பணியாளர்கள் | 187 |
| தொழில்நுட்பப் பணியாளர்கள் | 1689 |
| நிரந்தர ஓட்டுநர்கள் | 5686 |
| நிரந்தர நடத்துனர்கள் | 5686 |

நிர்ணயிக்கப்பட்ட 5686 என்ற எண்ணிக்கைக்கு அதிகமாக 184 ஓட்டுநர்கள் மற்றும் 81 நடத்துனர்கள் கூடுதலாக உள்ளனர். இவர்கள் கீழே உள்ள பத்தி 5(ட)–ல் குறிப்பிட்டுள்ள படி சரிசெய்யப்பட வேண்டும். அதேபோல், 135 தொழில்நுட்பப் பணியாளர்கள் கூடுதலாக உள்ளனர். அவர்களும் பத்தி 5(ட)–ன்படி சரி செய்யப்பட வேண்டும்.

2.2. மேலே குறிப்பிட்டுள்ள அரசாணையில் (GO.), பணியாளர் எண்ணிக்கையை நிர்ணயிக்கப் பட்ட அளவை விட அதிகரிக்கக்கூடாது என்று அரசு உத்தரவிட்டுள்ளது. ஏதேனும் கூடுதல் பணியாளர்கள் தேவைப்பட்டால், அதற்கு உரிய காரணங்களை விளக்கி, இரண்டாவது எதிர்மனு தாரரின் (போக்குவரத்து கழகம்) இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலைப் பெற வேண்டும். அதன் பிறகு, அந்த கோப்பு முதல் எதிர்மனுதாரரின் (அரசு) இறுதி ஒப்புதலுக்கும், திருத்தத்திற்கும் அனுப்பப்பட வேண்டும். மேலும், பேருந்து சேவைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மட்டுமே ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களின் பணி யிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்றும், உபரி யாக உள்ள பணியாளர்கள் ஓய்வு பெறும் வரை புதிய நியமனங்கள் செய்யக்கூடாது என்றும் அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது. முக்கிய மாக, ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களை 'இதர பணிகளுக்கு' (Other Duties) பயன்படுத்தக் கூடாது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக, தொழிற்சங்கங்களுக்கும் போக்குவரத்து கழகத்திற்கும் இடையே தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12(3)–ன் கீழ் ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் 9–வது பிரிவில், தொழில் நுட்பம், போக்குவரத்து அல்லது நிர்வாகப் பிரிவு களில் ஒரு குறிப்பிட்ட பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பணியாளர்களை வேறு வேலைகளுக்கு மாற்றக் கூடாது என்று தெளிவாக ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. ஆனால், இந்த அரசாணை மற்றும் ஒப்பந்தத்தை மீறி, ஆளுங்கட்சியுடன் தொடர்பு டைய அண்ணா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த சுமார் 208 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள், தங்கள் பணிகளைச் செய்யாமல் 'இதர பணி' என்ற பெயரில் வேலை செய்யாமலேயே சம்பளம் வாங்குவதாக இந்த ரிட் மனுவில் குற்ற சாட்டப்பட்டுள்ளது.

3. 31.10.2018 தேதியிட்ட அரசாணை மற்றும் அது தொடர்பான ஒப்பந்தத்தை

ஒப்புக்கொண்டு எதிர்மனுதாரர்கள் பதில் மனு தாக்கல் செய்துள்ளனர். நிர்வாகப் பிரிவில் ‘உதவியாளர்’ (Assistants) பணியிடங்கள் காலி யாக இருப்பதால், தகுதியுள்ள ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தற்காலிகமாக நிர்வாகப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவதாகவும், புதிய இளநிலை உதவியாளர்கள் நியமிக்கப்பட்ட பிறகு அவர்கள் மீண்டும் தங்கள் பழைய பணிக்குத் திரும்புவார்கள் என்றும் அவர்கள் வாதிட்டனர். 01.03.2019 நிலவரப்படி இத்தகைய பணியாளர் களின் எண்ணிக்கை 159 ஆகக் குறைந்துள்ள தாகவும், அவர்களில் 12 பேர் மருத்துவ ரீதியாக ஓட்டுநர்/நடத்துநர் பணிக்கு தகுதியற்றவர்கள் என்பதால் அவர்களுக்குப் பணி மாற்றம் வழங்கப்படும் என்றும் கூறி, இந்த மனுவைத் தள்ளுபடி செய்யக் கோரினர்.

4. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், முந்தைய ஆட்சியின் போது இந்த வழக்கு தொடரப்பட்டாலும், தற்போதும் அதே நிலை நீடிப்பதாக வாதிட்டார். 15.05.2025 தேதியிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட பதிலின்படி, சுமார் 264 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் இன்னும் ‘இதர பணி’ என்ற பெயரில் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும், ஆளுங்கட்சி ஆதரவு தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு வேலை செய்யாமல் சம்பளம் பெறுவ தாகவும் அவர் குறிப்பிட்டார்.

5. தற்போது புதிய பணி நியமன ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இனிமேல் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நிர்வாகப் பணிகளில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் என்றும் அரசு தரப்பு கூடுதல் வழக்கறிஞர் தெரிவித்தார்.

6. நீதிமன்றத்தின் ஆய்வு: வழக்கின் விவரங் களை ஆராய்ந்ததில், 2025-ஆம் ஆண்டு பெறப்பட்ட த.அ.உ. (RTI) சட்டம் தகவல்கள், ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களாக நியமிக்கப் பட்டவர்கள் இன்னும் இதர பணிகளில் ஈடுபடுத்தப்படுவதை உறுதி செய்கின்றன. ஒருபுறம் நிரந்தர பணியாளர்களை நிர்வாகப் பணிக்கு அனுப்பி விட்டு, மறுபுறம் காலி பணியிடங்களை நிரப்ப தற்காலிக ஓட்டுநர்களை நியமிக்க அனுமதி கோருவது முரணானது.

7. ஒருவர் ஓட்டுநராகவோ அல்லது நடத்துநராகவோ நியமிக்கப்பட்டால், அவரது முதன்மைப் பணி அதுவாகத்தான் இருக்க வேண்டும். பணியின்போது உடல்நலக்குறைவு ஏற்பட்டு, மருத்துவ ரீதியாக தகுதியற்றவர் என்று சான்றளிக்கப்பட்டால் மட்டுமே, அவருக்கு மாற்றுப் பணி வழங்கப்பட வேண்டும். மற்றபடி அவர்களை நிர்வாகப் பணிகளுக்குப் பயன் படுத்துவது சட்டவிரோதமானது.

8. தீர்ப்பு: எனவே, 31.10.2018 தேதியிட்ட G.O.Ms.No.321 அரசாணையையும், ஒப்பந்தத்தின் 9-வது பிரிவையும் உடனடியாகவும் துல்லிய மாகவும் அமல்படுத்த எதிர்மனுதாரர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிடுகிறது. எந்தவொரு ஆளுங்கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்க உறுப்பினர்களாக இருந்தாலும், ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு இனி 'இதர பணி’ என்ற பெயரில் நிர்வாகப் வேலைகள் வழங்கப் படக்கூடாது என்பதை நீதிமன்றம் தெளிவுபடுத்து கிறது. இந்த உத்தரவை அதிகாரிகள் மீறினால், எந்தவொரு தொழிலாளியும் அல்லது தொழிற் சங்கமும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரலாம்.

9. மேற்கண்ட உத்தரவுகளுடன் இந்த ரிட் மனு முடிவு செய்யப்படுகிறது. இதற்கான செலவுத் தொகை ஏதுமில்லை.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

**சட்டக் கல்லூரிகள்,**
**வழக்கறிஞர் மன்றங்கள்,**
**சட்டப் பயிலகம்,**
**சட்டக் கதிரில் விளம்பரம்**
**செய்து பயனடைவீர்!**

தொடர்புக்கு

**E-mail:**
**sattakadir1992@yahoo.co.in.**

# வழக்கின் குறைபாடுகள் சில எந்த நேரத்திலும் திருத்தப்படலாம்

சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்)
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.ஜி.ஆர்.சுவாமிநாதன்
மாண்புமிகு நீதிபதி திரு.எம்.ஜோதிராமன்
மே.வ.(MD) எண்: 76/2019
நாள்: 7.3.2025
2025 (5) CTC 45

ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமி சிலை,
ஸ்ரீ பால சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்,
வன்னிமலை, கரூர் சார்பாற்றம் அதன் நிர்வாக அலுவலர்
...மேல்முறையீட்டாளர்கள்

–எதிர்–

அருக்காணி அம்மாள், மாறப்ப கவுண்டர் கட்டளை சார்பாற்றம்
அதன் மேலாண்மை கட்டளைக்காரர்
எண் 9டி/3, ராமகிருஷ்ணபுரம், கரூர்
2. தாளாளர், சேரன் வித்யாலயா மெட்ரிக்குலேஷன் பள்ளி,
வள்ளி மலை, கதப்பாரி அஞ்சல், கரூர்
3. தாளாளர், சேரன் வித்யாலயா உயர்நிலைப்பள்ளி வள்ளிமலை,
கதப்பாரி அஞ்சல், கரூர் ...எதிர்வழக்கீட்டாளர்கள்

**எஸ்.மாதவன்**
மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

**பி. வள்ளியப்பன், வழக்கறிஞர்**
எஸ்.கோகுலராஜக்காக
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

மே.வ. தள்ளுபடி செலவுத் தொகையின்றி.

**கோரிக்கை:**மு.வ.எண்101/2016 முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூரில் கோப்பில் உள்ளதன் மு.மே.எண் 397/2017இன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை 10.1.2018 தேதியிட்டதை தள்ளுபடி செய்யக் கோரி உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 96ஆம் பிரிவின்படி முன்னிடப்பட்ட வழக்கு.

## தீர்ப்பு

**நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்**

1. மேல்முறையீட்டாளர், இதில் மு.வ.எண் 101/2016இனை முன்னிட்டார் இது. கரூரில் முதன்மை மாவட்டம் நீதிமன்றக் கோப்பில் உள்ளது. இது தாவாவில் உள்ள சொத்தின் உடைமையை மீளப் பெறுவதற்கானது. எதிர் வாதிகள் மு.மே.எண் 397/2017இனை முன்னிட்டுள்ளனர். அதாவது உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின், கட்டளை 7, விதி 11இன்படி விரிவான ஆணை 10.1.2018 தேதியிடப்பட்டது தொடர்பாக. வாதுரையை நிராகரிக்க கோரப்பட்டது. இதில் மு.மே.அனுமதிக்கப்பட்டது. வாதுரை நிராகரிக்கப் பட்டது. இத்தகைய ஆணையை ஒரு தீர்ப்பாணைப் போன்றதால், இந்த மேல்முறையீடு வாதியால் உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 96ஆம் பிரிவின்படி முன்னிடப்பட்டது.

2. இதில் தீர்மானிக்கப்பட வேண்டிய குறிப்பாவது நிறைவேற்றுகை அலுவலர் தானே முற்பட்டு இந்த வழக்கை தொடுத்ததால் இது தள்ளுபடி செய்யத்தக்கதா என்றும் கேள்வி அதாவது பரம்பரைக் கட்டளைக்காரரின் அதிகார மின்றி செயற்பட்ட காரணத்தால்.

3. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளித்தது, கீழ்நிலை நீதிமன்றம் 1908

உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 7 விதி 11இன்படி வாதுரையை நிராகரித்ததில் தவறு உள்ளதாக, அவர் பணிந்த ளித்தது திட்ட தீர்ப்பாணையின்படி நிறைவேற்றுதல் அலுவலர், ஒரு தகுதி வாய்ந்த அலுவலர். அதாவது வழக்கிடவும் வழக்கிடப்படவும் அதாவது வழக்கிடவும் வழக்கிடப்படவும் அதாவது கோயிலின் பெயரால், இதில் குறிப்பிட்ட வாதமாவது, வழக்கின் நடத்திச் செல்லுந்தன்மை தொடர்பான நிறைவேற்றுகை அலுவலரின் தகுதி தொடர்பாக வழக்கு முன்னிடுவதற்கானது பற்றி இது உ.வி.தொ.ச.இன் கட்டளை 7 விதி 11இன் எல்லைக்குள் வராது. இதில் விசாரிக்கத்தக்க பிரச்சினையாவது, கருதி எழுந்துள்ளது. இது பிரதான வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது. ஏனெனில் அதில் விரிவான வாய்மொழி மற்றும் ஆவணச்சான்று தேவைப் படுகிறது. அவர் நீதிமன்றத் தீர்ப்பாணையைத் தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார் மற்றும் இந்த மேல்முறையீட்டை யும் அனுமதிக்க கோரியுள்ளனர். இவரது வாதங்களுக்கு ஆதரவான, அவர் பின்வரும் வழக்குகளை ஆதாரமாக்கி யுள்ளார்.

(அ) நிறைவேற்றுதல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் –எதிர்– பி.சுப்பிரமணியன் 2018 (3) M.W.N. (உரிமை யியல்) 45; CDJ 2018 MHC 4435;

(ஆ) A.N.குமார் –எதிர்– அருள்மிகு அருணா சலீஸ்வரர் தேவஸ்தானம், திருவண்ணாமலை சார்பாற்றம் அதன் நிர்வாக அலுவலர் CDJ 2011 MHC 1412;

(இ) ஸ்ரீகல்யாண வெங்கடராமண்ண சுவாமி சிலை, தான்தோணி மலை சார்பாற்றம் அதன் நிர்வாக அலுவலர்/துணை ஆணையர் –எதிர்– எம்.பழனிவேல் 2023 (3) M.W.N. உரிமையியல் 86; CDJ 2023 MHC 4792.

(ஈ) ஸ்ரீரங்கசுவாமி சிலை சார்பாற்றம் அதன் இணை ஆணையர்/நிர்வாக அலுவலர் ஸ்ரீரங்கம் –எதிர்– J.ஸ்ரீராம் 2023 (2) M.W.N. (உரிமை யியல்) 18; (D.B.) AS (MD) No.140/2015 விரிவான ஆணை 13.4.2023 தேதியிடப்பட்டது.

(உ) அருள்மிகு சௌந்தரராஜ பெருமாள், தாடிக்கொம்பு சித்ரா பௌர்ணமி மண்டகப்படி, திண்டுக்கல் –எதிர்– அருள்மிகு சௌந்தர ராஜ பெருமாள் திருக்கோயில் சார்பாற்றம் அதன் நிர்வாக அலுவலர், S.A.(MD) எண் 665/2023 விரிவான ஆணை 22.12.2023 தேதியிடப் பட்டது மற்றும்

(ஊ) துர்கை லஷ்மி கல்யாண மண்டபம் சார்பாற்றம் அதன் கே.ஜுவானந்தம் –எதிர்– அருள்மிகு சித்தி கணேசர் நடராஜ பெருமாள், துர்கையம்மன் தொகுப்பு கோயில்கள் சார்பாற்றம் அதன் நிர்வாக அலுவலர், A.S. எண் 397/2010, 14.12.2022 தேதியிடப்பட்டது.

4. மாறாக எதிர்வழக்கீட்டாளருக்காக முன்னிலை யாகிற வழக்கறிஞர் பணிந்தளிப்பது கீழ்நிலை நீதிமன்றம் வாதுரையை சரியாகவே நிராகரித்துள்ளது மற்றும் அந்த ஆணை இடையீடு செய்யத் தேவையில்லை. அவர் நமது கவனத்தை நீதியர் ஆய வழக்கின் முடிவிற்கு ஈர்த்துள்ளார். ஸ்ரீஅர்த்தநாரீஸ்வரர் திருச்செங்கோடு சார்பாற்றம் அதன் தற்போதைய நிர்வாக அலுவலர், ஸ்ரீசபாபதி –எதிர்– டி.எம்.முத்து சுவாமி படையாச்சி, 2003 (1) L.W. 386 மற்றும் வாதிட்டதாவது ஒரு பரம்பரைக் கட்டளைக்காரர் இருக்கும்போது அதாவது சொக்கலிங்கம் என்பவர் உள்ளபோது அவர் மட்டுமே வழக்கு தொடுக்க தகுதி பெற்றவர் ஆவார் மற்றும் நிர்வாக அலுவலர் சட்ட நடவடிக்கைகளைத் தொடங்க தகுதியற்றவர் ஆவார். அவர் ஒரு தொகுப்பான வழக்குகளின் முடிவை ஆதார மாகக் காட்டியுள்ளார். அவை பின்வருமாறு

1. குப்புசாமி –எதிர்– அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில் MANU/த.நா./3786/2017.

2. நிர்வாக அலுவலர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் –எதிர்– பி.சுப்பிரமணியம், 2018 (3) M.W.N. உரிமையியல் 45;

3. பி.எஸ்.மணியன் –எதிர்– அருள்மிகு யோக நரசிம்ம சுவாமி திருக்கோயில் 2019 உச்.நீ.வ. – வலைதளம், சென்.36241;

4. எஸ்.ராதாபாய் –எதிர்– பரணி அபிஷேக கட்டளை சார்பாற்றம், இணை ஆணையர்/நிர்வாக அலுவலர், 2021 உச்.நீ.வ. வலைதளம், சென்னை 16615 மற்றும்

5. பத்மாவதி –எதிர்– ஸ்ரீரங்கநாதசுவாமி சிலை ஸ்ரீரங்கம் சார்பான அதன் இணை ஆணையர் A.S.(MD) எண் 143/2014 விரிவான ஆணை, 2.8.2024 தேதியிடப்பட்டது.

5. எதிரெதிர் வாதங்களை நாங்கள் கவன மாகக் கருதுகை செய்துள்ளோம் மற்றும் பதிவேடு களின் சாட்சிகளை படித்துள்ளோம்.

6. இந்த வழக்கில் கோயில் பரம்பரைக் கட்டளைக்காரரின் மேலாண்மையின் கீழ் உள்ளது என்பதில் பூசல் எதுவுமில்லை. பொருண்மையின்படி பத்தி எண் 3இல் வாதுரை யிலேயே இது தொடர்பான சுட்டுகை உள்ளது. எதிர்வழக்கீட்டாளர்களின் வழக்கறிஞரால் இந்த பிரச்சினை நிர்வாக அலுவலரின் தகுதி பற்றியது. அதாவது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இது பற்றி இன்றும் தீர்மானிக்கப் படாத பொருட்பாடல்ல. மேதகு நீதியர் ஆயம் முடிபில் இந்த வழக்கில் அதாவது ஸ்ரீஅர்த்த நாரீஸ்வரர் திருச்செங்கோடு சார்பாற்றம் அதன் அப்போதைய நிர்வாக அலுவலர், ஸ்ரீ சபாபதி வி.ஜெ.எம். முத்துசுவாமி படையாச்சி, 2003 (1) LW 386 கூறியதாவது. கட்டளைக்காரர்கள் வாரியம் மட்டுமே அப்போது இருந்து வந்துள்ளது. சட்ட நடவடிக்கை தொடங்க தகுதி வாய்ந்தது என்றும் நிர்வாக அலுவலர் சட்ட நடவடிக்கை தொடங்க தகுதி வாய்ந்த அதிகாரியல்ல என்று கூறியுள்ளது. மேற்சொல்லப்பட்ட முடிவு, இந்தக் களத்தில் இருந்து வருகிறது. இந்த நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில் இது ஆதாரமாகக் கொள்ளப் பட்டுள்ளது. நீதியர் ஆயம் பத்மாவதி –எதிர்– ஸ்ரீரங்கநாதசுவாமி சிலை, ஸ்ரீரங்கம் சார்பாற்றம் இதன் இணை இயக்குநர், மே.வ.(MD)எண் 143/2014, 28.2.2024 தேதியிட்ட விரிவான ஆணை. இதில் ஸ்ரீகல்யாண வெங்கட ராமண்ண சுவாமி வழக்கில் இதனை பின்பற்ற மறுத்தது. இது மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞரால் ஆதாரமாக்கப்பட்டது. இதற்கு மாற்றாக ஸ்ரீஅர்த்த நாரீஸ்வரர் வழக்கினைப் பின்பற்றியுள்ளது.

7. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞரால் ஆதாரமாக்கப்பட்ட தீர்ப்பின் முடிவு தாமஸ் கல்வி அறக்கட்டளை –எதிர்– அருள்மிகு ஏகாம்பர நாதர் திருக்கோயில் சார்பா. அதன் நிர்வாக அலுவலர், 2011 (2) M.W.N. (உரிமையியல்) 801. இதில் தெளிவாக பொருண்மைகளில் வேறுபாடு காட்டப்பட்டுள்ளது.

8. எனவே, நிர்வாக அலுவலரின் செயற்பாடு இந்த வழக்கை முன்னிடுவது தொடர்பாக. அதாவது பரம்பரை கட்டளைக்காரரின் அதிகாரத்தை பெறாதது தொடர்பாக. இதனால் வழக்கு செல்லத்தக்கதல்ல என்பது. அதே நேரத்தில் நாம் அறிய வேண்டிய பொருண்மையாவது பரம்பரைக் கட்டளைக்காரர் கோயிலின் நலன்களுக்கு மாறாக செயற்பட முடியாது என்பது. இத்தகைய சூழ்நிலைகளில், ஒரு பக்தர் கோயிலில் அக்கறை உள்ள ஒருவர் வழக்கை முன்னிடலாம். ஒரு பக்தர் வழக்கை முன்னிட முடிந்தபோது கட்டாயமாக ஒரு நிர்வாக அலுவலர் வழக்கை முன்னிட முடியும். அதாவது கோயிலின் சொத்துக்களையும் உரித்தத்தினையும் பாதுகாக்கும் பொருட்டு, ஆனால், இத்தகைய வழக்கில், அவர் தன்னை பரம்பரைக் கட்டளைக்காரராக / கட்டளைக்காரர்களாக வழக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர் கூறுவது வழக்கினை முன்னிட அதிகாரமளிக்க மறுப்பதாக நிர்வாக அலுவலர் இத்தகைய வழக்கில் வரவில்லை. நம் கருத்துப்படி வழக்கினை தொடுப்பதற்கு கட்டளைக்காரர்கள் வாரியத்தினர் அதிகாரம் பெறாதது வழக்கு போடப்பட்டிருந்தாலும் இது திருத்தக் கூடிய ஒழுங்குமுறையே. எந்த நிலையிலும் இது சரி செய்யப்படலாம். அதாவது எதிர்வாதிகள் வழக்கின் செல்லுந்தன்மையை கேள்வியாக்கி எதிர்க்கும்போது, நிர்வாக அலுவலர், இத்தகைய அதிகாரத்தினை முன்னிடலாம் மற்றும் வழக்கை இதன் மூலம் காப்பாற்ற முடியும். அதாவது தள்ளுபடி செய்யப்படுவதிலிருந்து நாம் செயல்முறையில் வழக்கை பரிசீலித்து ஏற்க வேண்டியது. நாம் மாறுபட்ட கருத்துகளாகத் தோன்றும்போது அவற்றை இணக்கமாக்க வேண்டியது.

9. நம் கருத்துப்படி இந்த பொருட்பாடு தொடர்பாக எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பாணையை எதிர்பார்க்கவில்லை மற்றும் மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகையின்றி.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய பின்னடைவு, தானாகவே மருத்துவ அலட்சியத்தைக் குறிக்காது

SCC OnLine SC 3069

நீரஜ் சூத் –எதிர்– ஜஸ்விந்தர் சிங், 2024

தீர்ப்பு வழங்கப்பட்ட தேதி: அக்டோபர் 25, 2024.

நீரஜ் சூத் –எதிர்– ஜஸ்விந்தர் சிங் வழக்கில், 'ஒரு மருத்துவ நிபுணரிடம் எதிர்பார்க்கப்படும் நியாயமான கவனிப்பு நோயாளிக்கு வழங்கப் பட்டிருக்கும்போது, அதற்கு முரணானது நிரூபிக்கப்படும் வரை, குறிப்பிட்ட செயல் நடவடிக்கை எடுக்கத் தக்க அலட்சியமாகக் கருதப்பட மாட்டாது' என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

முறையான சிகிச்சை அளிக்காததிலும், மீண்டும் கண் அறுவை சிகிச்சை செய்யாததிலும் மருத்துவர் வெளிப்படையாகவே கவனக் குறைவாக இருந்தார் என தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு களில், நீதிபதிகள் பமிடிகண்டம் ஸ்ரீ நரசிம்மா மற்றும் பங்கஜ் மித்தல் ஆகியோர் அடங்கிய அமர்வு அத்தீர்ப்பை ரத்து செய்தது. மருத்துவர் அளித்த சிகிச்சைக்கு அல்லது அறுவை சிகிச்சைக்கு நோயாளி சாதகமாகப் பதிலளிக்க வில்லை அல்லது அறுவை சிகிச்சை தோல்வி யடைந்தது என்ற காரணத்திற்காக மட்டுமே, மருத்துவர் தனது கடமைகளைச் செய்வதில் தனக்குள்ள உரிய திறமையைப் பயன்படுத்தத் தவறிவிட்டார் என்பது ஆதாரத்தால் நிரூபிக்கப் பட்டாலன்றி, ('ரெஸ் இப்சா லோக்விட்டர்') சம்பவமே தனக்கான சாட்சி என்ற கோட்பாட்டைப் பயன்படுத்தி மருத்துவரை நேரடியாக மருத்துவ அலட்சியத்திற்குப் பொறுப்பாளியாக்க முடியாது என்று அவர்கள் தீர்ப்பளித்தனர்.

பின்னணி: புகார்தாரர்கள் தந்தையும் மகனும் ஆவர். சண்டிகரில் உள்ள மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான முதுகலை நிறுவனத்தின் மருத்துவரால் 26-06-1996 அன்று ஒரு சிறிய அறுவை சிகிச்சை செய்யப் பட்டபோது, சுமார் 6 வயது சிறுவனாக இருந்த மகனுக்கு அவனது இடது கண்ணில் பிறவி குறைபாடு (அல்லது 'இமை இறக்கம்' என அழைக்கப்படுகிறது) இருப்பது கண்டறியப் பட்டது. மகனின் கண்களில் வேறு எந்தக் குறையும் இல்லை என்றும், இரு கண்களும் இயல்பான பார்வையைக் கொண்டிருந்தன என்றும், இடது கண்ணிமையை வலது கண்ணின் அளவிற்குச் சமமாகச் சிறிதளவு தூக்க வேண்டிய ஒரு சிறிய அறுவை சிகிச்சை யின் மூலம் இந்தக் குறைபாட்டைக் குணப் படுத்தி யிருக்க முடியும் என்றும், ஆனால் அந்த அறுவை சிகிச்சை மிகவும் அலட்சியமாகச் செய்யப்பட்டது என்றும் புகார்தாரர் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது. அறுவை சிகிச்சைக்குப் பிறகு கண்ணின் நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்படுவதற்குப் பதிலாக அது மேலும் மோசமடைந்தது. மருத்துவரின் அலட்சியத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக ரூ.15,00,000/- இழப்பீடும், சிகிச்சைச் செலவு, படிப்பு இழப்பு போன்றவற்றிற்காக மேலும் ரூ. 4,55,000/- இழப்பீடும் கோரி மாநில ஆணையத்தில் புகார் தாரர்கள் புகார் அளித்தனர். மருத்துவர் மற்றும் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான முதுகலை நிறுவனத்திற்கு எதிரான மருத்துவ அலட்சியம் குறித்த இந்தப் புகார் வழக்கு, மாநில ஆணையத்தால் 27-05-2005 நாளிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்யப் பட்டது.

புகார்தாரர்களில் ஒருவருக்கு சிகிச்சை அளித்ததில் மருத்துவர் தரப்பில் எந்தவொரு அலட்சியமோ அல்லது கவனக்குறைவோ இருந்தது என்பதையும், சேதத்தை ஏற்படுத்தக் கூடிய ஏற்றுக்கொள்ள முடியாத எந்தவொரு மருத்துவ முறையையும் மருத்துவர் கையாள வில்லை என்பதையும் நிரூபிக்கப் புகார்தாரர்கள் தவறிவிட்டனர் என்று மாநில ஆணையம் முடிவுக்கு வந்தது. இந்த விவகாரம் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பு வந்த போது, அங்கே மாநில ஆணையத்தின் உத்தரவு

ரத்து செய்யப்பட்டுப் புகார் பகுதியளவு ஏற்றுக் கொள்ளப்பட்டது. புகாரைத் தள்ளுபடி செய்த மாநில ஆணையத்தின் தீர்ப்பு மற்றும் உத்தரவு ரத்து செய்யப்பட்டு, சிகிச்சையில் அலட்சியம் காட்டியதற்காக மருத்துவர் மற்றும் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான முதுகலை நிறுவனம் ஆகியோர் கூட்டாகவும் தனித்தனியாக வும் ரூ.3,00,000/- இழப்பீடும், ரூ. 50,000/ - வழக்குச் செலவும், புகார் அளிக்கப்பட்ட தேதியி லிருந்து 6% வட்டியுடன் வழங்கப்பொறுப்பானவர்கள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் இந்த முடிவால் அதிருப்தி அடைந்த மருத்துவரும் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான முதுகலை நிறுவனமும் இணைந்து உரிமையியல் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளனர்.

**பகுப்பாய்வு மற்றும் தீர்ப்பு:**

அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளியின் நிலையில் ஏற்படும் பின்னடைவு, செய்யப்பட்ட அறுவை சிகிச்சையோ அல்லது நோயாளிக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையோ முறையற்றது என்பதையோ, அல்லது அதைச் செயல்படுத்து வதில் ஏதேனும் அலட்சியம் இருந்ததையோ அவசியமாகக் குறிக்காது என்று நீதிமன்றம் கூறியது.

அறுவை சிகிச்சை அல்லது அதுபோன்ற சிகிச்சைகளின் போது, ஒவ்வொரு வழக்கிலும் நோயாளியின் நிலை மேம்பட வேண்டும் என்பதும், நோயாளியின் திருப்திக்கு ஏற்ப அறுவை சிகிச்சை வெற்றிகரமாக அமைய வேண்டும் என்பதும் அவசியமில்லை. சில அரிய சந்தர்ப்பங்களில் இத்தகைய சிக்கல்கள் எழக்கூடும், ஆனால் அது மட்டுமே மருத்துவ நிபுணரின் தரப்பில் எந்தவொரு அலட்சியத்தை யும் உறுதிப்படுத்தாது. நோயாளிக்குச் சிகிச்சை அளிக்க டாக்டர் நீரஜ் சூத் தேவையான தொழில் முறை தகுதியையும் நிபுணத்துவத்தையும் கொண்டிருந்தார் என்பதை தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஒப்புக்கொண்டபோதிலும், அவர் சிகிச்சையில் தேவையான திறமையையும் அக்கறையையும் காட்டவில்லை என்ற காரணத்திற்காகவே இழப்பீடு வழங்கியுள்ளது என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

புகார்தாரர்கள் மருத்துவர் தரப்பில் எந்த வொரு அலட்சியத்தையும் நிரூபிக்க எந்த ஆதாரத்தையும் வழங்கவில்லை. மாறாக மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான முதுகலை நிறுவனம் வழங்கிய மருத்துவ ஆவணங்களையே நம்பியுள்ளனர் என்பதால், மேற்கூறிய கண்டுபிடிப்பு எந்த ஆதாரமும் இல்லாதது என்று நீதிபதிகள் அமர்வு குறிப்பிட்டது. அந்த ஆவணங்கள் அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளியின் நிலை மேம்படவில்லை, மாறாக மோசமடைந்துள்ளது என்பதை மட்டுமே காட்டுகின்றன; இது ஏற்கனவே குறிப்பிட்டபடி சிகிச்சையில் அலட்சியம் இருப்பதைக் குறிக்காது. மருத்துவத் துறையைப் பொறுத்தவரை அலட்சியம் என்பது மூன்று கூறுகளை உள்ளடக்கியது என்பதை நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியது:

1. உரிய கவனத்தைச் செலுத்த வேண்டிய கடமை

2. கடமை தவறுதல்

3. அதன் விளைவாக ஏற்படும் பாதிப்பு.

மேலும், மருத்துவர் தனது கடமைகளைச் செய்வதில் மருத்துவத் துறையின் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறையைப் பின்பற்றும் வரை, ஒரு சாதாரணக் கவனக்குறைவு, தீர்ப்பில் ஏற்படும் பிழை அல்லது விபத்து ஆகியவை மருத்துவரின் அலட்சியத்திற்குப் போதுமான ஆதாரங்கள் அல்ல என்று நீதிமன்றம் கூறியது. ஒரு சிறந்த மாற்று சிகிச்சை முறை இருந்தாலோ அல்லது சிறந்த சிகிச்சை அளிக்கக்கூடிய அதிகத் திறன் கொண்ட மருத்துவர்கள் இருந்தாலோ மட்டுமே ஒரு மருத்துவர் அலட்சியத்திற்குப் பொறுப்பாளி ஆக முடியாது. ஒரு மருத்துவ நிபுணர் தேவையான தகுதி அல்லது திறமை இல்லாதபோது அல்லது தன்னிடம் உள்ள நியாயமான திறமையைச் சிகிச்சையில் பயன் படுத்தத் தவறும்போது மட்டுமே அலட்சியத்திற்குப் பொறுப்பாக்கப்பட முடியும் என்று நீதிமன்றம் அடிக்கோடிட்டுக் காட்டியது.

இந்த வழக்கில் அலட்சியத்தை உறுதிப்படுத்து வதற்கான மேலே சொன்ன இரண்டு அத்தியாவசிய நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்

படவில்லை. ஏனெனில் அந்த மருத்துவர் நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்வதிலும் சிகிச்சை அளிப்பதிலும் தன்னிடம் உள்ள உரிய விடாமுயற்சி, கவனிப்பு அல்லது திறமையைப் பயன்படுத்தவில்லை என்பதை நிரூபிக்க எந்த ஆதாரமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்று நீதிபதிகள் அமர்வு குறிப்பிட்டது.

புகழ் பெற்ற 'போலம் பரிசோதனை'–ஐப் பயன்படுத்திய பிறகு, அந்த மருத்துவர் இடது கண் இமை இறக்கம் சரி செய்வதற்கான அறுவை சிகிச்சை செய்யவும் தேவையான சிகிச்சை அளிக்கவும் தகுதியுள்ள ஒரு திறமை யான மருத்துவர் என்றும், அறுவை சிகிச்சை செய்வதில் அவர் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடை முறையைப் பின்பற்றினார் என்றும், அவரது தரப்பில் அலட்சியத்தை நிரூபிக்க எந்தவொரு தவறான செயலும் அல்லது குறைபாடும் இல்லை என்றும் நீதிமன்றம் கூறியது. எனவே, மாநில ஆணையத்தின் கண்டுபிடிப்புகளில் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் தலையிட்டிருக்கக் கூடாது என்றும், மருத்துவர் மற்றும் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கான முதுகலை நிறுவனமும் அலட்சியமாக இருந்ததாகக் கூறி இழப்பீடு வழங்கியிருக்கக் கூடாது என்றும் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. இதன் அடிப்படையில், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் வழங்கிய தீர்ப்பு மற்றும் உத்தரவை நீதிமன்றம் ரத்து செய்தது.

**நன்றி: இந்திய சட்டப் பயிற்றக செய்தி, இதழ் அக்.–டிச. 2024**

**- மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## இதர பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு விவகாரம், வருமானத்தை மட்டும் வைத்து கிரீமிலேயரை தீர்மானிக்க முடியாது

### உச்சநீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு

இதர பிற்படுத்தப்பட்டோரில் 'கிரீமிலேயர்' என்ற பொருளாதாரத்தில் முன்னேறியவர்களை வருமானத்தை மட்டும் வைத்து முடிவு செய்ய முடியாது என்று உச்சநீதிமன்ற தீர்ப்பளித்துள்ளது. மண்டல் கமிஷன் பரிந்துரை அடிப்படையில், மத்திய அரசின் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு (ஓ.பி.சி.) 27 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. பின்னர், மத்திய அரசுக்கும், இந்திரா சஹானிக்கும் இடையிலான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் இதர பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை உறுதி செய்தது. இருப்பினும், அப்பிரிவினரில் பொருளாதார ரீதியாக வசதி படைத்தவர்கள், சமூக ரீதியாக முன்னேறியவர்கள் ஆகியோர் இடஒதுக்கீடு சலுகையில் இருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது.

அதுபோன்று வசதியானவர்களை (கிரீமிலேயர்) அடையாளம் காண 1993ஆம் ஆண்டு விதிகள் வகுக்கப்பட்டன. பெற்றோரது ஆண்டு வருமானம் அடிப்படையில், 'கிரீமிலேயர்' அடையாளம் காணப் பட்டனர். தற்போது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.8 லட்சத்துக்கு மேல் இருந்தால், அவர்கள் 'கிரீமிலேயர்' என்று கருதப்படுகிறார்கள். அவர்களுக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு கிடையாது. அரசியலமைப்பு சட்ட பதவி வகிப்பவர்கள் உயர் அரசு பதவியில் இருப்போர் இராணுவத்தில் உயர் பதவி வகிப்போர், கணிசமான சொத்து, வர்த்தக வருமானம் கொண்டவர்கள் ஆகியோரின் பிள்ளை களுக்கும் இட ஒதுக்கீடு கிடையாது.

இந்நிலையில், 'கிரீமிலேயர்' தொடர்பாக நிலுவையில் இருந்த ஒரு வழக்கில் உச்சநீதிமன்றம் 5.3.2026 அன்று பரபரப்பு தீர்ப்பு அளித்துள்ளது.

நீதிபதிகள் கூறியதாவது: இதர பிற்படுத்தப் பட்டோர் பிரிவினரில் யார் 'கிரீமிலேயர்', யார் 'கிரீமிலேயர் அல்லாதவர்' என்பதை பெற்றோரின் வருமானத்தை மட்டும் அடிப்படையாக வைத்து முடிவு செய்ய முடியாது. அவர்களது பதவி, அந்தஸ்து ஆகியவற்றை பார்க்காமல் வருமானத்தை மட்டும் அடிப்படையாக வைத்து முடிவு செய்ய முடியாது.

அவர்களது பதவி, அந்தஸ்து ஆகியவற்றை பார்க்காமல், வருமானத்தை மட்டும் வைத்து கிரீமிலேயரை முடிவு செய்வது, சட்டப்படி ஏற்கத் தக்கது அல்ல. இவ்வாறு நீதிபதிகள் கூறினர்.

**நன்றி: தினத்தந்தி 13.3.2026**

# விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ளபோது, புகுந்த வீட்டு வாழ்க்கை முறையைப் பெற மனைவிக்கு உரிமை உண்டு

ராஜீவ் வர்கீஸ் –எதிர்– ரோஸ் சக்கரம்மாக்கல் பிரான்சிஸ்,
2024 SCC On Line SC 3367,
தீர்ப்பு வழங்கப்பட்ட தேதி: நவம்பர் 19, 2024.

சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலப் பராமரிப்புத் தொகையைக் குறைத்ததை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் பரிசீலித்தது. இதில் கணவர் பராமரிப்புத் தொகையை மேலும் குறைக்கக் கோரியிருந்தார். மனைவி அதை உயர்த்தக் கோரியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் விக்ரம்நாத் மற்றும் பிரசன்னா பி.வரலே ஆகியோர் அடங்கிய அமர்வு, உயர்நீதிமன்றத்தின் மதிப்பீட்டில் பிழைகள் இருப்பதைக் கண்டறிந்தது. திருமணத்திற்குப் பிறகு மனைவி தனது வேலையைத் தியாகம் செய்துள்ளார் என்பதும், புகுந்த வீட்டில் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத்தரத்திற்குப் பழகியுள்ளார் என்பதும் பதிவுகளில் உள்ளதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. எனவே, விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ள காலத்தில், புகுந்த வீட்டில் அவர் அனுபவித்த அதே வசதிகளை அனுபவிக்க அவருக்கு உரிமை உண்டு என்று நீதிமன்றம் தெரிவித்தது.

பின்னணி: இரு தரப்பினருக்கும் 2008ஆம் ஆண்டு கிறிஸ்துவ முறைப்படி திருமணம் நடந்தது. இது கணவருக்கு இரண்டாவது திருமணம் ஆகும். தங்களுக்குள் ஒத்துப் போகாத நிலை மற்றும் கொடுமைப்படுத்துதல் ஆகிய காரணங்களைக் கூறி, இந்திய விவாகரத்துச் சட்டம் 1869–இன் பிரிவு 10(1)–இன் கீழ் 2019–இல் கணவர் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்தார்.

வழக்கு நிலுவையில் இருந்தபோது, மனைவி சென்னை குடும்ப நீதிமன்றத்தில் தனக்கு மாதந்தோறும் ரூ.25 லட்சம் பராமரிப்புத் தொகையும், வழக்குச் செலவாக ரூ.2 லட்சமும் வழங்கக் கோரி மனு தாக்கல் செய்தார். தனது கணவர் ஒரு இதய சிகிச்சை நிபுணர் என்றும், மாதம் ரூ.1.5 லட்சம் சம்பாதிப்பதாகவும், வாடகை மற்றும் சொந்தச் சொத்துகள் மூலம் பல வருமானங்கள் அவருக்கு இருப்பதாகவும் மனைவி குறிப்பிட்டார். தான் ஆடை மற்றும் ஜவுளித் துறையில் முதுகலை பட்டம் பெற்றவர் என்றும், 2012–இல் பத்து மாதங்கள் வேலை பார்த்ததாகவும், ஆனால் கணவர் வேலைக்குச் செல்ல எதிர்ப்புத் தெரிவித்ததால் வேலையை விட நேர்ந்தது என்றும் அவர் கூறினார். குடும்ப நீதிமன்றம் அனைத்து விவரங்களையும் ஆராய்ந்து, மனைவிக்கு மாதந்தோறும் ரூ. 1.75 லட்சம் பராமரிப்புத் தொகையாக வழங்க உத்தரவிட்டது. இதை எதிர்த்துக் கணவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். உயர்நீதிமன்றம் தனது உத்தரவில், இடைக்காலப் பராமரிப்புத் தொகையை ரூ. 80,000–ஆகக் குறைத்தது.

நீதிமன்றத்தின் மதிப்பீடு: இந்த விவகாரத்தை ஆய்வு செய்த உச்ச நீதிமன்றம், குடும்ப நீதிமன்றம் இரு தரப்பு ஆதாரங்களையும் முறையாகப் பரிசீலித்ததை கவனித்தது. கணவர் கைவிட்ட பிறகு, மனைவி தனது 93 வயது மாமியாருடன் தங்கியிருந்ததையும், பின்னர் மாமியாரின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு தனது அண்ணன் வீட்டிற்குச் சென்றதையும் நீதிமன்றம் குறிப்பிட்டது. மேலும், கணவர் தனது வருமான வரித் தாக்கல் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறிவிட்டார் என்பதையும், மனைவி தாக்கல் செய்த ஆவணங்கள் கணவர் ஒரு புகழ்பெற்ற இதய சிகிச்சை நிபுணர் என்பதையும், அவருக்குப் பல சொத்துகள் இருப்பதையும் உறுதிப்படுத்துவதாக நீதிமன்றம் தெரிவித்தது.

கணவரின் தந்தை மறைந்து விட்டதால், அவர் மட்டுமே தந்தைவழிச் சொத்துகளுக்கு வாரிசு என்பதையும், 93 வயது தாயாரின் சொத்துகளிலிருந்து வரும் வருமானத்தையும்

அவரே அனுபவித்து வருவதையும் நீதிமன்றம் கவனித்தது. கணவரின் அந்தஸ்து, வாழ்க்கைத் தரம், வருமான ஆதாரங்கள் மற்றும் சொத்து உரிமைகளை ஒப்பிட்டுப் பார்த்த குடும்ப நீதிமன்றம், கணவர் அனுபவிக்கும் அதே சலுகைகளை அனுபவிக்க மனைவிக்குத் தடை விதிக்க முடியாது என்று சரியாகவே முடிவு செய்திருந்தது.

மறுபுறம், உயர்நீதிமன்றம் கணவரின் வருமானத்தை மதிப்பிடும்போது அது குறைந்தது மாதம் ரூ. 2.5 லட்சம் இருக்கும் என்று முடிவு செய்தது. இதில் மூன்றில் ஒரு பகுதியை (ரூ.80,000) பராமரிப்புத் தொகையாக நிர்ணயித்தது. ஆனால், உச்ச நீதிமன்றம் இந்த மதிப்பீடு தவறு என்று கூறியது. உயர் நீதிமன்றம் கணவரின் இதய சிகிச்சை நிபுணர் வருமானம் மற்றும் தாயாருடன் இணைந்துள்ள ஒரு சொத்தின் வாடகையை மட்டுமே கணக்கில் கொண்டது. கணவருக்குச் சொந்தமான மற்ற சொத்துகள் குறித்தோ அல்லது அவர் நடத்தி வரும் ஒரு பள்ளிக்கூடம் நஷ்டத்தில் இயங்குகிறது என்ற அவரது வாதத்திற்கு ஆதாரம் இல்லாதது குறித்தோ உயர்நீதிமன்றம் கவனம் செலுத்த வில்லை.

எனவே, உச்ச நீதிமன்றம் மனைவியின் மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டு, சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்தது. குடும்ப நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மீண்டும் நிலைநிறுத்தி, மனைவிக்கு மாதம் ரூ. 1,75,000 இடைக்காலப் பராமரிப்புத் தொகை யாக வழங்கக் கணவருக்கு உத்தரவிட்டது.

**நன்றி: இந்திய சட்டப் பயிற்றக செய்தி இதழ் அக்.–டிச. 2024**

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

---

## நீதித்துறை ஊழல் பாடப்பிரிவு சர்ச்சை ஒதுக்கீடு விவகாரம் என்சிஇஆர்டி பொது மன்னிப்பு வெளியீடு

### உச்சநீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு

எட்டாம் வகுப்பு சமூக அறிவியல் பாடப் புத்தகத்தில் நீதித் துறை ஊழல் என்ற பாடப் பிரிவு சேர்க்கப் பட்டிருந்ததற்கு உச்சநீதிமன்றம் கடும் அதிருப்தி தெரிவித்த நிலையில், அதற்கான பொது மன்னிப்பு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்சிஇஆர்டி) 10.1.2026 வெளியிட்டது. மேலும், அந்த சமூக அறிவியல் பாடப் புத்தகம் முழுமையாகத் திரும்பப் பெறப்பட்டிருப்பதாகவும் என்சிஇஆர்டி தெரிவித்தது.

என்சிஇஆர்டி வெளியிட்ட 8ஆம் வகுப்பு புதிய சமூக அறிவியியல் புத்தகத்தில் நீதித் துறையில் ஊழல் என்ற தலைப்பிலான பாடப் பிரிவு இடம் பெற்றது. இந்தப் பிரிவில் ஊழல், வழக்குகளின் தேக்கம், நீதிபதிகளின் பற்றாக்குறை ஆகியவை நீதித் துறையின் சவால்களாக உள்ளன. நீதிமன்றத்துக்குள் மட்டுமல்லாமல், நீதிமன்றத்துக்கு வெளியேயும் தங்களின் நடத்தையை நிர்வகிக்கும் விதிமுறைகளுக்கு நீதிபதிகள் கட்டுப்பட்டவர்கள் என்று குறிப்பிடப்பட்டது.

இந்தப் பாடப் பிரிவு பெரும் சர்ச்சையான நிலையில், இந்த விவகாரத்தை தானாக முன் வந்து வழக்காக விசாரித்த உச்சநீதிமன்றம், அந்த புத்தகத்தின் அனைத்துப் பிரதிகளையும் (எண்ம வடிவம் உள்பட) உடனடியாகத் திரும்பப் பெற என்சிஇஆர்டிக்கு உத்தரவிட்டது.

மேலும், அவதூறான பாடப் பிரிவினை அறிமுகப்படுத்தியவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என்று விளக்கம் கேட்டு, என்சிஇஆர்டி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வித் துறை இயக்குநருக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி, விசாரணையை மார்ச் 11ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தது.

அதன்படி, இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் மார்ச் 11 மீண்டும் விசாரணைக்கு வரவுள்ள நிலை யில், அந்த சர்ச்சை பாடப் பிரிவு சேர்க்கப்பட்ட தற்காக என்சிஇஆர்டி பொது மன்னிப்பு கோரி மார்ச் 10ஆம் தேதி அறிக்கை வெளியிட்டது. அதில் எட்டாம் வகுப்பு சமூக அறிவியல் பாடப் புத்தகத்தில் நீதித் துறை ஊழல் என்ற பாடப் பிரிவு சேர்க்கப்பட்டிருந்தது, அதற்காக என்சிஆர்டி இயக்குநர் மற்றும் உறுப்பினர்கள் சார்பில் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரப்படுகிறது. அந்த சமூக அறிவியல் பாடப் புத்தகம் முழுமையாகத் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. அது எங்கும் இனி கிடைக்காது என்று என்சிஇஆர்டி குறிப்பிட்டுள்ளது.

**நன்றி: தினமணி 11.3.2026**

# பிணை உத்தரவுகளை ஒரு குறிப்பிட்ட முறையில் தான் எழுத வேண்டும் என்று விசாரணை நீதிமன்றங்களுக்கு எந்தவொரு அரசியலமைப்பு நீதிமன்றமும் உத்தரவிட முடியாது

அயூப் கான் –எதிர்– ராஜஸ்தான் மாநிலம்,
2024 SCC Online SC 3763,
தீர்ப்பு வழங்கப்பட்ட தேதி: டிசம்பர் 17, 2024.

ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் தனக்கு எதிராகத் தெரிவித்த எதிர்மறையான கருத்துகளையும் உத்தரவுகளையும் நீக்கக் கோரி ஒரு நீதித்துறை அதிகாரி தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கில், உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு அந்த மேல்முறையீட்டை ஏற்றுக் கொண்டது. பிணை விண்ணப்பங்கள் மீதான உத்தரவுகளை ஒரு குறிப்பிட்ட பாணியில் தான் எழுத வேண்டும் என்று விசாரணை நீதிமன்றங்களுக்கு எந்தவொரு அரசியல மைப்பு நீதிமன்றமும் (உயர்நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றம்) கட்டளையிட முடியாது என்று கூறி, அந்த அதிகாரிக்கு எதிரான கருத்துகளை நீக்கியது. உயர் நீதிமன்றத்தின் இத்தகைய அவதானிப்புகள் முற்றிலும் தேவையற்றவை என்றும், 'ஜுகல் கிஷோர் –எதிர்– ராஜஸ்தான் மாநிலம்' என்ற வழக்கின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவுகள் சட்டவிரோதமானவை என்றும் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

பின்னணி: ராஜஸ்தான் நீதித்துறையில் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியாகப் பணியாற்றும் மேல்முறையீட்டாளர், இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 307 (கொலை முயற்சி) மற்றும் ஆயுதச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபரின் பிணை விண்ணப்பத்தை விசாரித்தார். அந்த நீதித்துறை அதிகாரி பிணை விண்ணப்பத்தை நிராகரித்தார். இதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. உயர் நீதிமன்றம் அந்த நபருக்குப் பிணை வழங்கியது. இருப்பினும், பிணை வழங்கும் போது, 'ஜுகல் கிஷோர்' வழக்கில் உயர் நீதிமன்றம் பிறப்பித்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றவில்லை என்று கூறி, அந்த நீதிபதிக்கு எதிராக எதிர்மறையான கருத்துகளைப் பதிவு செய்தது. அந்த வழிகாட்டுதல்கள் பிணை விண்ணப்பங்களை முடிவெடுக்கும்போது விசாரணை நீதிமன்றங்கள் பின்பற்ற வேண்டியவை ஆகும். தனக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட அந்த எதிர்மறைக் கருத்துகளை நீக்கக் கோரி நீதித் துறை அதிகாரி இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தார்.

எதிர்க்கப்பட்ட தீர்ப்பு: 'ஜுகல் கிஷோர்' வழக்கின் வழிகாட்டுதலின்படி, குற்றஞ்சாட்டப் பட்டவரின் முந்தைய குற்றப் பின்னணி விவரங் களை நிர்ணயிக்கப்பட்ட அட்டவணை வடிவத்தில் அந்த நீதிபதி பதிவு செய்யவில்லை என்பதை உயர் நீதிமன்றம் கவனித்தது. அவர் தனது உத்தரவில், குற்றம் சாட்டப்பட்டவர் மீது பல்வேறு காவல் நிலையங்களில் 10 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று மட்டுமே குறிப்பிட்டிருந்தார். எனவே, உயர் நீதிமன்ற வழிகாட்டுதல்களைப் பின்பற்றாதது ஒழுங்கீனம் மட்டுமல்லாமல், நீதிமன்ற அவமதிப்பாகவும் கருதப்படலாம் என்று உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

இதன் விளைவாக, அந்த உத்தரவின் நகலை நீதித்துறை அதிகாரிக்கு அனுப்பி, ஐந்து நாட்களுக்குள் விளக்கம் கேட்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி, அந்த அதிகாரி தனது விளக்கத்தைச் சமர்ப்பித்தார். அதில், ஜுகல் கிஷோர் வழக்கின் வழிகாட்டுதல்கள் பின்பற்றப் படவில்லை என்பதை ஒப்புக்கொண்ட அவர், அதிக வேலைப்பளு காரணமாக இந்தத் தவறு நடந்ததாகவும், இனிவரும் காலங்களில் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதாகவும் உயர் நீதிமன்றத்திற்கு உறுதி அளித்தார். இருப்பினும், 25-04-2023 தேதியிட்ட அடுத்த உத்தரவில், பிப்ரவரி 2023-இல் அவர் முடிவெடுத்த

அனைத்து பிணை விண்ணப்பங்களின் பட்டியல் மற்றும் அதன் நகல்களை அனுப்பு மாறு உயர் நீதிமன்றம் அவருக்கு உத்தரவிட்டது. 5-5-2023 தேதியிட்ட அந்த உத்தரவில் உயர் நீதிமன்றம் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:

'அமர்வு நீதிபதி போன்ற ஒரு முக்கியமான பதவியில் இருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட அதிகாரி இந்த நீதிமன்றத்தின் நீதித்துறை அல்லது நிர்வாக அறிவுறுத்தல்களைப் பின்பற்றவில்லை. விளக்கம் கேட்கப்பட்டபோது, வெவ்வேறு நேரங்களில் முரணான பதில்களை அளித்துள்ளார். இந்த நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது, இதனால் நீதிமன்றத்தின் விலைமதிப்பற்ற நேரம் வீணடிக்கப்பட்டுள்ளது. எனவே, இது நீதித்துறை உத்தரவுகளை மீறுதல் மற்றும் ஒழுங்கீனம் சார்ந்த தீவிரமான விஷயமாகக் கருதப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கத் தலைமை நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டும்.'

### ஜுகல் கிஷோர் வழக்கின் வழிகாட்டுதல்கள்:

விசாரணை நீதிமன்றங்கள் பிணை அல்லது முன் பிணை வழங்கும்போதோ அல்லது நிராகரிக்கும்போதோ, குற்றம் சாட்டப்பட்டவரின் முந்தைய குற்றப் பின்னணி விவரங்களை முழுமையாக உத்தரவில் சேர்க்க வேண்டும். குற்றப் பின்னணி இல்லையென்றால் அதையும் பதிவு செய்ய வேண்டும். பின்னணி இருந்தால், தீர்ப்பில் கூறப்பட்டுள்ளவாறு ஒரு அட்டவணை வடிவத்தில் விவரங்களைக் குறிப்பிட வேண்டும்.

### பகுப்பாய்வு மற்றும் தீர்ப்பு:

பிணை விண்ணப்பங்களை முடிவு செய்வது குறித்த நடைமுறைகள் பற்றி உச்ச நீதிமன்றம் கூறுகையில், 'விசாரணை நீதிமன்றங்கள் பிணை வழங்குவதில் தவறு செய்தால், உயர் நீதிமன்றங்கள் அதை நீதித்துறை ரீதியாகச் சரிசெய்ய முடியும். பிணை அல்லது முன் பிணை வழங்குவதற்கான கொள்கைகளை அரசியலமைப்பு நீதிமன்றங்கள் வகுக்கலாமே தவிர, விசாரணை நீதிமன்றங்கள் எந்த வடிவத்தில் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதில் தலையிட முடியாது' என்று தெரிவித்தது.

குற்றஞ்சாட்டப்பட்டவரின் முந்தைய பின்னணி என்பது பிணை வழங்குவதற்காகப் பரிசீலிக்கப் படும் பல காரணிகளில் ஒன்று மட்டுமே என்று நீதிமன்றம் விளக்கியது. ஒருவேளை குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வலுவான வாதங்கள் இருக்கும்பட்சத்தில் அல்லது அவர் நீண்டகாலம் சிறையில் இருந்திருந்தால், முந்தைய பின்னணியைக் காரணம் காட்டி மட்டும் பிணையை மறுக்க முடியாது. நீண்டகால சிறைவாசத்தின் அடிப்படையில் பிணை வழங்கப்படும்போது, அங்கு அட்டவணை வடிவத்தில் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் எழுவதில்லை.

மேலும், ஜுகல் கிஷோர் வழக்கின் வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்றால், அரசுத் தரப்பு வழக்கறிஞர் அந்த விவரங்களைச் சேகரிக்கும் வரை பிணை மனுக்களை ஒத்திவைக்க வேண்டியிருக்கும். ஒருவேளை அரசுத் தரப்பு முந்தைய குற்றங்களைப் பதிவு செய்தாலும், நீதிபதி அந்தப் பிரிவுகளை மட்டும் குறிப்பிட்டாலே போதுமானது; ஜுகல் கிஷோர் வழக்கில் கோரப்பட்ட விரிவான அட்டவணை வடிவம் தேவையில்லை. எனவே, அந்த வழிகாட்டுதல்கள் கட்டாயமானவை அல்ல, அவை ஒரு ஆலோசனையாக மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெளிவுப்படுத்தியது.

### நீதித்துறை அதிகாரியின் மீதான நடவடிக்கை குறித்து:

அந்த நீதிபதி ஜுகல் கிஷோர் வழிகாட்டு தலைப் பின்பற்றாதது எவ்வாறு ஒழுங்கீனம் அல்லது நீதிமன்ற அவமதிப்பாகும் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அவர் தவறு செய்தி ருந்தாலும் கூட, ஒரு நீதித்துறை உத்தரவின் மூலம் அவரிடம் விளக்கம் கேட்டது முறை யற்றது. ஒரு நீதிபதியிடம் விளக்கம் கேட்பது நிர்வாக ரீதியாக மட்டுமே நடக்க வேண்டும். மேலும், அவர் ஒரு மாதத்தில் முடிவெடுத்த அனைத்து பிணை மனுக்களின் பட்டியலைக் கேட்டது உயர்நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் செயல் என்றும் நீதிமன்றம் சாடியது.

உயர்நீதிமன்றங்கள் நிதானத்தைக் கடைப் பிடிக்க வேண்டும் என்றும், இதுபோன்ற உத்தரவுகளின் மூலம் ஒரு நீதித்துறை அதிகாரி யின் வாழ்க்கையைப் பாதிக்கக் கூடாது என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர். எனவே, அந்த நீதிபதிக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட அனைத்து எதிர்மறையான கருத்துகளையும், உத்தரவு களையும் உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது. இந்தத் தரவுகள் அந்த அதிகாரியின் நிர்வாக ரீதியான கோப்புகளில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் தெளிவுபடுத்தியது.

**நன்றி: இந்திய சட்டப் பயிற்றக செய்தி இதழ் அக்.-டிச. 2024**

**- மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## மேற்கு வங்க எஸ்ஐஆர் பணி மேல்முறையீட்டு தீர்ப்பாயங்கள் அமைக்க உச்சநீதிமன்றம் உத்தரவு

மேற்கு வங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) பணியில் பெயர் நீக்கத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்படும். மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் தலைமையில் சுதந்திரமான மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களை அமைக்கும்படி கொல்கத்தா உயர்நீதிமன்றத்துக்கு உச்சநீதிமன்றம் மார்ச் 10ஆம் தேதி உத்தரவிட்டது. மேற்கு வங்கத்தில் வாக்காளர் பெயர் நீக்கத்துக்கு எதிரான ஆட்சேபம் மற்றும் உரிமை கோரல் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் பணியில் மாவட்ட மற்றும் உரிமையியல் நீதிபதிகள் சுமார் 700 பேர் ஈடுபட்டுள்ள நிலையில் அவர்கள் மேற்கொள்ளும் முடிவுகள் மீதான மேல்முறையீட்டு மனுக்கள் தீர்ப்பாயங்களால் விசாரிக்கப்படும். பெயர் நீக்கப்பட்டவர்களின் விண்ணப்பங்களைக் கையாளும் நீதிபதிகளின் நேர்மையைக் குறை மதிப்புக்கு உள்படுத்தும் முயற்சிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உச்சநீதிமன்றம் எச்சரித்துள்ளது.

மேற்கு வங்கத்தில் எஸ்ஐஆர் பணிக்குப் பிறகான வாக்காளர் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. அதில் 63.66 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தன. இது அந்த மாநிலத்தின் மொத்த வாக்காளர்களில் 8.3 சதவீதமாகும். இதையடுத்து மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 7.66 கோடியிலிருந்து 7.04 கோடியாக குறைந்தது. இது தவிர, 60.06 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் சந்தேகப் பட்டியலில் உள்ளன. அவர்களின் பெயர்களும் வரும் காலத்தில் ஆய்வு செய்யப்பட்டு, வாக்காளர் பட்டியலில் நீட்டிப்பது குறித்து தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக மாநில முதல்வர் மம்தா பானர்ஜி உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனுக்களை உச்சநீதிமன்றம் விசாரித்து வருகிறது. எஸ்ஐஆர் பணிகளில் தேர்தல் ஆணையம் மற்றும் மாநில அரசு இடையே நிலவிய ஒத்துழைப்புமின்மை மற்றும் முறைகேடு குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்பில் இப்பணிகள் நடைபெறுகின்றன. இந்த விவகாரத்தில் ஏற்கனவே ஓர் உத்தரவைப் பிறப்பித்த உச்சநீதிமன்றம், மாவட்ட அல்லது கூடுதல் மாவட்ட நீதிபதிகளை எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபடுத்துமாறு கொல்கத்தா உயர்நீதிமன்றத்துக்கு அறிவுறுத்தியது. இந்தப் பணிக்காக அண்டை மாநிலங்களான ஜார்க்கண்ட் ஒடிஸா நீதிபதிகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

**உச்சநீதிமன்றம் புதிய உத்தரவு**: இந்நிலையில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஆர்.மகாதேவன், ஜயமால்ய பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இந்த மனுக்கள் 10 மார்ச் விசாரணைக்கு வந்தன.

அப்போது நீதிபதிகள் அமர்வு கூறியதாவது, வாக்காளர் பட்டியல் பெயர் நீக்கம் தொடர்பாக 10.16 ஆட்சேபங்கள் மற்றும் கோரிக்கைகளை எஸ்ஐஆர் பணியில் ஈடுபட்டுள்ள நீதிபதிகள் இதுவரை கையாண்டுள்ளனர். இந்தப் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் வடிய எந்தவொரு புதிய நடவடிக்கையையும் தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தக் கூடாது. புதிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளும் முன்பாக கொல்கத்தா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஒப்புதல் பெற வேண்டும். எஸ்ஐஆர் பணியில் ஈடுபட்டுள்ள நீதிபதிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் தேர்தல் ஆணையமும், மாநில அரசும் ஏற்படுத்தி தர வேண்டும். தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தில் எவ்விதத் தொழில்நுட்பத் தடங்கலும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். எஸ்ஐஆர் பணி சுமுகமாக நடைபெற நீதிபதிகளுக்கு புதிய உள்நுழைவு (லாக்இன்) ஐ.டி. உடனடியாக உருவாக்கப்பட வேண்டும்.

எஸ்ஐஆர் பணியில் நீதிபதிகளின் முடிவுகளுக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்களை தேர்தல் ஆணைய அதிகாரிகள் விசாரிக்க முடியாது. இது போன்ற கோரிக்கைகளை விசாரிக்க, கொல்கத்தா உயர்நீதிமன்றம் சுதந்திரமான மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களை அமைக்க வேண்டும். கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதிகள் மற்றும் நீதிபதிகள் தலைமையில் தீர்ப்பாயங்களை அமைக்கலாம். இதற்காக அவர்களுக்கு உரிய வேண்டுகோள் விடுக்கலாம். உயர்நீதிமன்றம் பரிந்துரை அளித்தவுடன் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் தொடர்பான அறிவிக்கையை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும். இந்தத் தீர்ப்பாயங்களின் ஒவ்வொரு அமர்விலும் இடம் பெறும் நீதிபதிகளின் எண்ணிக்கை குறித்து கொல்கத்தா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி முடிவெடுப்பார் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

**நன்றி: தினமணி 11.3.2026**

# சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்தல் "குற்றவியல் வழக்குகளைத் தீர்மானிப்பதில் ஒரு முக்கியமான அம்சம்"

**- நீதிபதி ஏ.வி.சந்திரசேகர்**
**கர்நாடக உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி**

கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் போன்ற கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்ட ஒருவரை குற்றவியல் நீதிமன்றம் விடுவிக்கும் போது, மக்கள் ஆச்சரியப்படுகின்றனர்; சில நேரங்களில் நமது குற்றவியல் நீதி அமைப்பு தோல்வியடைந்ததாக உணருகின்றனர். பொது மக்களுக்கு குற்றவியல் சட்டத்தின் அடிப்படை கொள்கைகள் மற்றும் குற்றவியல் வழக்குகளில் நீதிபதிகள் சான்றுகளை மதிப்பீடு செய்வதில் உள்ள முக்கிய அம்சங்கள் பற்றிய அறிவு பெரும்பாலும் இருப்பதில்லை. அவர்கள் குற்றவாளி எப்படியாவது தண்டிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் பல குற்றச்சாட்டுக்குட்பட்டவர்கள் விடுவிக்கப்படுவதற்கான காரணம் அவர்கள் குற்றமற்றவர்கள் என்பதாலோ அல்லது குற்றத்தில் ஈடுபடவில்லை என்பதாலோ அல்ல; தேவையான அளவு நிரூபணம் இல்லாததாலே ஆகும். ஆகவே, சிவில் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கு பொருந்தும் சான்றுச் சட்டம் பற்றி அறிந்து கொள்வது அவசியம். இதைச் சார்ந்த சட்டம் இந்திய சாட்சியச் சட்டம், 1872 ஆகும். இது அரசியலமைப்பிற்கு முன்பட்ட சட்டமாக இருந்தாலும், இந்திய அரசியலமைப்பின் பகுதி ஐஐஐ–க்கு முரணாக இல்லாததால் நாம் இதனை ஏற்றுக்கொண்டுள்ளோம்.

இந்திய சாட்சியச் சட்டம், 1872 ஒரு சிறந்த சட்டமாகும்; தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 அறிமுகமானதன் காரணமாக செய்யப்பட்ட சில மாற்றங்கள் மற்றும் திருமணமான பெண் ஒருவர் திருமணத்திலிருந்து 7 ஆண்டுகளுக்குள் இயற்கையல்லாத சூழ்நிலைகளில் இறந்தால் தொடர்புடைய பிரிவுகள் 113 மற்றும் 114–இல் செய்யப்பட்ட சில திருத்தங்கள் தவிர, இதில் பெரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இந்தச் சட்டத்தின் பிரிவு 3–ல் 'நிரூபிக்கப்பட்டது', 'நிராகரிக்கப்பட்டது' மற்றும் 'நிரூபிக்கப்படாதது' என்ற கருத்துகள் விளக்கப்படுகின்றன. இந்தப் பிரிவு, நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும் எந்தத் தகராறையும் தீர்ப்பதற்கான நிரூபணத்தின் தரத்தைப் பற்றி முக்கியமாக பேசுகிறது. பிரிவு 3–ன் படி, சட்டப்படி தேவையான நிரூபணத் தரம் 'சாத்தியக்கூறுகளின் மேலாதிக்கம்' ஆகும். இந்தப் பிரிவில் 'சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட நிரூபணம்' பற்றி நேரடியாக குறிப்பிடப்படவில்லை. ஆனால் இந்தியாவில் குற்றவியல் வழக்குகளில் தேவையான நிரூபணத்தின் அளவு, சாத்தியக்கூறுகளின் மேலாதிக்கத்தை விட உயர்ந்ததாகும். 'சான்றுகளின் மேலாதிக்கம்' என்ற கருத்து பிளாக் என்பவரின் சட்ட அகராதியில் (1891, 6வது சுருக்க பதிப்பு, 1991) சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. அதன் பொருள் பின்வருமாறு:

சான்றுகளின் மேலாதிக்கம் என்பது எதிர்ப்புறம் வழங்கும் சான்றுகளை விட அதிக எடையுடைய அல்லது அதிக நம்பிக்கையூட்டும் சான்றுகளாகும். அதாவது, முழுமையாக பார்க்கும்போது, நிரூபிக்கப்பட வேண்டிய உண்மை அதிக சாத்தியமுள்ளதாக இருக்கிறது என்பதை காட்டும் சான்றுகளே ஆகும்.

'நிரூபிக்கப்பட்டது' என்ற சொல்லுக்கு என்ன பொருள் எனில் – நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள விஷயங்களை ஆராய்ந்த பிறகு, அதில் உண்மை இருக்கிறது என்று நீதிமன்றம் நம்பினாலோ, அல்லது அதன் இருப்பு மிகவும் சாத்தியமானதாக இருக்கிறது என்று ஒரு விவேகமான மனிதன் அந்த சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு அதன்படி நடந்து கொள்வான் என்று நினைத்தாலோ, அந்த உண்மை 'நிரூபிக்கப்பட்டது' என்று கூறப்படுகிறது.

ஒரு உண்மை நிரூபிக்கப்பட்டது என்று சொல்ல, கட்டாயமாக முழுமையான நிரூபணம் தேவையில்லை. இதில் இடம்பெறும் செயல்முறை என்பது சாத்தியக்கூறுகளை அளவிடுவது ஆகும். அதனால், சிவில் வழக்குகளில் தீர்ப்பு வழங்குவதற்கான அடிப்படை 'சாத்தியக்கூறுகளின் மேலாதிக்கம்' ஆகும்.

ஆனால், இந்திய சாட்சியச் சட்டம், 1872-இன் பிரிவு 3-ல் குற்றவியல் வழக்குகளுக்காக அதிகமான நிரூபணத் தரம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், இந்திய குற்றவியல் நீதிமன்றங்கள், சிவில் வழக்குகளை விட அதிகமான நிரூபணத் தரத்தை வலியுறுத்தி வருகின்றன. எனவே, இந்த அம்சத்தை சரியாகப் புரிந்துகொள்வது மிகவும் அவசியம்.

ஒரு சிவில் வழக்கில், குறிப்பிட்ட நிவாரணம் பெறுவதற்காக நீதிமன்றத்தை அணுகும் மனுதாரர், சான்றுகளில் சில அம்சங்கள் அவருக்கு எதிராக இருந்தாலும் கூட, மொத்தத்தில் சாத்தியக்கூறுகள் அவருக்கு சாதகமாக இருந்தால் வெற்றி பெறுவார்.

ஆனால் குற்றவியல் வழக்குகளை தீர்மானிக்கும் போது இந்த அணுகுமுறை ஓரளவு மாறுகிறது (மிகப் பெரிய மாற்றமல்ல). நாம் ஆங்கில பொதுச் சட்ட முறையைப் பின்பற்றியுள்ளோம். அதன்படி, குற்றவியல் நீதிமன்றங்கள், சிவில் வழக்குகளைக் காட்டிலும் தெளிவாக அதிகமான நிரூபணத் தரத்தை எதிர்பார்க்கின்றன.

இங்கிலாந்தில் கூட, அவர்களின் சான்றுச் சட்டம் குற்றவியல் வழக்குகளுக்காக தனியாக உயர்ந்த நிரூபணத் தரத்தை நிர்ணயிக்கவில்லை. ஆனால் காலப்போக்கில் பல நீதிமன்றத் தீர்ப்புகள் 'சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட நிரூபணம்' அவசியம் என வலியுறுத்தின. இதன் விளைவாக, இந்தியாவிலும் அதையே நாம் பின்பற்றத் தொடங்கியுள்ளோம்.

'சாத்தியக்கூறுகளின் மேலாதிக்கம்' மற்றும் 'நியாயமான சந்தேகம்' ஆகியவை ஒன்றுக்கொன்று முரண்படுகின்றனவா என்பது ஒரு கேள்வியாக எழுகிறது. உண்மையில் அவை முரண்பாடானவை அல்ல.

ஒரு குற்றவியல் வழக்கை தீர்மானிக்கும் நீதிபதி முதலில் சான்றுகளை 'சாத்தியக்கூறுகளின் மேலாதிக்கம்' என்ற அளவுகோலின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும். அதன் பிறகு, ஒரு விவேகமான மனிதனின் நிலைப்பாட்டில் இருந்து, அந்த சான்றுகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமா அல்லது வேண்டாமா, நம்பத்தகுந்தவையா இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

நிரூபணச் சுமை குறித்து பார்க்கும்போது, குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்பதை நிரூபிப்பது எப்போதும் குற்ற வழக்கிடு வழக்கறிஞர் தரப்பின் பொறுப்பாகும். ஏதேனும் நியாயமான சந்தேகம் இருந்தால், அந்த சந்தேகத்தின் நன்மை எப்போதும் குற்றச்சாட்டுக்குட்பட்டவருக்கே வழங்கப்பட வேண்டும். குற்றவியல் சட்டத்தின் முதல் அடிப்படை கொள்கை என்னவென்றால் – குற்றம் நிரூபிக்கப்படும் வரை, குற்றச்சாட்டுக்குட்பட்டவர் நிரபராதி எனக் கருதப்படுவார்.

வழக்கறிஞர் தரப்பு தனது ஆரம்ப மற்றும் முக்கியமான நிரூபணச் சுமையை நிறைவேற்றிய பிறகு, அந்தச் சுமை குற்றச்சாட்டுக்குட்பட்டவரிடம் மாறுகிறது. அவர் அதனை எதிர்க்க, திறமையான குறுக்கு விசாரணை, தானே சாட்சியளித்தல், அல்லது தனது சார்பாக வேறு ஒருவரை சாட்சியளிக்கச் செய்தல் போன்ற முறைகளைப் பயன்படுத்தலாம்.

மேலும், குற்றவியல் நடைமுறை தொகுப்பு, 1973-இன் பிரிவு 313-ன் கீழ் அவர் அளித்த விளக்கம் நியாயமானதாக இருந்தால், நீதிபதி மொத்த சான்றுகளையும் கருத்தில் கொண்டு, வழக்கு 'சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட நிரூபணம்' அடைந்ததா இல்லையா என்பதை தீர்மானிப்பார். சான்றுகள் அந்த அளவுக்கு போதுமானதாக இல்லாவிட்டால், சந்தேகத்தின் நன்மை குற்றச்சாட்டுக்கு உட்பட்ட வருக்கே வழங்கப்படும்.

குற்றச்சாட்டுக்குட்பட்டவர், இந்திய தண்டனைச் சட்டத்தில் உள்ள பொது விதிவிலக்குக ளின் கீழ் ஏதேனும் பாதுகாப்பு காரணங்களை முன்வைத்தால் – உதாரணமாக, பிரிவு 84–ன் கீழ் மனநிலை பாதிப்பு அல்லது பிரிவு 104–ன் கீழ் தற்காப்பு – அவற்றை நிரூபிக்கும் பொறுப்பு அவர்மீதே இருக்கும்.

இதனை இந்திய சாட்சியச் சட்டம், 1872–இன் பிரிவு 105 தெளிவாகக் கூறுகிறது; இது சிறப்பு வாதங்களை நிரூபிக்கும் சுமையைப் பற்றி பேசுகிறது. ஆனால், இத்தகைய சூழ்நிலைகளில், குற்றச்சாட்டுக்குட்பட்டவர் அவ்வாதங்களை ‘சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட நிரூபணம்’ அளவிற்கு நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. ‘சாத்தியக்கூறுகளின் மேலாதிக்கம்’ என்ற அளவிலே நிரூபித்தால் போதும்.

கிளான்விலி வில்லியம்ஸ் தனது குற்றவியல் சட்டம் (இரண்டாம் பதிப்பு) என்ற நூலில், ‘நியாயமான சந்தேகம்’ என்ற சொற்றொடரை தெளிவாக வரையறுப்பது கடினம் என்று கருத்து தெரிவித்துள்ளார். இந்த ‘நியாயமான சந்தேகம்’ என்ற கருத்தை நீதிபதி குக்பர்ன் பின்வருமாறு விளக்குகிறார்:

‘‘குற்றச்சாட்டுக்குட்பட்டவரின் குற்றத்தை, ஜுரி உறுப்பினர்களின் மனதில் திருப்தியடையும் வகையில் நிரூபிப்பது வழக்கறிஞர் தரப்பின் கடமையாகும். ஆனால் குற்றச்சாட்டுக்குட் பட்டவருக்கு வழங்கப்படும் சந்தேகம், ஒரு நியாயமான மற்றும் விவேகமான மனிதன் உண்மையாகவும் நேர்மையாகவும் கொண்டிருக்கும் சந்தேகமாக இருக்க வேண்டும். அது தீர்மானிக்கத் தயங்கும் மனநிலையிலிருந்து வரும், ஆதாரமற்ற சந்தேகமாக இருக்கக்கூடாது. உண்மையாகவும் நேர்மையாகவும் ஒருவர் கொண்டிருக்கும் சந்தேகமாக இருக்க வேண்டும்.’’

உத்திரப் பிரதேச மாநிலம் –எ– கிருஷ்ண கோபால் என்ற வழக்கில், இந்திய உயர் நீதிமன்றம் ‘நியாயமான சந்தேகம்’ என்ற கருத்தை தெளிவாக விளக்கியுள்ளது:

‘‘சாத்தியக்கூறுகளின் அளவையும் நிரூபணத்தின் வலிமையையும் மதிப்பீடு செய்வதில் ஒரு அளவிற்கு தனிப்பட்ட அம்சம் இருப்பது மறுக்க முடியாதது. நீதிமன்றத்தில் சாத்தியக்கூறு பற்றிய முடிவு எடுப்பது இறுதியில் வலுவான பொதுவான புத்திசாலித்தனத்தையும், மேலும் நீதிபதியின் பயிற்சி பெற்ற உள்ளுணர்வையும் சார்ந்ததாக இருக்க வேண்டும்.

குற்றவியல் நடைமுறைகள் மூலம் குற்றச்சாட்டுக்குட்பட்ட வர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு குறைக்கப்படக்கூடாது. அதே சமயம், முக்கியமற்ற விஷயங்களுக்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கொடுத்தால், அது குற்றவியல் நீதி நிர்வாகத்தையே கேலி செய்யும் நிலைக்கு கொண்டு செல்லும்.’’

இந்தத் தீர்ப்பை பின்னர் மத்தியப் பிரதேச மாநிலம் –எ– தார்கோலே (எ) கோவிந்த் சிங் என்ற வழக்கிலும் உயர் நீதிமன்றம் பின்பற்றியுள்ளது. அதில், ‘நியாயமான சந்தேகம்’ என்பது கற்பனையானது அல்லது அற்பமானது அல்ல; அது காரணத்தையும் பொதுவான புத்திசாலித்தனத்தையும அடிப்படையாகக் கொண்ட ஒரு நியாயமான சந்தேகமாக இருக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

அதாவது, ‘நியாயமான சந்தேகம்’ என்பது வெறும் ஊகங்களிலிருந்தோ அல்லது ஆதாரமற்ற பயத்திலிருந்தோ உருவாகக்கூடாது; வழக்கில் உள்ள சான்றுகளிலிருந்தோ அல்லது சான்றுகளின் பற்றாக்குறையிலிருந்தோ உருவாக வேண்டும்.

உத்திரப் பிரதேச மாநிலம் –எ– கிருஷ்ண கோபால் வழக்கில் கூறப்பட்டபடி, குற்றவியல் நீதிமன்றங்கள் உயர்ந்த நிரூபணத் தரத்தை வலியுறுத்தினாலும், அது முற்றிலும் முழுமையான தரமாக இருக்க வேண்டியதில்லை.

மேலும், சிவாஜி சஹாபராவ் போபடே –எ– மகாராஷ்டிர மாநில அரசு என்ற வழக்கில், மறைந்த நீதியரசர் வி.ஆர்.கிருஷ்ணய்யர் அவர்கள் 1973–இலேயே முக்கியமான கருத்தை பதிவு செய்துள்ளார்.

அதில், குற்றச்சாட்டுக்குட்பட்டவரின் நிரபராதி என்ற முன் கருதுகோளை மிகுந்த கவனத்துடன் பயன்படுத்தும் போது, நீதிமன்றம் குற்றவியல் நீதியை செயல்படுத்துவதற்கான நடைமுறை தேவையையும் மறக்கக்கூடாது என்று அவர் வலியுறுத்தினார். சிவாஜி சஹாபராவ் போபடே –எ– மகாராஷ்டிர மாநில அரசு வழக்கில் வழங்கப்பட்ட இந்த எச்சரிக்கை இன்றும் மிகவும் பொருத்தமானதாகும்.

இந்த கட்டத்தில், குற்றவியல் வழக்குகளில் ஒரு முக்கியமான சமூக நோக்கைப் நினைவூட்டிக் கொள்ள வேண்டும். குறிப்பாக, நுணுக்கமான சான்று மதிப்பீட்டின் பற்றாக்குறையால் ஏற்படும் அபாயங்கள் உள்ளன. 'சந்தேகத்தின் நன்மை' என்ற விதியை அளவுக்கு மீறி பயன்படுத்துவது, சமூக பாதுகாப்பை பாதிக்கக்கூடும். மேலும், எல்லா விடுதலை தீர்ப்புகளும் நல்லவை என்ற எண்ணம், பாதிக்கப்பட்டவருக்கும் சமுதாயத்திற்கும் நீதியளிக்காமல் போகும் அபாயத்தை உருவாக்குகிறது.

நீதித்துறை ஒரு பொது பொறுப்புடன் செயல்பட வேண்டும். 'சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட நிரூபணம்' என்ற தங்க நூலிழை போன்றதை ஒவ்வொரு சிறிய சந்தேகத்தைக் கூட உள்ளடக்கும் வகையில் அளவுக்கு மீறி விரிவுபடுத்தப்படக் கூடாது.

''ஆயிரம் குற்றவாளிகள் விடுதலையாகட்டும்; ஒரே ஒரு நிரபராதியும் தண்டிக்கப்படக்கூடாது'' என்ற கருத்தை அளவுக்கு மீறி பின்பற்றுவது ஒரு தவறான இருமை ஆகும். உண்மையில், நியாயமான சந்தேகங்களே குற்றச்சாட்டுக்குட்பட்டவருக்கு பயன்பட வேண்டும். இல்லையெனில், நடைமுறை நீதித்துறை முறையே சிதைந்து, சமுதாய நம்பிக்கையை இழக்கும்.

கிளான்விலி வில்லியம்ஸ் கூறியபடி, குற்றவாளி ஒருவர் தண்டிக்கப்படாமல் விடுபடுவது ஒரு தனிப்பட்ட தவறு மட்டுமல்ல; அது சட்டத்தின் மீது பொதுமக்களின் நம்பிக்கையைக் குறைக்கிறது. இப்படியான விடுதலை தீர்ப்புகள் அதிகரித்தால், சட்டத்தின் மீது மக்கள் அக்கறை குறைந்து, பின்னர் கடுமையான சட்டங்கள் மற்றும் அதிகமான தண்டனைகள் வேண்டுமென்ற கோரிக்கையை உருவாக்கும். இதனால், இறுதியில் நிரபராதிகளைப் பாதுகாக்கும் நீதித்துறை பாதுகாப்பே பாதிக்கப்படும்.

விஸ்கவுன்ட் சைமன் கூறியபடி: ''நீதியின் தவறு என்பது நிரபராதி ஒருவர் தண்டிக்கப்படுவதிலிருந்து மட்டுமல்ல; குற்றவாளி ஒருவர் விடுதலையாகுவதிலிருந்தும் ஏற்படலாம்.'' அதனால், நிரபராதி என்ற முன் கருதுகோளை மதிக்கும்போது, அதனை நடைமுறை உண்மைகளுடன் சமநிலைப்படுத்த வேண்டும்.

குற்றவியல் சட்டத்தின் அடிப்படை கொள்கை – ''நூறு குற்றவாளிகள் தப்பினாலும், ஒரே ஒரு நிரபராதியும் தண்டிக்கப்படக்கூடாது'' என்பது உண்மையே. ஆனால் அதே நேரத்தில், உண்மையான குற்றவாளியை கண்டறிவதற்காக நீதிமன்றம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். தவறான தண்டனை குற்றச்சாட்டுக்குட் பட்டவருக்கு தீங்கு விளைவிப்பதுபோலவே, உண்மையான குற்றவாளி விடுபடுவது சமுதாயத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

மத்திய அரசு வி.எஸ்.மாலிமத் என்பவர் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இந்தக் குழு, இந்திய குற்றவியல் நீதித்துறையை மேம்படுத்த பரிந்துரைகள் அளித்தது. அந்தக் குழு, நீதித்துறையின் நோக்கம் 'உண்மையை கண்டறிதல்' என்பதாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

ஒரு குற்றவியல் வழக்கில்,

- முழுமையான மற்றும் திறமையான விசாரணை,
- நீதிமன்றத்தில் வலுவான குற்றத்தரப்பு நடவடிக்கை,
- கவனமான மற்றும் பொருத்தமான விசாரணை,
- வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகளின் சரியான மதிப்பீடு

இவை அனைத்தும் அவசியமானவை. மேலும், சில நிலையான கொள்கைகள் பின்வருமாறு:

a) உறுதிப்படுத்தல் என்பது ஒரு முன்னெச்சரிக்கை விதி மட்டுமே; அது சான்றாகாது.

b) சான்றுகளின் அளவு அல்ல, தரமே முக்கியம்.

c) மரணப் படுக்கையில் இருக்கும் ஒருவர் பொய் சொல்ல மாட்டார்

d) சூழ்நிலைச் சான்றுகளில் முக்கிய இணைப்பு ஒன்று இல்லையெனில், அது வழக்கறிஞர் தரப்புக்கு பாதகமாகும்.

ஞ) காயமடைந்தவர் சிறந்த சாட்சி; அவர் உண்மையான குற்றவாளியை மறைத்து வேறு ஒருவரை சிக்கவைக்க மாட்டார்.

தேசிய சட்டப் பயிற்றகம், போபால் மற்றும் மாநில உயர்நீதிமன்றங்கள் அமைத்த நீதித்துறை கல்விசார் பயிற்றகங்கள், நீதிபதிகள் மற்றும் குற்றவியல் நீதித்துறை தொடர்புடையவர்களுக்கு தொடர்ச்சியான சட்டப் பயிற்சிகளை வழங்கி வருகின்றன.

2016 ஏப்ரல் மாதத்தில், இந்திய உயர் நீதிமன்றம் நடத்திய தலைமை நீதிபதிகள் மற்றும் முதல்வர்கள் மாநாட்டில், மாநில அளவிலான நீதித்துறை அகாடமிகளை வலுப்படுத்தி, அவற்றை தேசிய சட்டப் பயிற்றகத்துடன் ஒருங்கிணைக்க தீர்மானிக்கப்பட்டது.

இதுபோலவே, காவல் அதிகாரிகள், அரசு வழக்கறிஞர்கள் மற்றும் குற்றவியல் நீதித்துறையில் ஈடுபடும் மற்றவர்களுக்கும் தரமான சட்டப் பயிற்சி வழங்குவது மிகவும் அவசியம். விசாரணை மற்றும் வழக்குத் தொடர்வு தொடர்பான பிரச்சினைகளில் அவர்களை விழிப்புணர்வு செய்ய, அனைத்து நிலைகளிலும் வலுவான கல்விசார் பயிற்றகங்கள் அமைக்கப்பட வேண்டும்.

**- மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## கரோனா தடுப்பூசிகளுக்கு பிந்தைய தீவிர உடல்நல பாதிப்புகள் இழப்பீட்டுக் கொள்கையை தயார் செய்ய உச்சநீதிமன்றம் உத்தரவு

கரோனா தடுப்பூசி செலுத்திய பிறகு ஏற்பட்ட தீவிர உடல்நல பாதிப்புகளுக்கான இழப்பீட்டுக் கொள்கையை வகுக்குமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் 10 மார்ச் உத்தரவிட்டது.

தடுப்பூசி செலுத்திய பிறகு ஏற்படும் பாதிப்புகளைக் கண்காணிக்கும் தற்போதைய வழிமுறை தொடரும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது. கரோனா தடுப்பூசியின் முதல் தவணையை செலுத்திய பிறகு ஏற்பட்ட பாதிப்புகளால் தங்களுடைய மகள்கள் உயிரிழந்ததாக குற்றஞ்சாட்டி ஒரு தம்பதியர் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

கரோனா தடுப்பூசிகளால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு மத்திய அரசு இழப்பீடு வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அந்த மனுவில், தடுப்பூசி செலுத்திய பிறகு எற்பட்ட உடல்நல பாதிப்புகள் குறித்து விசாரணை நடத்த நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. கரோனோ தடுப்பூசி பாதிப்புக்கான இழப்பீட்டுக் கொள்கையை உருவாக்க கேரள உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

கரோனா தடுப்பூசியால் ஏற்பட்ட பாதிப்புகளால் கணவரை இழந்த சயீதா என்பவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர்நிதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்து, இதை எதிர்த்து மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுத் தாக்கல் செய்திருந்தது.

இந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு மார்ச் 10ஆம் தேதி பிறப்பித்த தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது தடுப்பூசிகள் செலுத்திய பிறகு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான தற்போதைய அறிவியல் மதிப்பீட்டை கருத்தில்கொண்டு நிபுணர் குழுவை அமைக்க வேண்டிய அவசியமில்லை. தற்போது அமலில் உள்ள சட்டமுறைகளின்படி, பாதிக்கப்பட்ட நபர்கள் நிவாரணம் பெற்று வருவதை இந்தத் தீர்ப்பு பாதிக்காது. அதேநேரத்தில், இழப்பீட்டுக் கொள்கையை வகுக்க பிறப்பித்த உத்தரவு மத்திய அரசின் அல்லது மற்ற அமைப்பின் பொறுப்பு அல்லது தவறு என ஏற்றுக் கொள்வதாக பொருள்படாது என்று நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

**நன்றி: தினமணி 11.3.2026**

# வழக்கறிஞர்களுக்குத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்துவதிலிருந்து விலக்கா? உச்ச நீதிமன்றம் ஏன் தலையிட்டு இந்த மோதலை தீர்க்க வேண்டும்?

**- முனைவர் அஜய் குமார் பாண்டே**
**இந்திய உச்ச நீதிமன்றத்தில் பயிற்சி பெறும் வழக்கறிஞர்**

நாடாளுமன்றம் வேண்டுமென்று உள்ளடக்கும் மொழியைப் பயன்படுத்தியிருக்கும்போது, நீதித்துறை அளிக்கும் விளக்கம் வாயிலாக ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு விலக்கை அறிமுகப்படுத்த முடியுமா?

இந்தியாவின் தகவல் அறியும் உரிமை சட்டம் ஒரு அசாதாரணமான அரசியலமைப்புச் சாலையின் சந்திப்பில் நிற்கிறது. கடந்த இரு தசாப்தங்களில், 2005-ஆம் ஆண்டின் தகவல் அறியும் உரிமைச் சட்டம், நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் மிகச் சிறந்த பொறுப்புக்கூறல் வழிமுறைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

இருப்பினும், சமீபத்திய நீதித்துறை முன்னேற்றங்கள் ஒரு கவலையளிக்கும் முரண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. ஒருபுறம் பொது அதிகார அமைப்புகளின் வெளிப்படைத்தன்மை கடமைகளை நீதிமன்றங்கள் தொடர்ந்து வலுப்படுத்தி வரும் வேளையில், மறுபுறம் விளக்கமளித்தல் என்பதன் மூலம் உருவாகும் கட்டுப்பாடுகள் தகவல் கோரும் குடிமக்களின் நடைமுறை உரிமைகளைச் சுருக்குகின்றன.

சமீபத்திய இரண்டு நிகழ்வுகள் இந்த வளர்ந்து வரும் கோட்பாட்டு ரீதியான பதற்றத்தை விளக்குகின்றன. முதலாவதாக, சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், மத்திய தகவல் ஆணையம் வழக்கறிஞர்கள் தாங்கள் கையாளும் வழக்குகள் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான விண்ணப்பங்களைத் தாக்கல் செய்யத் தடை விதித்துள்ளது. இரண்டாவதாக, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 4-வது பிரிவின் கீழ் தானாக முன்வந்து தகவல்களை வெளிப்படுத்தும் கடமைகளை நிறைவேற்றத் தவறியதற்காக டெல்லி மாநகராட்சியை டெல்லி உயர் நீதிமன்றம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், இந்த நிகழ்வுகள் உச்ச நீதிமன்றம் தலையிட்டு வழங்கவேண்டிய தீர்வை அவசியமாக்கும் அடிப்படை அரசியலமைப்பு கேள்விகளை எழுப்புகின்றன.

**வழக்கறிஞர் விலக்கு**: சட்டப்பூர்வ அடிப்படை இல்லாத கட்டுப்பாடு-தகவல் அறியும் உரிமைச் சட்டம் மிகவும் விரிவான மொழியைப் பயன்படுத்துகிறது. பிரிவு 6(1)-ன் படி, தகவல் கோரும் 'எந்தவொரு நபரும்' அந்த சட்டத்தின் கீழான விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யலாம். இச்சட்டம் பிரிவு 8-ன் கீழ் உள்ளடக்க விலக்குகளையும், பிரிவு 24-ன் கீழ் நிறுவன ரீதியான விலக்குகளையும் தெளிவாகக் குறிப்பிடுகிறது. குறிப்பாக, நாடாளுமன்றம் இதில் தொழில்முறை அல்லது அந்தஸ்து சார்ந்த விலக்குகள் எதையும் விதிக்கவில்லை.

சட்டரீதியான இந்தத் தெளிவு இருந்தபோதிலும், சமீபத்திய நிர்வாக நடைமுறைகள் மற்றும் நீதித்துறை விளக்கங்கள், வழக்கறிஞர்கள் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்குகளில் தஅஉ சட்டத்தைப் பயன்படுத்தத் தகுதியற்றவர்கள் எனக் கருதத் தொடங்கியுள்ளன. வழக்கறிஞர்கள் தஅஉ சட்டத்தின் கீழான விண்ணப்பங்களைத் தாக்கல் செய்ய அனுமதிப்பது, இச்சட்டத்தை ஒரு தொழில்முறை வழக்குக் கருவியாக மாற்றிவிடும் என்பதே இதன் பின்னணியில் உள்ள வாதமாகும்.

இந்த விளக்கம், சட்டத்தில் இல்லாத ஒரு தொழில்முறைத் தகுதியின்மையை நடைமுறைக்குக் கொண்டு வருகிறது. இது அரசியலமைப்புச் சட்டவியலில் ஒரு முக்கியக் கேள்வியை எழுப்புகிறது:

நாடாளுமன்றம் வேண்டுமென்ற காரணத்துடன் அனைவரையும் உள்ளடக்கிய மொழியைப் பயன்படுத்தியிருக்கும்போது, நீதித்துறை விளக்கம் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கான விலக்கை அறிமுகப்படுத்த முடியுமா? என்கிற கேள்வி எழுகிறது.

இந்த முரண்பாடு நடைமுறையில் இன்னும் தெளிவாகத் தெரிகிறது. ஒரு வழக்கறிஞர் பிரதிநிதி என்ற முறையில் தஅஉ சட்டத்தின் கீழான கோரிக்கையைத் தாக்கல் செய்தால் அது நிராகரிக்கப்படலாம். அதே வழக்கறிஞர், தனிப்பட்ட குடிமகனாக அதே கோரிக்கையைத் தாக்கல் செய்தால் அது வெற்றி பெறக்கூடும். இத்தகைய விளக்கம் சட்டப்பூர்வ வெளிப்படைத்தன்மையைச் சிதைப்பதோடு, நடைமுறை ரீதியான மறைமுகத் தன்மையை ஊக்குவிப்பதாக அமைகிறது.

**நீதிக்கான அணுகல் மற்றும் கட்டமைப்பு சமத்துவமின்மை:**

வழக்கறிஞர் விலக்கின் தாக்கங்கள் தொழில்முறை அசௌகரியங்களுக்கு அப்பாற்பட்டவை. அவை நீதிக்கான அணுகல் என்பதன் செயல்பாட்டுத் திறனை நேரடியாகப் பாதிக்கின்றன.

நீதிக்கான அணுகல் என்பது பிரிவு 21-ன் ஒரு பகுதி என்பதை உச்ச நீதிமன்றம் தொடர்ந்து அங்கீகரித்து வருகிறது. அனிதா குஷ்வாஹா -எதிர்- புஷப் சுதன் வழக்கில், நீதிக்கான அணுகல் என்பது வெறும் கோட்பாட்டு ரீதியாக இல்லாமல், நடைமுறை ரீதியாகவும் பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்று நீதிமன்றம் வலியுறுத்தியது.

இந்திய நீதிமன்ற நடவடிக்கைகளின் எதார்த்த நிலையில், பெரும்பாலான மனுதாரர்களுக்கு நிர்வாகத் தகவல் வெளிப்படுத்தும் முறைகளைத் தாங்களாகவே கையாளும் திறன் இல்லை. சட்ட உதவி வழக்கறிஞர்களும் மாவட்ட அளவிலான வழக்கறிஞர்களும், குறிப்பாகத் பாரம்பரியமான ஆவணக் கோரல் வழிமுறைகள் தோல்வியடையும் போது, அரசாங்க ஆவணங்களைப் பெற தஅஉ சட்டத்தையே நம்பியிருக்கிறார்கள்.

சிவில் நடைமுறைச் சட்டத்தின் ஆணை ஙீஜ-ன் கீழான விண்ணப்பங்கள் பெரும்பாலும் நடைமுறைத் தாமதங்களைச் சந்திக்கின்றன. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 91-ன் கீழான கோரிக்கைகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன அல்லது காலவரையறையின்றி தள்ளிப்போடப்படுகின்றன. தஅஉ சட்டத்தில் காலக்கெடு, மேல்முறையீட்டுப் பார்வை மற்றும் அபராத விதிகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் ஆவணங்கள் கிடைப்பதை கணிசமாக மேம்படுத்தியது.

எனவே, வழக்கறிஞர்கள் தஅஉ சட்டத்தைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவது, நீதி வழங்கல் அமைப்பிற்குள் ஒரு கட்டமைப்புச் சமத்துவமின்மையை உருவாக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. வசதி படைத்த மனுதாரர்கள் மாற்று வழிமுறைகளைப் பின்பற்ற முடியும், ஆனால் விளிம்புநிலை மனுதாரர்கள் முக்கியமான ஆதாரங்களைப் பெறுவதற்கான வாய்ப்பை இழக்க நேரிடும்.

**பிரிவு 14 மற்றும் பகுத்தறிவு வகைப்பாட்டுக் கோட்பாடு:**

வழக்கறிஞர்களுக்கான இந்த விலக்கு, அரசியலமைப்பின் 14-வது பிரிவின் கீழும் ஆய்வுக்கு உட்பட்டது. எந்தவொரு வகைப்பாடும் 'தெளிவான வேறுபாடு' மற்றும் 'சட்டத்தின் நோக்கத்துடன் ஒரு தர்க்கரீதியான தொடர்பு' ஆகிய இரு சோதனைகளிலும் வெற்றி பெற வேண்டும் என்று அரசியலமைப்பு சட்டவியல் கூறுகிறது.

இங்கே, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நோக்கம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதாகும். ஒருவரின் தொழில்முறை அந்தஸ்தின் அடிப்படையில் மட்டும் தகவலுக்கான உரிமையை மறுப்பது, இந்த சட்டக் கட்டமைப்பிற்குள் நியாயப்படுத்துவது கடினம். ஒரு தனிப்பட்ட குடிமகன் கேட்கும்போது கிடைக்கும் அதே தகவல், மற்றொரு குடிமகனுக்காகச் செயல்படும் சட்டப் பயிற்சி பெற்ற ஒரு பிரதிநிதி கேட்கும்போது மட்டும் தடுக்கப்படுகிறது.

சட்டமே அத்தகைய தொழில்முறை கட்டுப்பாடுகளைக் கருதாத நிலையில், இத்தகைய வகைப்பாடு தன்னிச்சையானது எனக் கருதப்படும் அபாயம் உள்ளது.

**தவறான பயன்பாடு குறித்த கவலைகள் மற்றும் விகிதாச்சாரக் கோட்பாடு:**

வழக்கறிஞர்களுக்கு விலக்கு அளிப்பதற்கு முன்வைக்கப்படும் முதன்மையான காரணம், சட்டப் பயிற்சியாளர்களால் தஅஉ சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தப்பட வாய்ப்புள்ளது என்பதாகும். இருப்பினும், அரசியலமைப்பு விகிதாச்சாரக் கோட்பாட்டின்படி, சட்டப்பூர்வ உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் என்பது மிகக் குறுகிய அளவிலும், அதே சமயம் உரிமைகளை மிகக் குறைவாகப் பாதிக்கும் வகையிலும் தான் இருக்க வேண்டும்.

தஅஉ சட்டத்தில் தவறான பயன்பாட்டைத் தடுப்பதற்கான பாதுகாப்பு அம்சங்கள் ஏற்கனவே உள்ளன. பிரிவு 7(9) தேவையற்ற அல்லது விகிதாச்சாரத்திற்கு அப்பாற்பட்ட கோரிக்கைகளை நிராகரிக்க அனுமதிக்கிறது. பிரிவு 8 முக்கியமான தகவல்கள் வெளிப்படுத்தப் படுவதிலிருந்து பாதுகாக்கிறது. மேல்முறையீட்டு கட்டமைப்பு மேற்பார்வை அதிகாரத்தை வழங்குகிறது.

எனவே, ஒரு குறிப்பிட்ட தொழிலைச் சார்ந்தவர்களுக்கு முழுமையான தடை விதிப்பது என்பது விகிதாச்சாரத்திற்கு மாறானது. இது முறையான பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதோடு, தவறான பயன்பாட்டைத் தடுக்கத் தவறி, அதை முறைசாரா வழிகளுக்கு தள்ளுவதாக அமையக்கூடும்.

டெல்லி மாநகராட்சி வழக்கு: தஅஉ சட்டத்தின் உணர்வை உறுதிப்படுத்துதல்: வழக்கறிஞர் விலக்கு வழக்குகளில் வெளிப்படும் கட்டுப்பாடான விளக்கங்களுக்கு மாறாக, டெல்லி மாநகராட்சி தொடர்பான டெல்லி உயர் நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பு, தஅஉ சட்டத்தின் அடிப்படைத் தத்துவத்தை வலுப்படுத்துகிறது.

இளைஞர்களுக்கான மையம், கலாச்சாரம், சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்து தாக்கல் செய்த பொதுநல வழக்கில், சட்டமன்ற நடவடிக்கைகள், தீர்மானங்கள் மற்றும் குழுப் பதிவுகளைத் தானாக முன்வந்து வெளிப்படுத்தத் தவறிய டெல்லி மாநகராட்சியின் செயல்பாட்டை நீதிமன்றம் ஆய்வு செய்தது. தலைமை நீதிபதி டி.கே. உபாத்யாயா மற்றும் நீதிபதி தேஜஸ் கரியா தலைமையிலான அமர்வு, தஅஉ சட்டம் இயற்றப்பட்டு இரு தசாப்தங்கள் கடந்த பின்னரும், பிரிவு 4–ன் கீழான சட்டப்பூர்வ கடமைகள் நிறைவேற்றப்படாமல் இருப்பது குறித்து கவலை தெரிவித்தது.

தகவல்களை வெளிப்படுத்தாததற்கு டெல்லி மாநகராட்சி சட்டத்தின் விதிகளை ஒரு காரணமாக டெல்லி மாநகராட்சி நிர்வாகம் முன்வைத்ததை நீதிமன்றம் நிராகரித்தது. மாநகராட்சி சட்டங்கள் தஅஉ சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள வெளிப்படைத்தன்மை கடமைகளை நீர்த்துப்போகச் செய்ய முடியாது என்று அது வலியுறுத்தியது. மேலும், நிர்வாக ரீதியான ஒளிவுமறைவற்ற தன்மையை நீதிமன்றம் அங்கீகரிக்கும் வகையில், நிறைவேற்றல் அறிக்கைகளைத் தாக்கல் செய்யுமாறு மாநகராட்சிக்கு உத்தரவிட்டது.

**பிரிவு 4: தஅஉ சட்டத்தின் அரசியலமைப்பு முதுகெலும்பு:**

டெல்லி மாநகராட்சி வழக்குத் தீர்ப்பு, பிரிவு 4–ஐ தஅஉ சட்டத்தின் தத்துவார்த்த அடித்தளமாக முன்னிறுத்துகிறது. பொது அதிகார அமைப்புகள் பொதுமக்களுக்குத் தகவல்களைத் தானாக முன்வந்து கிடைக்கச் செய்ய வேண்டும், இதன் மூலம் தனிப்பட்ட தஅஉ சட்ட விண்ணப்பங்களைச் சார்ந்திருப்பதை குறைக்க வேண்டும் என்ற நிர்வாகக் கட்டமைப்பை இந்த விதி அறிவுறுத்துகிறது.

இருப்பினும், வரலாற்று ரீதியாகப் பொது நிறுவனங்களிடையே பிரிவு 4–ஐப் பின்பற்றுவது பலவீனமாகவே உள்ளது. வெளிப்படைத்தன்மை என்பது கோரப்படும்போது மட்டும் தருவதாக இருக்கக்கூடாது, அது நிறுவனமயமாக்கப்பட்ட ஒரு தன்னார்வ வெளிப்படுத்தலாக இருக்க வேண்டும் என்பதை டெல்லி உயர் நீதிமன்றத்தின் தலையீடு உறுதிப்படுத்துகிறது. இந்த விளக்கம் பங்கேற்பு நிர்வாகம் மற்றும் நிர்வாகப் பொறுப்புக்கூறல் ஆகிய அரசியலமைப்பு விழுமியங்களுடன் ஒத்துப்போகிறது.

**உருவாகி வரும் சட்டவியல் முரண்பாடு:**

வழக்கறிஞர்களுக்கான விலக்கு மற்றும் தானாக முன்வந்து தகவல் வெளிப்படுத்துவதை அமல்படுத்துதல் ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில் இருப்பது, ஒரு தத்துவார்த்த முரண்பாட்டை வெளிப்படுத்துகிறது. ஒருபுறம் நீதிமன்றங்கள் நிறுவனங்களின் வெளிப்படைத்தன்மை கடமைகளை வலுப்படுத்தும் அதே வேளையில், மறுபுறம் குடிமக்கள் தொழில்முறை உதவி மூலம் தகவல்களைப் பெறுவதற்கான நடைமுறை வழிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

இந்த இரட்டைத்தன்மை, தத்துவ ரீதியாக வலுவான ஆனால் நடைமுறையில் அணுக முடியாத ஒரு வெளிப்படைத்தன்மை கட்டமைப்பை உருவாக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது.

**உச்ச நீதிமன்றத்தின் அதிகாரப்பூர்வத் தெளிவுபடுத்தலின் தேவை**

உள்ளடக்கிய சட்ட மொழிக்கும், கட்டுப்பாடான நீதித்துறை விளக்கத்திற்கும் இடையிலான இந்த முரண்பாடு, உச்ச நீதிமன்றத்தின் அதிகாரப்பூர்வமான விளக்கத்தை அவசியமாக்குகிறது. இதில் தொடர்புடைய சிக்கல்கள் அடிப்படை அரசியலமைப்பு கேள்விகளை எழுப்புகின்றன:

அனைவருக்கும் பொதுவான மொழியில் வடிவமைக்கப்பட்ட ஒரு உரிமை சார்ந்த சட்டத்தில், நீதிமன்றங்கள் தொழில்முறை விலக்குகளை அறிமுகப்படுத்த முடியுமா?

**வழக்கறிஞர் விலக்கு என்பது பிரிவு 14 மற்றும் 21-ஐ மீறுகிறதா?**

தவறான பயன்பாடு குறித்த கவலைகள், ஒரு குறிப்பிட்ட பிரிவினரை ஒட்டுமொத்தமாகத் தகுதியற்றவர்களாக்குவதை நியாயப்படுத்த முடியுமா?

தானாக முன்வந்து தகவல் வெளிப்படுத்தும் கடமைகளையும், நடைமுறை அணுகல் உரிமைகளையும் நீதிமன்றங்கள் எவ்வாறு சமன்படுத்த வேண்டும்?

இந்தக் கேள்விகளுக்கான தீர்வுதான், தகவல் அறியும் உரிமைச் சட்டம் (கீகூஜ) தொடர்ந்து குடிமக்களை மையமாகக் கொண்ட ஒரு பொறுப்புக்கூறல் வழிமுறையாகச் செயல்படுமா அல்லது தொழில்நுட்ப ரீதியாக அணுகக்கூடிய ஆனால் நடைமுறையில் கட்டுப்பாடுகள் நிறைந்த ஒரு சட்டமாக மாறுமா என்பதைத் தீர்மானிக்கும்.

**அரசியலமைப்பு விழுமியமாக வெளிப்படைத்தன்மை**

தகவல் அறியும் உரிமையை பிரிவு 19(1)(ச்)–ன் ஒரு முக்கிய அங்கமாக உச்ச நீதிமன்றம் பலமுறை அங்கீகரித்துள்ளது. கீகூஜ சட்டம் என்பது இந்த அரசியலமைப்பு விழுமியத்திற்கு வழங்கப்பட்ட சட்டப்பூர்வ அங்கீகாரமாகும்.

வெளிப்படைத்தன்மை சட்டங்கள் ஜனநாயகப் பொறுப்புக்கூறலின் கருவிகளாகச் செயல்படுகின்றன. அவற்றின் செயல்திறன் என்பது வெறும் சட்டப் புத்தகத்தில் இருப்பதில் மட்டும் இல்லை, மாறாக அவை எவ்வளவு எளிதாகப் பயன்படுத்த முடிகிறது என்பதில் உள்ளது. தகவல்களைப் பெறுவதற்கான தொழில்முறை உதவியைக் கட்டுப்படுத்துவது, வெளிப்படைத்தன்மையை நிலைநாட்டும் செயல்பாட்டை நீர்த்துப்போகச் செய்யும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

அதே நேரத்தில், தானாக முன்வந்து தகவல்களை வெளிப்படுத்துமாறு நீதித்துறை வலியுறுத்துவது, வெளிப்படைத்தன்மை என்பது ஒரு விருப்பத்தேர்வு அல்ல, அது ஒரு அரசியலமைப்பு நிர்வாக நெறிமுறை என்பதை உறுதிப்படுத்துகிறது.

**முடிவுரை**

இந்தியாவின் கீகூஜ ஆட்சிமுறை ஒரு குறிப்பிடத்தக்க விளக்க மாற்றத்திற்கு உள்ளாகி வருகிறது. நீதித்துறை முடிவுகள் ஒரே நேரத்தில் நிறுவனங்களின் வெளிப்படைத்தன்மை கடமைகளை வலுப்படுத்துகின்றன, அதே சமயம் நடைமுறை ரீதியான அணுகல் வழிகளைச் சுருக்குகின்றன.

பிரிவு 6–ல் உள்ள ''எந்தவொரு நபரும்'' என்ற சொற்றொடர், அனைவருக்கும் சமமான அணுகலை வழங்குவதற்கான நாடாளுமன்றத்தின் நனவான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது. இதில் தொழில்முறை தகுதியின்மைகளை அறிமுகப்படுத்துவது, சட்டத்தின் உண்மைத் தன்மையையும் அரசியலமைப்புச் சமத்துவத்தையும் சீர்குலைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

இந்த வளர்ந்து வரும் முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு உச்ச நீதிமன்றம் இப்போது ஒரு தனித்துவமான நிலையில் உள்ளது. அதன் தலையீடு சட்டக் கோட்பாடுகளுக்கிடையேயான ஒற்றுமையை மீட்டெடுக்கவும், நீதிக்கான அணுகலைப் பாதுகாக்கவும், ஜனநாயகப் பொறுப்புக்கூறலின் ஒரு தூணாக கீகூஐ–ஐ மீண்டும் உறுதிப்படுத்தவும் உதவும்.

இந்தியாவின் வெளிப்படைத்தன்மை கட்டமைப்பின் எதிர்கால நம்பகத்தன்மை, இந்த அரசியலமைப்புப் பதற்றம் எவ்வாறு தீர்க்கப்படுகிறது என்பதிலேயே தங்கியுள்ளது.

**(நன்றி: பார் அண்ட் பெஞ்ச் இணையதளம். கட்டுரையாளர் முனைவர் அஜய் குமார் பாண்டே அவர்கள் இந்திய உச்ச நீதிமன்றத்தில் பயிற்சி பெறும் வழக்கறிஞர் ஆவார்.)**

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## 13 ஆண்டுகளாக கோமாவில் இருக்கும் இளைஞரை கருணைக் கொலை செய்ய உச்சநீதிமன்றம் அனுமதி

பதிமூன்று ஆண்டுகளாக கோமாவில் சிகிச்சை பெற்று வரும் 32 வயது இளைஞருக்கான சிகிச்சையை நிறுத்தி அவர் கண்ணியமாக மரணமடையச் செய்ய கருணைக் கொலை உச்சநீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. உச்சநீதிமன்ற வரலாற்றில் இதுபோல் தீர்ப்பு அளிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

உத்தர பிரதேச மாநிலம், காஜியாபாத்தைச் சேர்ந்த பஞ்சாப் பல்கலைக்கழக மாணவரான ஹரீஷ் ராணா கடந்த 2013ஆம் ஆண்டில் 4வது மாடியில் விளையாடிக் கொண்டிருந்தபோது கீழே தவறி விழுந்தார். இதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த 13 ஆண்டுகளாக அவர் கோமாவில் சிகிச்சை பெற்று வருகிறார். எனினும், உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதைத் தொடர்ந்து, ஹரீஷை கருணைக் கொலை செய்ய அனுமதிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் அவரின் பெற்றோர் ரிட் மனு தாக்கல் செய்தனர். இந்த மனு மீதான விசாரணையின்போது அவரின் பெற்றோரை நீதிபதிகள் நேரில் சந்தித்து விவரம் கேட்டறிந்தனர். மேலும், தில்லி எய்ம்ஸ் மருத்துவர்களின் அறிக்கையையும் பார்வையிட்டு, ஹரீஷ் உடல்நிலை முன்னேறாது என்பதையும், தொடர்ந்து சிகிச்சை அளிப்பதால் எந்தப் பயனுமில்லை என்பதையும் நீதிபதிகள் உறுதி செய்தனர்.

இதைத் தொடர்ந்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி. பார்திவாலா, கே.வி.விஸ்வநாதன் ஆகியோரைக் கொண்ட அமர்வு மார்ச் 11ஆம் தேதி தனது தீர்ப்பை வெளியிட்டது. அப்போது நீதிபதிகள் கூறுகையில், 'தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை வாரியங்கள், ஹரீஷுக்கான சிகிச்சையை நிறுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளன. ஆதலால் இதில் நீதித் துறை தலையிட வேண்டியதில்லை. எனவே, அவருக்கு அளிக்கும் சிகிச்சையை நிறுத்த உச்சநீதிமன்றம் அனுமதியளிக்கிறது. இந்த விவகாரத்தை மனிதாபிமான முறையில் அணுகுவது அவசியம். ஆதலால் சம்பந்தப்பட்ட நபரின் கண்ணியத்துக்கு எந்த பங்கமும் ஏற்படாமல் அவருக்கான சிகிச்சையை நிறுத்துவது தொடர்பான திட்டம் செயல்படுத்துவதை தில்லி எய்ம்ஸ் உறுதி செய்ய வேண்டும். கருணைக் கொலை தொடர்பான சட்டத்தைக் கொண்டு வருவது குறித்து மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும்' என்றனர்.

**நன்றி: தினமணி 12.3.2026**

# 1956ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம்
# (தமிழ்நாடு சட்ட எண் 39/1956

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

## The Tamil Nadu Official Language Act, 1956)
## (Tamil Nadu Act No.39 of 1956)

**(as on 31st October, 2023)**

1957ஆம் ஆண்டு சனவரி திங்கள் 19ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று, முதலாவதாக 1957ஆம் ஆண்டு சனவரி திங்கள் 23ஆம் நாளன்று புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியிடப்பட்டது.)

தமிழ்நாடு மாநிலத்தின் அலுவல் முறை நோக்கங்களில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழியாகத் தமிழை ஏற்றுக் கொள்வதற்கு வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

ஒரு மாநிலத்தின் அலுவல் முறை நோக்கங்களில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழியாகத் தமிழை ஏற்றுக் கொள்வதற்கு வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

ஒரு மாநிலத்தின் சட்டமன்றம் சட்டத்தின் வாயிலாக அந்த மாநிலத்தில் வழங்கி வருகிற மொழிகளில் ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை அந்த மாநிலத்தின் அலுவல்முறை நோக்கங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றில் எதற்கும் பயன்படுத்தப்பட வேண்டிய மொழியாக அலல்து மொழிகாள ஏற்றுக் கொள்வதையும், சட்ட முன் வடிவுகள், சட்டங்கள், அவசரச் சட்டங்கள் ஆணைகள், விதிகள், ஒழுங்கு விதிகள், துணை விதிகள் ஆகியவற்றில் பயன்படுத்துவதற்காக ஆங்கிலவழி அல்லாத பிறமொழி எதையும் வகுத்துரைப்பதையும் அரசமைப்பு இயலச் செய்வதால்;

இந்தியக் குடியரசின் ஏழாம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம் பின் வருமாறு.

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்:** (1) இந்தச் சட்டம் 1956ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம் என்று வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

**2. மாநிலத்தின் ஆட்சிமொழியாகத் தமிழ் இருத்தல் வேண்டும்:** தமிழ்நாடு மாநிலத்தின் ஆட்சிமொழியாகத் தமிழ் இருத்தல் வேண்டும்.

**3. அரசு வேறுவகையில் பணிக்கும்வரை அலுவல் முறை நோக்கங்களுக்கு ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்தப்படுதல் வேண்டும்**: பிரிவு 2இல் என்ன இருந்தபோதிலும் மற்றும் அரசமைப்பின் 346 மற்றும் 347 ஆகிய அமைப்பு விதிகளின் வகைமுறைகளுக்கு ஊறின்றியும், ஆங்கில மொழியானது, அது இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்கு முன்பு மாநிலத்தின் எந்த அலுவல் முறை நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்ததோ, அந்த நோக்கங்கள் எல்லாவற்றிலும் மாநில அரசு, பிரிவு 4இன்படி அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் அலுவல்முறை நோக்கம் எதைப் பொறுத்தும், வேறு வகையில் பணிக்கும் வரை, தொடர்ந்து பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

**4. எந்த அலுவல்முறை நோக்கங்களுக்குத் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டுமோ அந்த அலுவல்முறை நோக்கங்களை அறிவிக்கை செய்ய அரசுக்குள்ள அதிகாரம்**: மாநில அரசு, அவ்வப்போது பிறப்பிக்கும் அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் அலுவல்முறை நோக்கங்களைப் பொறுத்துத் தமிழ் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்று பணிக்கலாம்.

[1][**4-A. எல்லா நடவடிக்கைகளிலும் சாட்சியத்தைப் பதிவு செய்வதற்காகத் தமிழை நீதிமன்ற மொழி என விளம்புதல் :** இந்தச் சட்டத்தின் 2, 3 மற்றும் 4 ஆகிய பிரிவுகளில் அல்லது 1908ஆம் ஆண்டு உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தில் மையச் சட்டம் A/1908 அல்லது 1973ஆம் ஆண்டு குற்ற விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தில் (மையச் சட்டம் 2/1974)என்ன அடங்கியிருந்தபோதிலும், எல்லா நடவடிக்கைகளிலும் சாட்சியத்தைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காக.

(i) உயர்நீதிமன்றத்துக்குக் கீழ் அமைந்த உரிமை வழக்கு நீதிமன்றங்கள் மற்றும் குற்ற வழக்கு நீதிமன்றங்கள்

(ii) தீர்ப்பாயங்கள்; மற்றும்

(iii) வாடகை நீதிமன்றங்கள் மற்றும் வருவாய் நீதிமன்றங்கள் எல்லாவற்றின் மொழியாகத் தமிழ் இருத்தல் வேண்டும்.

**வரம்புரை**: ஆனால் அத்தகைய நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் எதிலும் தலைமை வகிக்கும் அலுவலர், தமிழில் சாட்சியத்தைப் பதிவு செய்கையில் சரியான கருத்தையும் பொருளையும் வெளிக்கொணர்வதற்குத் தேவையென அவர் கருதுகின்ற இடத்தில் எல்லாம், ஆங்கிலச் சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்தலாம்.

**மேலும் வரம்புரை**: உயர்நீதிமன்றம், பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக.

(i) உரிமை வழக்கு அல்லது குற்ற வழக்கு நீதிமன்றங்களில் அல்லது தீர்ப்பாயங்களில் தலைமை வகிக்கும் அலுவலர்களில் எந்த வகையினருக்கும் அல்லது

(ii) அத்தகைய நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் எதிலும் தலைமை வகிக்கும் அலுவலர் எவருக்கும்,

அத்தகைய ஆணையில் குறித்துரைக்கப்படும் சூழ்நிலைகளிலும் அதில் குறித்துரைக்கப்படும் கால அளவுக்கும் சாட்சியத்தை ஆங்கிலத்தில் பதிவு செய்வதற்கு அனுமதி அளிக்கலாம்.

**இன்னும் வரம்புரை**: வருவாய் வாரியம், பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக.

(i) வாடகை நீதிமன்றங்களில் அல்லது வருவாய் நீதிமன்றங்களில் தலைமை வகிக்கும் அலுவலர்களில் எந்த வகையினருக்கும், அல்லது

(ii) அத்தகைய நீதிமன்றம் எதிலும் தலைமை வகிக்கும் அலுவலர் எவருக்கும்.

ஆணையில் குறித்துரைக்கப்படும் சூழ்நிலைகளிலும் அதில் குறித்துரைக்கப்படும் கால அளவுக்கும் தீர்ப்புகளையும் ஆணைகளையும் ஆங்கிலத்தில் எழுதுவதற்கு அனுமதி அளிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன் வகைமுறைகளானவை. மாநில அரசு அறிவிக்கை வாயிலாகக் குறிக்கலாகும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் மற்றும்

(i) உயர்நீதிமன்றத்துக்குக் கீழ் அமைந்த உரிமை வழக்கு நீதிமன்றங்கள்;

(ii) உயர்நீதிமன்றத்துக்குக் கீழ் அமைந்த குற்ற வழக்கு நீதிமன்றங்கள்;

(iii) தீர்ப்பாயங்கள்; மற்றும்

---

1. 1976ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆட்சிமொழி (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 41/1976) 3ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது.

(iv) வாடகை நீதிமன்றங்கள் மற்றும் வருவாய் நீதிமன்றங்கள்

ஆகியவை பொறுத்து வெவ்வேறு தேதிகள் குறிக்கப்படலாம்

**5. சட்ட முன்வடிவுகள் முதலியவற்றில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி** : மாநில அரசு, அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாகும் தேதியன்றும் அது முதற்கொண்டும்

(i) தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றத்தில், அறிமுகப்படுத்தப்படும் சட்டமுன் வடிவுகளில் அல்லது அவை பொறுத்து முன்மொழியப்படும் திருத்தங்களில் அல்லது அந்தச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டங்களில்;

(ii) அரசமைப்பின் 213ஆம் அமைப்பு விதியின்படி சாற்றாணை செய்யப்படும் அவசரச் சட்டங்களில்

(iii) அரசமைப்பின்படி அல்லது நாடாளுமன்றத்தால் அல்லது மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின்படி மாநில அரசால் பிறப்பிக்கப்படும் ஆணைகளில் விதிகளில் ஒழுங்குவிதிகளில் மற்றும் துணை விதிகளில்.

பயன்படுத்தப்பட வேண்டிய மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.

**வரம்புரை**: ஆனால், (i) முதல் (iii) வரையில் உள்ள கூறுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வெவ்வேறு இனங்களைப் பொறுத்து வெவ்வேறு தேதிகளை மாநில அரசு குறிக்கலாம்.

**6. பிரிவுகள் 4, 5இன்படி பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்**: பிரிவுகள் 4, 5இன்படி பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் அனைத்தும், அவை பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், மாநிலச் சட்டமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அந்த அறிவிக்கைகள், சட்டமன்றப் பேரவை அது ஒரே கூட்டத் தொடரிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டத் தொடர்களிலோ, உள்ளபடியே அமர்கிற நாளிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் செய்யக் கூடிய திருத்தங்கள் மற்றும் மாறுதல்களுக்கு அல்லது நீக்கம் செய்வதற்கு உட்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

**நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

**நீதிபதிகள், வழக்கறிஞர்கள்,**
**சட்டப் பேராசிரியர்கள்,**
**சட்டம், நீதி குறித்த கட்டுரைகள்**
**வரவேற்கப்படுகின்றன.**

தொடர்புக்கு

**E-mail: sattakadir1992@yahoo.co.in.**

# 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 13/2006

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

**The Tamil Nadu Tamil Learning Act, 2006)**
**(Tamil Nadu Act No.13 of 2006)**
**(as on 31st October, 2023)**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2006ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 09ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொது தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாகத் தமிழைக் கற்றுக் கொள்வதற்கு வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

2006–2007ஆம் கல்வியாண்டு முதல் இம்மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் உள்ள 1 முதல் 10 வரையிலான வகுப்புகளில் படிக்கின்ற அனைத்து மாணவர்களும் படிப்படியான முறையில் தமிழைப் பாடங்களுள் ஒன்றாகக் கற்பதை உறுதி செய்வது என தமிழ்நாடு அரசினால் கொள்கை முடிவு ஒன்று எடுக்கப்பட்டிருப்பதால்;

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்:** (1) இந்தச் சட்டம் 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிப்பிடப்படும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்:** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,

(a) "கல்வி ஆண்டு" என்பது, ஜூன் முதல் நாளன்று தொடங்குகின்ற ஆண்டு எனப் பொருள்படும்.

(b) "தகுதி வாய்ந்த அலுவலர்" என்பது, பிரிவு 4இன் கீழ் அரசால் நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த அலுவலர் எனப் பொருள்படும்.

(c) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(d) "வகுத்துரைக்கப்பட்டது" என்பது, விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்.

(e) "பள்ளி" என்பது,

(i) அரசால் அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் பேணி வரப்படும் தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப்பள்ளி எதுவும்; அல்லது

(ii) அரசமைப்பின் 30ஆம் அமைப்பு விதியின் (1)ஆம் கூறின் கீழ் நிறுவப்பட்டு நிருவகிக்கப்படும் மாநில நிதியிலிருந்து உதவி பெறுகிற அல்லது உதவி பெறாத சிறுபான்மையினர் பள்ளி உள்ளிட்ட தனியார் கல்வி நிறுவனம் எதனாலும் நிறுவப்பட்டு, நிருவகிக்கப்பட்டு அல்லது பேணி வரப்படும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி எதுவும்; அல்லது

(iii) அரசமைப்பின் 30ஆம் அமைப்பு விதியின் (1)ஆம் கூறின் கீழ் நிறுவப்பட்டு நிருவகிக்கப்படும் மாநில நிதியிலிருந்து உதவி பெறுகிற அல்லது உதவி பெறாத சிறுபான்மையினர் பள்ளி உள்ளடங்கலான மழலையர் மற்றம் தொடக்கப் பள்ளி, பதின்மப் (Matriculation) பள்ளி, ஆங்கிலோ–இந்தியர் பள்ளி அல்லது கீழ்த்திசைப் பள்ளி எதுவும் (Oriental School) அல்லது

(iv) இது குறித்து, அரசால் அறிவிக்கப்படலாகும் அத்தகைய பிற பள்ளி. எனப் பொருள்படும்.

**விளக்கம்**: இந்தக் கூறின் நோக்கத்திற்காக

(i) மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி என்பன, மழலையர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) தொடக்கப் பள்ளி என்பது, ஒன்று முதல் ஐந்து வரையிலான வகுப்புகளையோ அல்லது ஆறு முதல் எட்டு வரையிலான வகுப்புகளையோ கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) நடுநிலைப்பள்ளி என்பது, ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளையோ அல்லது ஆறு முதல் எட்டு வரையிலான வகுப்புகளையோ கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) உயர்நிலைப் பள்ளி என்பது ஒன்று முதல் பத்து வரையிலான வகுப்புகளையோ அல்லது ஆறு முதல் பத்து வரையிலான வகுப்புகளையோ அல்லது ஆறு முதல் பத்து வரையிலான வகுப்புகளையோ அல்லது ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளையோ கொண்டிருத்தல் வேண்டும்.

(v) மேல்நிலைப் பள்ளி என்பது, ஒன்று முதல் பன்னிரெண்டு அல்லது ஆறு முதல் பன்னிரெண்டு அல்லது ஒன்பது முதல் பன்னிரெண்டு வரையிலான வகுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**3. தமிழ் ஒரு பாடமாக இருத்தல்** : (1) அனைத்துப் பள்ளிகளிலும் ஒன்று முதல் பத்து வரையிலான வகுப்புகளில் தமிழ் ஒரு பாடமாக, ஒன்றாம் வகுப்பிற்கு 2006–2007ஆம் கல்வியாண்டில் இருந்தும், ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்புகளுக்கு 2007–2008ஆம் கல்வியாண்டில் இருந்தும் தொடங்கிப் படிப்படியான முறையில் கற்பிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அதைப் போன்றே பத்தாம் வகுப்பு வரையிலும் நீட்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன் நோக்கத்திற்காக, கல்வியின் மாதிரியானது, பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

பகுதி (I) .. தமிழ் (கட்டாயம்)

பகுதி (II) .. ஆங்கிலம் (கட்டாயம்)

பகுதி (III) .. கணிதம், அறிவியல், சமூக அறிவியல் முதலான) பிற பாடங்கள்

பகுதி (IV) .. தமிழ் அல்லது ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டிராத மாணவர்கள் அவர் தம் தாய்மொழியை ஒரு விருப்பப்பாடமாகக் கற்கலாம்.

**4. தகுதி வாய்ந்த அலுவலர்** : (1) மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக மாவட்டக் கல்வி அலுவலர் படிநிலைக்குக் குறையாத கல்வித் துறையின் அலுவலர் எவரையும், இந்தச் சட்டத்தின் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளையும் செயற்படுத்தும் நோக்கத்திற்காக தகுதி வாய்ந்த அலுவலராக நியமிக்கலாம் மற்றும் வெவ்வேறு பகுதிகளுக்கு வெவ்வேறு தகுதி வாய்ந்த அலுவலர்கள் நியமிக்கப்படலாம்.

(2) தகுதி வாய்ந்த அலுவலர் வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்துதலும் பணிகளைப் புரிதலும் வேண்டும்.

**5. விலக்களிப்பு** : (1) அரசானது, தாம் தக்கது எனக் கருதுகிற நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொது அல்லது தனி ஆணையின் மூலமாக, மாணவர் அல்லது மாணவர்களின் பிரிவு அல்லது வகை

எதனையும் இந்தச் சட்டத்தின் அனைத்து அல்லது ஏதேனும் வகைமுறைகளிலிருந்து பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ விலக்களிக்கலாம்.

**6. தகுதி வாய்ந்த அலுவலர் அரசுப் பணியாளராகக் கருதப்படுதல்**: பிரிவு 4இன் கீழ் அமர்த்தப்பட்ட தகுதி வாய்ந்த அலுவலர், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் 45/1860) பிரிவு 21இன் பொருளின்படி அரசுப் பணியாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

**7. பணிப்புரை வழங்குவதற்கான அரசின் அதிகாரம்** : (1) அரசானது, பொது நலனை முன்னிட்டு ஆணையின் வாயிலாக அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வு எதிலும், இந்தச் சட்டத்தின்படி தகுதி வாய்ந்த அலுவலரை விசாரணை ஒன்றைச் செய்வதற்கோ அல்லது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ பணிக்கலாம் மற்றும் தகுதி வாய்ந்த அலுவலர் தன்னால் செய்யப்பட்ட விசாரணையின் முடிவைக் குறித்தோ அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தோ வகுத்துரைக்கப்படும் கால அளவிற்குள் அரசிற்கு அறிக்கை அளித்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி தகுதி வாய்ந்த அதிகார அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டதன்பேரில், அரசானது, அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய பணிப்புரையினைப் பிறப்பித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய பணிப்புரையானது இறுதியானதாகவும் கட்டுப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

**8. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு** :

இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியோ நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் தகுதி வாய்ந்த அலுவலர், அரசு அல்லது அதன் அலுவலர்கள் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் தொடரப்படுதல் கூடாது.

**9. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்** : (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில சட்டமன்றப் பேரவையின் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத் தொடரோ அல்லது அதற்கு அடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைவற்கு முன்பு அப்பேரவை அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமானால் அல்லது அப்பேரவை அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமானால் அவ்விதி அல்லது அந்த அறிவிக்கை அல்லது அவ்வாணை அதற்குப் பின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்வுக்கேற்ப நடைமுறைக்கு வராமல் போதல் வேண்டும். எனினும், அத்தகைய மாறுதலோ, நீக்கமோ அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**10. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்** : இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின் அரசு, தமிழ்நாடு அரசு அரசிதழில் ஆணையின்படி அறிவிக்கை ஒன்றை வெளியிடுவதன் மூலம் அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையான தாகவோ, உகந்ததாகவோ தனக்குத் தோன்றுகிற அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

**வரம்புரையாக** : ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவு முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

# 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மாற்றுத் திறனுடைய நபர்களுக்கான நல வாரியச் சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 18/2007

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

## The Tamil Nadu Welfare Board for the Disabled Persons Act, 2007) (Tamil Nadu Act No.18 of 2007)

**(as on 31st October, 2023)**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2007ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 07ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொது தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு மாநிலத்தில் மாற்றுத் திறனுடைய நபர்களின் நலனுக்காக வாரியம் ஒன்றை நிறுவுவதற்கு வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஐம்பது எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்:** (1) இந்தச் சட்டம் 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மாற்றுத் திறனுடைய நபர்களுக்கான நல வாரியச் சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கை வாயிலாகக் குறிப்பிடக் கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்:** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,

(a) ‘‘வாரியம்’’ என்பது, பிரிவு 3இன்படி நிறுவப்பட்ட வாரியம் எனப் பொருள்படும்.

(b) ‘‘மாற்றுத் திறன்’’ என்பது

(i) பார்வைக் குறைபாடு
(ii) பார்வை குறைவு
(iii) செவிப்புலன் குறைபாடு
(iv) இடம் பெயரும் ஆற்றல் குறைபாடு;
(v) மன வளர்ச்சிக் குன்றிய நிலை
(vi) மனநோய்
(vii) தொழுநோய் குணமடைந்த நிலை
(viii) மூளைவாதம்
(ix) புற உலகச் சிந்தனைக் குறைபாடு
(x) பல உறுப்புக் குறைபாடுகள்

எனப் பொருள்படும்.

(c) ‘‘மாற்றுத் திறனுடைய நபர்’’ என்பது, குறைபாடு எதனாலும் நாற்பது விழுக்காடுக்குக் குறையாமல் பாதிக்கப்படுகிற ஒரு நபர் எனப் பொருள்படும்.

(d) ''நிதியம்'' என்பது, பிரிவு 6இன்படி அமைக்கப்பட்ட ஒரு நிதியம் எனப் பொருள்படும்.

(e) ''அரசு'' என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(f) ''உறுப்பினர் செயலாளர்'' என்பது வாரியத்தின் உறுப்பினர் செயலாளர் எனப் பொருள்படும்.

**3. வாரியத்தை நிறுவுதல்**: (1) அரசு, அறிவிக்கையின் வாயிலாக மாற்றுத் திறனுடைய நபர்களுக்காகப் பல்வேறு நல நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நிருவகிப்பதற்காகவும் தமிழ்நாடு மாற்றுத் திறனுடைய நபர்களுக்கான நல வாரியம்'' எனப்படும் வாரியம் ஒன்றை நிறுவலாம்.

(2) வாரியம், மேற்சொல்லப்பட்ட பெயரில் ஒரு கூட்டுருமமாக இருத்தல் வேண்டும். நிலையான தொடர்வழி உரிமையையும் பொது இலச்சினையும் பெற்றிருப்பதோடு, சொத்தினை ஈட்டுவதற்கும், வைத்து வருவதற்கும் மற்றும் தீர்வு செய்வதற்கும், ஒப்பந்தம் செய்து கொள்வதற்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் மற்றும் அதன் பெயரில் வழக்கிடலாம் அல்லது வழக்கிடப்படலாம்.

(3) வாரியம், உடற்குறைபாடு சார்ந்த செயற்களத்தில் வல்லுநர்களையும் அல்லது நிபுணர்களையும் மாற்றுத் திறனாளிகளின் உடற்குறைபாடு தொடர்புடைய அரசு சாரா அமைப்புகளையும், சங்கங்களையும், அரசையும் பிரதிநிதித்துவம் செய்கிறவகையில் அரசால் அவ்வப்போது பெயர்க் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்.

(4) வாரியத்தின் தலைவர், சமூக நலத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சராகவும், வாரியத்தின் துணைத் தலைவர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அரசச் செயலாளராகவும் இருப்பார்கள். மாற்றுத் திறனுடைய நபர்களுக்கான மாநில ஆணையர், அரசை பிரதிநிதித்துவம் செய்யும் வாரியத்தின் உறுப்பிர் செயலாளராகவும் இருப்பார்.

(5) வாரியத்தின் அனைத்து உறவினர்களையும் பெயர் குறித்து நியமித்த பின்னர், அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, வாரியத்தின் அனைத்து உறுப்பினர்களின் பெயர்களையும் வெளியிடுதல் வேண்டும்.

(6) வாரியத்தின் உறுப்பினர்களின் பதவிக் கால அளவானது வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

(7) வாரியத்தின் கூட்டங்கள் மற்றும் இந்த நோக்கத்திற்காக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் அதனுடன் இணைந்த அல்லது அதற்குத் அனைத்தையும், அரசின் ஏற்புக்குட்பட்டு, வாரியம் தானாக ஒழுங்குப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**4. வாரியத்தின் செயற்பணிகள்** : (1) கிடைக்கக் கூடிய நிதிகளுக்குட்பட்டு வாரியம்

(a) மருத்துவ சேவை உள்ளடங்கலான மாற்றுத் திறனுடைய நபர்களின் நலனுக்காக வகை செய்தல் வேண்டும்.

(b) மனவளர்ச்சி குன்றிய நபர்களைக் கவனித்துப் பராமரிக்க முன்வருகிற அரசு சாரா அமைப்புகளுக்கும் சங்கங்களுக்கும் நிதியுதவி அளித்தல் வேண்டும்.

(c) பொது இடங்கள், பணி இடங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றில் தடையில்லாச் சூழல்களுக்கு வகைசெய்தல் வேண்டும்.

(d) மாற்றுத் திறனுடைய குழந்தைகள் பள்ளிகளை அணுகும் வகையில், சிறப்புக் கல்வி தேவைப்படுவோருக்குத் தனியார் துறையில் சிறப்புப் பள்ளிகளை நிறுவுவதற்கான வசதிகளை அளித்தல் வேண்டும்.

(e) அரசு சாரா அமைப்புகளினாலும் சங்கங்களினாலும் மாற்றுத் திறனுடைய நபர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு வகை செய்தல் வேண்டும்.

(f) மாற்றுத் திறனுடைய நபர்களை வேலையில் அமர்த்துகிற வேலை தருபவர்களுக்குத் தேவையான உதவித் தொகையினை வழங்க வகை செய்தல் வேண்டும்.

(g) அரசினால் வகுத்துரைக்கப்படும் அத்தகைய பிற செயற்பணிகளைப் புரிதல் வேண்டும்.

(2) வாரியமானது, மார்ச் மாதம் முப்பத்தோராம் நாளன்று முடிவடைகின்ற முந்தைய ஆண்டினுடைய வாரியத்தின் நடவடிக்கைகளின் பேரிலான ஆண்டறிக்கையினை, ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் திங்கள் முதலாம் நாளுக்குப் பின்னர், கூடிய விரைவில் அரசுக்குப் பணிந்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட அறிக்கை ஒவ்வொன்றும், பெறப்பட்டதற்குப் பின்னர் கூடியவரையில் சட்டமன்றப் பேரவையின் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தால், அந்தக் கூட்டத் தொடரிலோ அல்லது அந்த அறிக்கை பெறப்பட்ட தேதியைத் தொடர்ந்து உடனடியாக நடைபெறும் கூட்டத் தொடரிலோ சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) வாரியம், அதன் செயற்பணிகளை ஆற்றுவதில், அதற்கு அவ்வப்போது எழுத்து வடிவில் கொடுக்கக் கூடிய காரணங்களுக்காக, அரசின் அத்தகைய பணிப்புரைகளுக்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

**5. குழுக்கள்**: (1) அரசானது, ஆணையின் மூலமாக, வாரியத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களை அமைத்துருவாக்கலாம் மற்றும் அத்தகைய குழுக்கள் அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் தலைமை வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) அக்குழுவானது அவ்வப்போது வாரியத்தினால் ஒப்படைக்கப்படக் கூடிய அத்தகைய கடமைகளைப் புரிதல் வேண்டும்.

**6. நிதியம்**: (1) “தமிழ்நாடு மாற்றுத்திறனுடைய நபர்களுக்கான நல நிதியம்” என்ற பெயரிலும் முறையிலும் நிதியம் ஒன்று அமைத்துருவாக்கப்பட்டு இருந்து வருதல் வேண்டும். கீழே குறிப்பிடப்பட்ட வருவாய் ஆதாரங்களிலிருந்து பெறப்படும் பணத் தொகைகள் அனைத்தும் அத்தகைய நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். அவையாவன.

(a) வாரியத்தின் செயற்பணிகளை நிறைவேற்றம் நோக்கங்களுக்காக அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள்.

(b) பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் மனித நேயர்களிடமிருந்தும் பெறப்பட்ட நன்கொடைகள் மூலமாகவும், பண்பாட்டு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வதன் மூலமாகவும் திரட்டப்படும் நிதிகள் மற்றும்

(c) வகுத்துரைக்கப்படக் கூடிய பிற வருவாய் ஆதாரங்கள் எவற்றிலிருந்தும் பெறப்படும் நிதிகள்.

(2) வாரியமானது, அந்த நிதியை அரசின் அறிவுறுத்தல்களின்படி ஏதேனும் ஒரு தேசியமாக்கப்பட்ட வங்கியில் வைத்து வருதல் வேண்டும். அத்தகையதொரு கணக்கானது வாரியத்தின் கையொப்பமிட அதிகாரம் அளிக்கப்பட்டவர்களுள் எவரேனும் இருவரால் கூட்டாகச் செயற்படுத்தப்படுதல் வேண்டும். அவர்களுள் ஒருவர் உறுப்பினர் செயலாளராக இருத்தல் வேண்டும்.

(3) மாற்றுத் திறனுடைய நபர்களின் நலன் தொடர்பான எதிர்பாராச் செலவினங்கள் உள்ளடங்கலான அனைத்துச் செலவினங்களும் அந்த நிதியத்திலிருந்து எதிர்கொள்ளப்படுதல் வேண்டும்.

**7. கணக்குகளும், தணிக்கைகளும்** : (1) வாரியமானது, தக்க கணக்குகளையும் பிற தொடர்பான பதிவுருக்களையும் பராமரித்து வருதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படும் படிவத்தில் ஐந்தொகை

(இருப்பு நிலைக்) குறிப்பேடு உள்ளடங்கலான ஆண்டுக்கணக்கு விவரவுரை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) வாரியத்தின் கணக்குகள், அரசால் இது குறித்து நியமிக்கப்படக் கூடிய அத்தகைய தகுதி வாய்ந்த நபரால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) தணிக்கையாளர், அனைத்து நியாயமான காலங்களிலும் வாரியத்தின் கணக்குப் புத்தகங்களையும் பிற ஆவணங்களையும் பார்வையிடுவதற்கு அணுகும் உரிமை பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் அந்தத் தணிக்கையின் நோக்கங்களுக்காகத் தமக்குத் தேவையான இருக்கக் வடிய அத்தகைய விளக்கங்களையும் தகவல்களையும் கோரிப் பெறலாம் அல்லது வாரியத்தின் உறுப்பினர் அல்லது அலுவலர் எவரையும் விசாரிக்கலாம்.

(4) தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட வாரியத்தின் கணக்குகள், அதன் மீதான தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து, இது குறித்து அரசு குறிப்பிடக்கூடிய தேதிக்கு முன்பாக ஆண்டுதோறும் அரசுக்கு மேற்குறிப்பு செய்து அனுப்புதல் வேண்டும்.

(5) வாரியமானது, தணிக்கையாளரின் அறிக்கையைப் பார்வையிட்ட பின்னர், அரசானது பிறப்பிக்கக் கருதும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

(6) தணிக்கைக்கான செலவு, நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**8. தகுதிக்கேடுகளும் நீக்கமும்**: (1) நபர் எவரும், அவர்

(a) வாரியத்தின் சம்பளம் பெறும் அலுவலராக இருப்பார் என்றால், அல்லது

(b) நொடித்த நிலையர் என தற்போது அல்லது எப்போதாவது தீர்ப்பளிக்கப்பட்டு இருப்பார் என்றால், அல்லது

(c) பித்தராகக் காணப்பட்டால் அல்லது மனச்சீர்கேடு உள்ளவர் என்றால், அல்லது

(d) ஒழுக்கக் கேட்டினை உள்ளடக்கிய குற்றச் செயல் எதற்காகவும் தற்போது அல்லது எப்போதாவது தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு இருப்பார் என்றால்,

வாரியத்தின் உறுப்பினர் ஒருவராகத் தெரிவு செய்யப்படுதலோ அல்லது உறுப்பினராகத் தொடர்ந்து இருத்தலோ கூடாது.

(2) அரசு,

(a) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட தகுதிக்கேடுகளில் எதற்கும் உட்பட்டுள்ள அல்லது உள்ளாகியிருக்கிற உறுப்பினர் எவரையுமோ அல்லது

(b) தொடர்ந்தாற்போல் மூன்றிற்கு மேற்பட்ட வாரியத்தின் கூட்டங்களுக்கு வாரியத்தின் அனுமதியில்லாமல் வாராதிருக்கிற உறுப்பினர் எவரையுமோ அல்லது

(c) தன் பதவியைத் தவறாகப் பயன்படுத்தி இருக்கிற உறுப்பினர் எவரையுமோ, பதவியிலிருந்து நீக்கலாம்.

**9. உறுப்பினர்களின் பதவி விலகல்** : வாரியத்தின் உறுப்பினர் எவரும், எந்த நேரத்திலும், அரசுக்கு முகவரியிட்டு தன் கைப்பட எழுதி தன் பதவியை விட்டு விலகலாம். அரசால் அப்பதவி விலகல் ஏற்றுக் கொள்ளப்பட்டதன்பேரில், அவரது பதவி காலியாகுதல் வேண்டும்.

**10. காலியிடங்களை நிரப்புதல்** : இறப்பு, விலகல், தகுதிக்கேடு அல்லது நீக்கம் அல்லது மற்றுபடியான காரணத்தினால் ஏற்படுகின்ற காலியிடம் எதையும் பொறுத்த நிகழ்வில், வாரியமானது,

அவ்வாறு ஏற்பட்ட காலியிடத்தை அரசுக்கு உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும் மற்றும் காலியிடம் எற்பட்ட தொண்ணூறு நாட்களுக்கு மிகாமல் அவ்விடம் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் அக்காலியிடத்தை அவர் நியமிக்கப்பட்டாரோ, அவர் பதவி வகிக்கும் அக்கால அளவு வரையில் புதிதாக நியமிக்கப்பட்டவர் பதவவி வகித்தல் வேண்டும்.

வரம்புரை : அத்தகைய காலியிடம் உள்ளபோது தொடர்ந்து இருக்கும் உறுப்பினர்கள், காலியிடம் எதுவும் ஏற்படாதது போன்றே செயல்படலாம்.

**11. காலியிடங்களை நடவடிக்கைகளைச் செல்லத்தகாதது ஆக்காது** : வாரியத்தின் செயல் அல்லது நடவடிக்கைகள், அதனுடைய உறுப்பினர் பதவியில் காலியிடம் இருக்கிறது என்பதான அல்லது அதனுடைய அமைப்பில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்பதான காரணத்தால் மட்டுமே மறுத்து வாதிடப்படுதலோ அல்லது செல்லத்தகாதது ஆக்கப்படுதலோ கூடாது.

**12. வாரியத்தின் செயற்பாட்டில் விசாரணை** : (1) அரசானது, எந்த நேரத்திலும் வாரியத்தின் பணியினைப் புலன் விசாரணை செய்வதற்கோ அல்லது விசாரணை செய்வதற்கோ நபர் எவரையும் அமர்த்தலாம் மற்றும் அதன் பொருட்டு அரசுக்கு அறிக்கையை சமர்ப்பிக்கலாம்.

(2) வாரியமானது, அவ்வாறு அமர்த்தப்பட்ட நபருக்கு உரியவாறு புலன் விசாரணையை அல்லது விசாரணையை உரிய முறையில் செய்வதற்காக அனைத்து வசதிகையும் செய்து கொடுத்தல் வேண்டும் மற்றும் அவர் கோரும் வாரியத்தின் வசம் உள்ள அத்தகைய ஆவணங்கள், கணக்குகள் அல்லது தகவலை அவருக்கு அளித்தல் வேண்டும்.

**13. வாரியத்தைக் கலைத்து மாற்றியமைத்தல்** : (1) அரசானது, பிரிவு உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட அறிக்கையை பரிசீலனை செய்ததன் பேரிலோ அல்லது மற்றபடியோ,

(a) வாரியம், அதன் அலுவற்பணிகளை ஆற்றுவதில் இடைவிடாது தவறிழைக்கிறது அல்லது அதன் அதிகார வரம்பை மீறுகிறது அல்லது அதன் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துகிறது என்று கருதினாலோ

அரசு, அறிவிக்கை வாரியத்தை கலைத்து மாற்றியமைக்கலாம் மற்றும் அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாத கால அளவிற்குள் வகுத்துரைக்கப்பட்ட முறையில் மாற்றிய மைக்கலாம். கலைத்து மாற்றியமைப்பதற்கான கால அளவானது, போதிய காரணங்களுக்காக அது போன்ற அறிவிக்கை ஒன்றால் ஆறு மாதங்களுக்கு மிகாது நீட்டிக்கப்படலாம்.

**வரம்புரை** : இந்த உட்பிரிவின்படியான அறிவிக்கை ஒன்றை வெளியிடும்முன், அரசு, அது ஏன் கலைத்து மாற்றியமைக்கப்படக் கூடாது என்பதற்கான காரணம் காட்டுமாறு நியாயமான வாய்ப்பு ஒன்றினை வாரியத்துக்கு வழங்குதல் வேண்டும் மற்றும் வாரியத்தின் விளக்கங்கள் மறுப்புரைகள் எவையேனுமிருப்பின் அவற்றைச் சமர்ப்பித்தால் அவற்றைப் பரிசீலனை செய்தல் வேண்டும்.

(2) வாரியம் கலைக்கப்பட்ட பின்னர், அது மறுபடி அமைத்துருவாக்கப்படும் வரையில், இச்சட்டத்தின்படியான வாரியத்தின் அலுவல் பணிகள் அரசாலோ அல்லது இந்நோக்கத்திற்காக அறிவிக்கையின் வாயிலாக அரசால் அமர்த்தப்படும் அலுவலரால் அல்லது அலுவலர்களால் ஆற்றப்படுதல் வேண்டும்.

(3) வாரியமானது கலைத்து மாற்றியமைக்கப்படும்போது, பின்வரும் விளைவுகள் நடைமுறைக்கு வரும். அவையாவன.

(a) வாரியத்தின் உறுப்பினர்கள் அனைவரும் உட்பிரிவு (1)இன்படி அறிவிக்கையானது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அவர்களது பதவியை விட்டு விலகுதல் வேண்டும்.

(b) வாரியத்தால் ஆற்றப்படலாகும் அனைத்துப் பணிகளும், கலைத்து மாற்றியமைக்கப்பட்ட காலத்தில் அரசினாலோ அல்லது உட்பிரிவு (2)இன்படி இந்த நோக்கத்திற்காக அமர்த்தப்பட்ட அலுவலராலோ அல்லது அலுவலர்களாலோ ஆற்றப்படுதல் வேண்டும் மற்றும்

(c) வாரியம் கலைத்து மாற்றியமைக்கப்பட்ட காலத்தில் அதனிடம் உள்ள நிதிகள் மற்றும் பிற சொத்துக்கள் அனைத்தும் அரசிடம் வந்தடைதல் வேண்டும் மற்றும் வாரியம் மறுபடி திருத்தி அமைக்கப்பட்டதன்பேரில், அத்தகைய நிதிகளும் சொத்துக்களும் மறுபடியும் வாரியத்திடம் சென்றடைய வேண்டும்.

**14. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு** : (1) இச்சட்டத்தின்படியோ, அல்லது அதன்கீழ்ச் செயப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியோ நல்லெண்ணத்தில் செய்யப்படும் அல்லது செய்யக் கருதப்படும் ஏதொன்றிற்காகவும், அரசு அல்லது வாரியம் அல்லது தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர் செயலாளர் அல்லது வாரியம் அல்லது குழுவின் உறுப்பினர் எவருக்கும் அல்லது வாரியத்தின் பிற அலுவலர்கள் எவருக்கும், எதிராகவோ உரிமை வழக்கு குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் தொடரப்படுதல் கூடாது.

**15. இச்சட்டமானது பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருக்க வேண்டுமேயன்றி அதனைக் குறைவுபடுத்துதல் கூடாது** : இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளானவை மாற்றுத் திறனுடைய நபர்களின் நலப்பயனுக்காக இயற்றப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதிகள், ஆணைகள் எதற்குமோ அல்லது அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் எவற்றுக்குமோ கூடுதலாக இருக்க வேண்டுமேயன்றி அதனைக் குறைவுபடுத்துல் கூடாது.

**16. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்**: (1) அரசு, இச்சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தை யுமோ அல்லது அவற்றுள் ஏதொன்றையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இச்சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று கூறப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இச்சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று கூறப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு வைக்கப்பட்ட அல்லது அடுத்த கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு சட்டமன்றப் பேரவை அத்தகைய விதி, ஆணை அல்லது அறிவிக்கையில் மாற்றம் எதையும் செய்யுமானால் அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படக் கூடாது என்று அல்லது பிறப்பிக்கக் கூடாது என்று சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அதற்குப் பின் அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை அவ்வாறு மாற்றப்பட்ட வடிவில்தான் நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்வுக்கேற்ப அது செல்திறன் பெறாது போதல் வேண்டும். ஆயினும் அத்தகைய மாற்றமோ அல்லது செல்திறன் பெறாது போவதோ அந்த விதியின்படி அல்லது ஆணையின்படி அல்லது அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**17. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்** : இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, சூழ்நிலைக்கேற்ப ஆணை மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத, அந்த இடர்ப்பாட்டை நீக்கும் நோக்கத்திற்குத் தேவையானதென அல்லது உகந்ததெனத் தோன்றும் எதையும் செய்யலாம்.

**வரம்புரை**: அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் கால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

## தேர்தல் ஆணையர்கள் நியமன வழக்கு தலைமை நீதிபதி விலகல்

தலைமை தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்களை நியமிக்கும் குழுவில் பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இடம் பெற்றிருந்தனர். இந்நிலையில், கடந்த 2023 டிசம்பரில் மத்திய அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தத்தில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பதிலாக, பிரதமர் பரிந்துரைக்கும் மத்திய அமைச்சர் குழுவில் இடம் பெறுவார் என்ற அம்சம் சேர்க்கப்பட்டது.

புதிய சட்டத்தின்படி தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டதை ரத்து செய்யக் கோரி, ஜெயா தாக்குர் உள்ளிட்டோர் உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். அந்த மனுக்களை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூரியகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்தது. இந்த வழக்கை விசாரித்தால் ஆதாய முரண் குற்றச்சாட்டு எழுமென்று குறிப்பிட்டு, விசாரணையில் இருந்து தலைமை நீதிபதி விலகினார். மேலும் எதிர்காலத்தில் தலைமை நீதிபதி அல்லாத பிற நீதிபதிகள் அடங்கிய அமர்வில் இந்த மனுவை பட்டியலிடவும் உத்தரவிட்டார்.

**நன்றி: தினத்தந்தி 21.3.2026**

## இளம் வழக்கறிஞர்களுக்காக சென்னையில் நிரந்தர பயிற்சியகம் அமைக்க வேண்டும்

### ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா யோசனை

இளம் வழக்கறிஞர்களுக்காக சென்னையில் நிரந்தர வழக்கறிஞர்கள் பயிற்சியகம் அமைக்க வேண்டும் என ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா தெரிவித்தார்.

ராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி யாக பதவி வகித்த எம்.எம்.ஸ்ரீவஸ்தவா, கடந்தாண்டு ஜூலை 21ஆம் தேதி, சென்னை உயர்நீதிமன்றத்தின் 54வது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றார். இந்நிலையில் அவர் நேற்றுடன் பணி ஓய்வு பெற்ற நிலையில், அவருக்கு சென்னை உயர்நீதிமன்றம் சார்பில் பிரிவு உபச்சார விழா உயர்நீதிமன்ற கலையரங்கில் மாலையில் நடைபெற்றது. இவ்விழாவில் பேசிய அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், சரியான நோக்கத்துடன் தொடரப்பட்ட பொதுநல வழக்குகளை கண்டறிந்து அவற்றை விசாரணைக்கு எடுத்து, தகுந்த உத்தரவுகளை பிறப்பித்ததன் மூலம் வழக்கு தொடர்ந்தவர்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை தலைமை நீதிபதி பூர்த்தி செய்துள்ளார். அதேபோல உள்நோக்கத்துடன் தொடரப்பட்ட பொதுநல வழக்குகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அவற்றை அபராதத்துடன் தள்ளுபடி செய்தவர் தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா, வழக்கறிஞர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் மேலாக தனது நீதிபரிபாலன பணியை வெகு சிறப்பாக நிறைவு செய்துள்ளார் என பாராட்டினார்.

பின்னர் ஏற்புரையாற்றிய தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா இந்திய நீதித்துறை வரலாற்றில் 150 ஆண்டுகள் பழமையான, பாரம்பரியமிக்க சென்னை உயர்நீதிமன்றங்களைக் காட்டிலும் சென்னை உயர்நீதிமன்றத்தில்தான் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் வழக்கறிஞர்கள் உள்ளனர். அவர் களும் நீதித்துறைக்காக குறிப்பிடத்தக்க அளவில் பணியாற்றி வருகின்றனர்.

இளம் வழக்கறிஞர்களுக்காக சென்னையில் நிரந்தர வழக்கறிஞர்கள் பயிற்சியகம் அமைக்க வேண்டும். எனது நீதிபரிபாலன பணி சிறக்க எனக்கு உறுதுணையாக இருந்த எனது மனைவி மற்றும் மகள்களின் அர்ப்பணிப்பும் அளப்பெரியது என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார். இந்நிகழ்வில் சென்னை உயர்நீதிமன்றநீதிபதிகள், மத்திய, மாநில அரசு வழக்கறிஞர்கள், நீதித் துறை அதிகாரிகள், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தினர், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் நிர்வாகிகள், நீதித் துறை ஊழியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நன்றி: இந்து தமிழ் 6.3.2026**

# தேர்தல்கள் தொடர்புடைய குற்றங்களுக்குரியது

**வழக்கறிஞர் வெ. முருகன், எம்.ஏ.,பி.எல்.**
**குற்றவியல் சட்டங்கள்**

**171அ. ''வேட்பாளர்'' ''தேர்தல் உரிமை'', பொருள் வரையறுக்கப்பட்டது**. இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக.

[2](அ) ''வேட்பாளர்'' என்பது யாதொரு தேர்தலில் ஒரு வேட்பாளராக நியமிக்கப்பட்ட ஒரு நபர், என்று பொருள்படும்.

(ஆ) ''தேர்தல் உரிமை'' என்பது, ஒரு தேர்தலில் ஒரு நபரின் உரிமையான நிற்பது அல்லது நிற்காமல் இருப்பது அல்லது ஒரு வேட்பாளராக இருப்பதிலிருந்து விலகிக் கொள்வது அல்லது வாக்களிப்பது அல்லது வாக்களிப்பதிலிருந்து தடைப்படுத்திக் கொள்வது என்று பொருள்படும்.

குறிப்பு : தேர்தல் உரிமை – Electroral Right

**171ஆ. கையூட்டு** – (1) யாதொரு நபருக்கு

(i) அவரைத் தூண்டும் நோக்கத்திற்கு அல்லது யாதொரு வேறுநபருக்கு யாதொரு தேர்தல் உரிமையைப் பயன்படுத்த ஒரு வேறு ஊதியத்தை அல்லது யாதொரு நபருக்கு அத்தகைய உரிமையைப் பயன்படத்தியதற்கு ஊக்க நன்கொடையை அளிக்கும்; அல்லது

(ii) யாதொரு அத்தகைய உரிமையைப் பயன்படுத்த ஒரு, ஊக்கப் பரிசாக யாதொரு வேறு ஊதியத்தைத் தனக்காகவோ அல்லது யாதொரு வேறு நபருக்காக அல்லது அத்தகைய யாதொரு உரிமையைப் பயன்படுத்த யாதொரு வேறு நபரைத் தூண்ட அல்லது தூண்டுவதற்கு முயலும்;

நபர் எவரும் கையூட்டுக் குற்றத்தைச் செய்தவராகிறார்.

ஆனால் இந்தப் பிரிவின் ஒரு பொதுநலக் கொள்கையை விளம்புவது அல்லது பொதுநலக் கொள்கையை விளம்புவது அல்லது பொதுநலச் செயலுக்குரிய உறுதி ஒரு குற்றமாகாது.

(2) ஒரு வேறு ஊதியத்தைக் கொடுக்க முன்மொழிகிற, அல்லது கொடுக்க உடன்படுகிற அல்லது முயன்று பெற முன்மொழிகிற, அல்லது முயலுகிற ஒரு நபர் ஒரு வேறு ஊதியத்தைக் கொடுப்பதாகக் கருத வேண்டும்.

(3) ஒரு வேறு ஊதியத்தைப் பெறுகிற, அல்லது ஒப்புக் கொள்ள உடன்படுகிற அல்லது பெறுவதற்கு முயலுகிற ஒரு நபர், ஒரு வேறு ஊதியத்தை ஒப்புக் கொண்டதாகக் கருத வேண்டும் மற்றும் தான் செய்ய எண்ணங்கொள்ளாததைச் செய்வதற்கு ஓர் ஊக்கமாக அல்லது தான் செய்யாததைச் செய்வதற்கு ஓர் ஊக்க நன்கொடையாக ஒரு வேறு ஊதியத்தைப் பெறுகிற ஒரு நபர், ஒரு வேறு ஊதியத்தை ஓர் ஊக்க நன்கொடையாக ஒப்புக் கொண்டதாகக் கருத வேண்டும்.

குறிப்பு: பொதுநலக் கொள்கை – Public policy, கையூட்டு – bribery; ஊக்க நன்கொடை – gratification;

**171இ. தேர்தல்களில் தகாத முறையில் செல்வாக்கைப் பயன்படுத்துதல்** : (1) யாதொரு தேர்தல்

1. 1920ஆம் ஆண்டு 39ஆம் சட்டம் பிரிவு 2இன் வழி பிரிவுகள் 171அ முதல் 171ஐ வரைக் கொண்ட அத்தியாயம் – IXஅ செருகப்பட்டது.

2. 1975ஆம் ஆண்டு 40ஆம் சட்டம் பிரிவு 9இன் வழி 6–8–1975 அன்று முதல் நடைமுறைக்கு வர இணைக்கப்பட்டது.

உரிமையைத் தடையின்றி செயல்படுத்துவதில் தானாகவே தலையிடுகிற அல்லது தலையிட முயற்சிக்கிற எவரும், ஒரு தேர்தலில் தகாத முறையில் செல்வாக்கைப் பயன்படுத்துகிற குற்றத்தைச் செய்தவர் ஆவார்.

(2) உட்பிரிவு (1)இன் பகுதிகளின் பொதுத் தன்மைக்கு குந்தகமின்றி.

(அ) யாதொரு வேட்பாளருக்கு அல்லது வாக்காளருக்கு அல்லது ஒரு வாக்களார் அல்லது வேட்பாளர் அக்கறை கொண்ட யாதொரு வகையான காயத்தை உண்டு பண்ணுவதாக அச்சுறுத்தல் அல்லது.

(ஆ) ஒரு வேட்பாளரை அல்லது வாக்காளரை அவரோ அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள நபரோ தெய்வக் கோபத்திற்கு அல்லது ஆன்மீகக் கண்டனத்திற்கு ஆளாவார்கள் என்று நம்பும்படி தூண்டுகிற அல்லது தூண்ட முயலும்.

நபர் எவரும் உட்பிரிவு (1)இன் கருத்துப்படி அத்தகைய வேட்பாளர் அல்லது வாக்காளரின் தேர்தல் உரிமையைத் தடையின்றிப் பயன்படுத்துவதில் தலையிடுவதாகக் கருதப்படும்.

(3) ஒரு தேர்தல் உரிமையில் தலையிட விரும்பாது ஒரு சட்ட உரிமையைப் பயன்படுத்த விரும்புவது அல்லது பொது செயலுக்குரிய ஒரு உறுதிமொழி அல்லது பொது கொள்கைக்குரிய ஒரு விளம்புகை இந்தப் பிரிவின் கருத்துப்படியான தலையீடாகக் கருதப்பட மாட்டாது.

**171ஈ. தேர்தலில் ஆள்நடமாட்டம்** : உயிரோடிக்கிற அல்லது இறந்த யாதொரு நபரின் பெயரில், அல்லது கற்பனைப் பெயரில், ஒரு தேர்தலில் வாக்களிக்கிற அல்லது வாக்களிக்கிறத் தாளுக்கு விண்ணப்பிக்கிற நபர் எவரும், அல்லது அவ்வாறு அத்தகைய தேர்தலில் ஒரு முறை வாக்களித்து அதே தேர்தலில் அவர் பெயருக்கு மீண்டும் ஒரு வாக்குச் சீட்டு விண்ணப்பிக்கிற நபர் எவரும் மற்றும் யாதொரு அத்தகைய வழியில் யாதொரு நபரை வாக்களிக்கத் தூண்டுகிற, முயன்று பெறுகிற அல்லது முயன்று பெற முயற்சிக்கிற நபர், எவரும், ஒரு தேர்தலில் ஆள்மாறாட்டக் குற்றத்தைச் செய்தவர் ஆவார்.

[1][ஆனால் தற்பொழுது நடைமுறையிலிருக்கும் சட்டத்தின் கீழ் ஒரு வாக்காளருக்கு பதிலியாக வாக்களிக்க அங்கீகரிக்கப்பட்ட ஒரு நபருக்கு அத்தகைய வாக்காளரின் பதிலியாக வாக்களிக்கும்போது இந்தப் பிரிவு பொருந்தாது]

**171உ. கையூட்டுக்குத் தண்டனை**: கையூட்டைக் கொடுத்த குற்றத்தைச் செய்த எவரும், ஓராண்டு வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கு இரண்டு வகையாக விவரிக்கப்பட்டுள்ளச் சிறைத் தண்டனையில் ஒருவகை சிறைத் தண்டனையால் அல்லது தண்டப் பணத்தால் அல்லது இந்த இரண்டு முறையாலும் தண்டிக்கப்பட வேண்டும்.

ஆனால் விருந்தளிப்பதன் வழி கையூட்டு கொடுத்ததற்குத் தண்டப் பணத்தால் மட்டும் தண்டிக்கப்பட வேண்டும்.

விளக்கம் விருந்தளித்தல் என்பது ஊக்க நன்கொடை, உணவு, குடிக்கும், பொருள், கேளிக்கை அல்லது தேவையை உள்ளடக்கியதாக இருத்தல் என்பது பொருள்படும்.

குறிப்பு விருந்தளித்தல் - treating

**171ஊ. தேர்தலில் ஆள்மாறாட்டத்திற்கு அல்லது தகாத முறையில் செல்வாக்கைப் பயன்படுத்தியதற்குத் தண்டனை**: தேர்தலில் ஆள்மாறாட்டம் அல்லது தகாத முறையில்

1. 2003ஆம் ஆண்டு 24ஆம் சட்டம் பிரிவு 5இன் வழி 22.9.2003 முதல் நடைமுறைக்கு வர செருகப்பட்டது.

செல்வாக்கைப் பயன்படுத்திய குற்றங்களைச் செய்த நபர் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கு இரண்டு வகையாக விவரிக்கப்பட்டுள்ளச் சிறைத் தண்டனையில் ஒரு வகை சிறைத் தண்டனையால், அல்லது தண்டப்பணத் தண்டனையால், அல்லது இந்த இரண்டு முறையாலும் தண்டிக்கப்பட வேண்டும்.

**171எ. தேர்தல் தொடர்பாகத் தவறான அறிவிக்கையைத் தருதல்**: ஒரு தேர்தலின் முடிவைப் பாதிக்க எண்ணங்கொண்டு, யாதொரு வேட்பாளரின் குணநலனைப் பற்றி, அல்லது நடத்தையைப் பற்றி, தான் தவறானது என்று நம்பும், அல்லது தெரிந்திருக்கிற அல்லது உண்மை என்று நம்பாதிருக்கிற, மற்றும் தவறாக இருக்கிற ஓர் உண்மையான அறிவிக்கையாக யாதொரு அறிவிக்கையை வெளியிடுகிற, அல்லது உருவாக்குகிற எவரும், தண்டப்பணத் தண்டனையால் தண்டிக்கப்பட வேண்டும்.

குறிப்பு: அறிவிக்கை - statement

**171ஏ. தேர்தல் தொடர்பாகச் சட்டத்திற்கு முரணாகச் செலுத்துதல்**: ஒரு வேட்பாளரின் எழுத்து மலமான பொது அல்லது சிறப்பு செயலுரிமையின்றி, அத்தகைய வேட்பாளர் தேர்ந்தெடுக்கப் படுவதை ஆதரிப்பதற்காக, அல்லது அதை முயன்று பெறும் நோக்கத்திற்காக பொதுக் கூட்டம் எதனையும் நடத்துவதற்கு அல்லது வேறு ஏதேனுமொரு விளம்பரம், சுற்றறிக்கை அல்லது வெளியீடு, அல்லது எவ்வகையிலேனும் யாதொரு வேறு வடிவில் செலவுகள் செய்கிற, அல்லது அதற்குச் செயலுரிமை அளிக்கிற எவரும், ஐந்நூறு ரூபாய் வரை நீடிக்கக் கூடிய தண்டப் பணத் தண்டனையால் தண்டிக்கப்பட வேண்டும்.

ஆனால், செயலுரிமையை பெறாமல் பத்து ரூபாய்க்கு மேற்படாத ஒரு தொகையைச் செலவழித்து விட்டு, அத்தகைய செலவு செய்யப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள், அந்த வேட்பாளரின் அனுமதியை எழுத்து மூலம் பெறுவாரானால், அந்த வேட்பாளரின் செயலுரிமையுடன் அத்தகைய செலவுகளைச் செய்திருப்பதாகக் கொள்ள வேண்டும்.

குறிப்பு: செலுத்துதல் – payment

**171ஐ. தேர்தல் கணக்குகளை வைத்திருக்கத் தவறுதல்:** தற்போது நடைமுறையிலுள்ள யாதொரு சட்டத்தின் அல்லது சட்டத்தின் நடைமுறைத் திறத்தைக் கொண்ட யாதொரு விதிவழி ஒரு தேர்தல் தொடர்பில் அல்லது தேர்தலில் ஏற்பட்ட செலவுக் கணக்கை வைத்திருக்கத் தவறிய எவரும், ஐந்நூறு ரூபாய் வரை நீடிக்கக் கூடிய தண்டப் பணத் தண்டனையால் தண்டிக்கப்பட வேண்டும்.

---

## தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் புதிய ஆணையர்கள் பதவியேற்பு

தமிழ்நாடு தகவல் ஆணையத்துக்கு இரு புதிய மாநில தகவல் ஆணையர்கள் பதவியேற்றனர். இவர்களுக்க ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 (மத்திய சட்டம் 22/2005) பிரிவு 15-இன் துணைப்பிரிவு (3)ல் வழுங்கப்பட் அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஆளுநர் ஆர்.என்.ரவி ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி அதுல்ய மிஸ்ரா, ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி அபய்குமார் சிங் ஆகியோரை தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மாநில தகவல் ஆணையர்களாக நியமித்துள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் மார்ச் 6ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் அதுல்ய மிஸ்ரா, அபய்கு மார் சிங் ஆகியோர் மாநில தகவல் ஆணையர்களாக ஆளுநர் ஆர்.என்.ரவி முன்னிலையில் பதவி ஏற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியில், தமிழ்நாடு தகவல் ஆணைய மாநில தலைமை தகவல் ஆணையர் ஷகீல் அக்தர், மனிதவள மேலாண்மைத் துறை அரசு முதன்மைச் செயலர் சி. சமயமூர்த்தி, ஆளுநரின் முதன்மைச் செயலர் ஆர்.கிர்லோஷ்குமார், மாநில தகவல் ஆணையர்கள் பங்கேற்றனர்.

**நன்றி: தினமணி 7.3.2026**

THINK AHEAD. STAY AHEAD.

# Bharath UNIVERSITY

30 YEARS OF EXCELLENCE

RATING AA+

# பாரத் பல்கலைக்கழகம்



■ B.TECH

AERONAUTICAL ENGINEERING
AUTOMOBILE ENGINEERING
BIO-PROCESS ENGINEERING
BIO-INFORMATICS
BIO-MEDICAL ENGINEERING
CHEMICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
COMPUTER SOFTWARE ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
ELECTRONICS AND CONTROL ENGINEERING
ELECTRONICS AND INSTRUMENTATION ENGG.
ELECTRONICS AND TELECOM ENGINEERING
FOOD PROCESS ENGINEERING
GENETICS ENGINEERING
INDUSTRIAL BIO-TECHNOLOGY
INFORMATION TECHNOLOGY
INSTRUMENTATION AND CONTROL ENGG.
MECHANICAL ENGINEERING
MECHATRONICS
NANO TECHNOLOGY
PRODUCTION TECHNOLOGY

■ B.ARCH Eligibility : As per Council of Architecture norms

■ M.TECH

[For Program details, please visit: www.bharathuniv.ac.in ]

EVENING PROGRAMME : B.TECH & M.TECH
MECHANICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING

B.TECH LATERAL ENTRY ALL PROGRAMME
Eligibility : Diploma / B.Sc.

M.S. BY RESEARCH AND Ph.D.
All Disciplines Full time and Part time

INTEGRATED PROGRAMME
B.TECH + MBA - 5 Years and B.TECH + M.TECH - 5 Years

■ MBA
[ Full time and Part time ]

■ MCA

■ HOTEL MANAGEMENT & CATERING
Courses : Diploma, B.Sc., & MBA

PLACEMENT 100%

1st among the participants from 125 Countries in International competition on Robotics

Job Placements : 100% with the highest salary package of ₹10 L.P.A

Collaborations with R&D Institutions and Industries like IBM, Nokia, CISCO, SAP, Etc.,

Internationally acclaimed curriculum in tune with global trends.

Scholarships worth ₹12.00 crores to the meritorius students

27 Centers of excellence to promote research and industry aided / driven projects

**SCHOLARSHIP** (TUITION FEES GRANT) ■ **100%**-State Toppers of all Boards ■ **50%**-School toppers, participated in National Level Sports Competition / Event ■ **30%**-Students having participated in State Level Sports Competition / Event ■ **35%**-Students securing 90% above Marks in the Board examinations ■ **25%**- "SARVA SIKSHA" Scheme I Scheduled Caste / Scheduled Tribe candidate I Parent being an Ex-servicemen I Physically Handicapped candidate I First Graduate candidate

HOW TO APPLY: Application forms can be obtained: In person or by sending a Demand Draft for ₹ 750/- drawn in favor of "Bharath University", payable at Chennai, to the Dean-Admission, Bharath University. ■ Application forms can also be downloaded from our website and filled in forms should be sent to the University address along with DD of ₹ 750/-. Eligibility : As per UGC/AICTE norms.

BHARATH UNIVERSITY, 173, Agharam Road, Selaiyur Tambaram, Chennai 600 073. Ph 044-22290247

Corp. Off: 1, First Main Road, Kasturibai Nagar, Adyar, Chennai 600 020. Ph 044-42115251 / 91-98410 64199

Apply online : www.bharathuniv.ac.in

ADMISSION HELPLINE
1800-419-1441

Check us out on YouTube www.youtube.com/thebharathuniversity

BY REGISTRAR

**Posted at Egmore RMS. Partrika Channel Registered News Magazine Posted on 3rd to 9th of April 2026**
**SATTAKADIR - Tamil Law Journal /Monthly April 2026 / Publication First Week of Every month.**
**Registration of News Papers for India, Reg. No. 62767/92**
**Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026**




உலகளவில் நடைபெற்ற இந்தியா கணினி மற்றும் தொழில்நுட்ப மாநாட்டில் இந்தியா–அமெரிக்கா சிறுதொழில் சேவை நிறுவனங்களின் சார்பில் உலக பொருளாதார வளர்ச்சிக்கு பாடுபட்டு வரும் உலகத் தமிழர் பொருளாதார கழக தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் அவர்களுக்கு மகாராஷ்டிர மாநில அமைச்சர் திருமதி மேக்னா அவர்கள் உலக சாதனையாளர் விருதினை வழங்கி சிறப்பித்தார்.



உலக கணினி மற்றும் தொழில்நுட்ப மாநாட்டில் அமெரிக்கா மேரிலேண்ட் மான் கோ கவுண்டி, தலைமை அதிகாரி, திரு.மார்க் எல்ரிச் அவர்கள், சட்டக்கதிர் ஆசிரியர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் மற்றும் மேரிலேண்ட் தொழில் அதிபர் திரு. ஹென்றி, தெலுங்கானா மாநில தொழில் அதிபர் திரு.சுரேஷ் காந்தி.




உலகளவில் நடைபெற்ற இந்தியா கணினி மற்றும் தொழில்நுட்ப மாநாட்டில் இந்தியா–அமெரிக்கா சிறுதொழில் சேவை நிறுவனங்களின் சார்பில் உலக பொருளாதார வளர்ச்சிக்கு பாடுபட்டு வரும் தலைசிறந்தவர்களுக்கு உலக சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. முக்கிய பிரமுகர்கள், விருதாளர்கள், நிறுவனர்கள், தலைவர்கள் கலந்து கொண்டனர்.



உலகம் முழுவதும் தமிழர்கள் அதிகமாக வாழும் தென் ஆப்பிரிக்கா டர்பன், மொரிஷியஸ் ரீ யூனியன் சிசெல்ஸ், பினாங்கு, ரங்கூன் போன்ற நகரங்களிலிருந்து சென்னைக்கு நேரடி விமான சேவை தொடங்க திரு.வில்சன், நாடாளுமன்ற உறுப்பினரிடம் வேண்டுகோள் கடிதம் வழங்கி இதனை விமான போக்குவரத்து அமைச்சரிடம் வழங்குமாறு உலகத் தமிழர் பொருளாதார கழகத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் கேட்டுக் கொண்டார். உடன் அரசு வழக்கறிஞர் திரு.புருஷோத்தமன் அவர்கள்



டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத், வழக்கறிஞர், ஆசிரியர் சட்டக்கதிர் அவர்கள் உச்ச நீதிமன்ற வளாகத்தில் மூத்த வழக்கறிஞர் திரு.ஆர்.விடுதலை அவர்கள் அலுவலகத்திற்கு (Chamber) சென்று அங்கு திருமதி இந்திரா மற்றும் திரு.ஜெகதீஸ்வரன், உச்சநீதிமன்ற பதிவு பெற்ற வழக்கறிஞர்களை சந்தித்து உரையாடினார். உடன் திரு.புருஷோத்தமன், அரசு வழக்கறிஞர் மற்றும் திருமதி செல்வராணி, உச்சநீதிமன்ற வழக்கறிஞர் ஆகியோர் உடனிருந்தனர்.

On behalf of SATTAKADIR, Published at 3/2, Swathiram Towers, Jupiter Campus,
3, Durgabai Deshmukh Road, R.A. Puram, Chennai - 600 028. Printed by I. Stephen,
Printed at Canaan Press Pvt. Ltd., 62/1, Peters Road, Royapettah, Chennai - 600 014.
**Editor : Dr. V.R.S. Sampath**